
# இலங்கை விகடன்

ඉලංගය් විකඩන්

*Ilangai Vikadan*



விலை : 25/- சிரீ : 7

## எப்படியும் வாழ்வதை இசை தடுக்கவேண்டும்

~ நித்தியஸ்ரீ

19.12.2003

பக்.39



காவடி இல்லத்தின் தெய்வீக மணங்கமழும் உன்னத படைப்புகள்...
வாசனை மிகு சுகந்தம் குங்குமம்
(இயற்கை அழகு மஞ்சள் கலந்தது பக்க விளைவுகளற்றது)
சுகந்தம் திடீர் சாம்பிராணி
(சிரட்டை தேவைப்படாது)
சுகந்தம் வாசனை சாம்பிராணித்தூள்
நின்று நிலைக்கும் ஜோதி மயம்
காவடி மார்க் கற்பூரம்
SATSANG
Viji
PADMA
தரமான இந்திய
இறக்குமதி பத்திகள்
இப்போது இலங்கையெங்கும்
மணம்பரப்புகின்றன!
ஏக விநியோகஸ்தர்
பிரபா டிரேடிங் கம்பனி
31, கபோஸ் லேன், கொழும்பு 11.
தொ.பே. 2329426, 2422750
சந்தைப்படுத்துவோர்
P & A MARKETING SERVICES
Colombo-6 Srilanka
Tele phone - 074-515975

# வெள்ளவத்தையில்

அழகிய நவீன சொகுசு (Modern Luxury)
தொடர்மாடி வீடுகள்

# Roma Residencies

Fully Air Conditioned Apartments

**இரண்டு அறை வீடுகள் 33 லட்சம்**

**மூன்று அறை வீடுகள் 48 லட்சம்**

With Following Features

- SEPARATE MARKED CAR PARK
- IMPORTED FLOOR TILES, FOR ENTIRE FLOOR
- PANTRY CUPBOARDS
- FULLY AIR CONDITION
- DISH ANTENNA FROM JAPAN
- SRI LANKA TELECOM CONNECTION
- LIFT (ELEVATOR) MADE IN JAPAN
- 24 HOURS SECURITY
- STAND-BY GENERATOR
- SHOOTS IN EVERY FLOOR FOR GARBAGE
- GYMNASIUM
- ROOF GARDEN & MORE
- CEILING FANS

Site:-

## ROMA RESIDENCIES

91/4, Hampden Lane, Wellawatte.

Booking Office :_

## Roma Property Developers (Pvt) Ltd.

**83, 37th Lane, Wellawatte, Colombo - 06 Phone 2587628**

மஸ்கெலியா மணக்கிறது 23

மாணவர்களுக்கு பாரிசவாதம்? 31

வன்னியில் வன்னிடெக் 33

புலிக்கொடி வென்ற முதலாவது போர் 45

புனித ஆத்மாவின் பயணம்.... 59

வழிகாட்டும் தலைமைத்துவம் 82

பயங்கர அனுபவம் 90


உள்ளே...

இலங்கை விகடன்

# குறைபாடுகளை களைய முடியும்

பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தும் யாவுமே சுகாதரக்கேடு நிறைந்து அருவருப்பூட்டுவனவாகவே காணப்படுகின்றன.

பஸ் நிலையங்கள், பொதுச் சந்தைகள், பொது மலசல கூடங்கள், பொது வைத்தியசாலைகள், வடிகால்கள், சுடு காடுகள் யாவும் நோய் பரப்பும் மத்திய நிலையங்களாக விளங்குகின்றன.

பொது மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் பொதுச் சொத்துக்கள் யாவும் (வீதி உட்பட) சுகாதாரம் சீர்கெட்டு குறைபாடுகள் நிறைந்ததாகக் காணப்படுவதற்கு யார் காரணம்?

மற்றவர்களைக் குறை சொல்லிச்சொல்லி குற்றம் காண்பதே எமது பணியாகவும், கடமையாவும், அணுகுமுறை யாகவும் , பொழுதுபோக்காகவும் காணப்படுகிறது.

அரச இயந்திரம் ஒருவேளை சிறப்பாகச் செயற்பட்டா லும் கூட இந்த சீர்கேடு குறைபாடுகளை இல்லாதொழித்து விட முடியாது. ஏனென்றால் அதற்கான பொறுமையும், பொறுப்பும் எமக்கு கிடையாது.

சூழலில் சுகாதாரத்தினை மேம்படுத்தி குறைபாடுகளை நீக்க நாம் எல்லோரும் என்ன செய்யவேண்டும்?

எங்களை நாங்களே திருத்திக்கொண்டால் உலகம் தானாக திருந்திவிடுமல்லவா?

# விடியல் எப்போது?

ஆயிரம் இரவுகளவனியில் விடிந்தன
ஆலயமணிகளும் ஆரவாரித் தொலித்தன
சோலைகள் பூத்து நறுமணம் பரப்பின
சோதியாம் கதிரவன் சுடர்விட்டு எரிந்திட்டன

இப்படி விடிந்த இரவுகள் தான் எத்தனையோ ஆனால்-
மலையக
இதயங்களில் இருள் வடிவம் ஏன் இன்னும் விடியவில்லை
வாழ்வினிலே விடிவின்றி வாழ்வெல்லாம் ஓலமிடும் மலையக
வறியவரின் நெஞ்சங்கள் விடிவது தான் எந்நாளோ?

அன்பிற்காய் ஏங்கி அழுதிடும் உள்ளத்தின்
அத அருள் அகற்றிட விடிவு தான் தோன்றாதோ?
பட்டாளி மக்களின் படிகள் உயர்ந்திட - இந்த
மலையகத்தில் நல்ல பாதைகள் தோன்றாதோ?

கரங்களுக்கு தேவை கருவிகள் மட்டுமே
கரகோசம் எழுப்பிய காளையர் தான் கொஞ்சமோ?
மலையகம் விடியவில்லை இன்னும் சுதந்திரம் வரவில்லை
என்று புலம்பிடும் ஏழைகள் தான் கொஞ்சமோ?

கொலையும் கொள்ளையும் கொழுந்து விட்டெரிந்தது
கொடுமைகள் வாழ்வினை கொன்றே ஒழிந்தன!
விடியற்காய் ஏங்கி வீரமுடன் உழைத்திடும்
பாட்டாளி வர்க்கம் வாழ்வுகள் மலராதோ?

ஆனாலும் நாங்கள் விடிவிற்காய் போரிடுவோம்
விடிவு ஒன்றைக் காணும் வரை ஓயாது உழைத்திடுவோம்
என்றோ ஒரு நாள் விடியத் தான் போகின்றது
அன்று விட்டில் பூச்சிகளாய் வாழ்வினில் சிறகடிப்போம்

கலஹா-சங்கர் கைலாஷ்

# இதய ராக கவிதைகள்



காதல் என்று சொல்லி
கண்ணீர் கடல்
நிரப்பிச் சென்றவள் நீ

உன்னில்
ஒன்றுமில்லை....
உன்னை பார்த்து முடித்த
கண்களைத்தான்
கைது செய்ய வேண்டும்

உன் புன்னகையில்
நீ -
பூசிவைத்திருப்பதென்ன?

நெஞ்சம் எரிகிறது
கொஞ்சம் - நீ
மழை கொண்டு வா....

உன் இதயத்தை
திறந்து வை
என் பாடலாவது
அங்கு வந்து
குடியிருக்கட்டும்

- ஏயெம்தாஜ்

**நன்மையே நினை, செய்**
**நன்மையே விளையும்**

*கொழும்பு 11, போதிராஜ மாவத்தை,*
*பீப்பிள்ஸ் பார்க் கொம்ப்ளெக்ஸ்,*
*எல்ஜி இல. 11 இல் உள்ள*
*'ரிப்போர்ட்டர்ஸ் பப்ளிகேஷனுக்காக',*
*கொழும்பு 12, ஹல்ஸ்ரப் வீதி,*
*இல. 134 இல் உள்ள*
*'.'பரின்ட்'கொம் பிரைவேட்' லிமிடெட்'*
*அச்சகத்தில் அச்சிட்டு*
*வெளியிடுபவர், பிரதம ஆசிரியர்:*

**எஸ்பிஜே**

நிர்வாக ஆசிரியர்:

**அபூஅன்வர்**

*வடிவமைப்பு:*
**தி.சுமித்திரா**

*விநியோகம்/ விளம்பரம்:*
**பி.ராஜ் பிரசாத்**
**அருணா அமலதாஸ்**
**எஸ்.சிவரஞ்சன்**
**பி.நிரஞ்சன்**

*வாசகர்களே!*
*இலங்கை விகடன் ஊடாக உங்கள் சிந்தனைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்த தயக்கமில்லாமல் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். இரகசியங்கள் பேணப்படும்.*

*No. 160, Thelankapatha Road,*
*Wattala, Sri Lanka.*
*T.P: 2386006, 4810054.*
*E.mail : reporterspublication@wow.lk*


***ஓவியர் தேவை***

**இலங்கை விகடனில் கடமையாற்றுவதற்கு ஓவியர் தேவை. சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.**

***ஓவியர் தேவை***
*No. 160, Thelankapatha Road,*
*Wattala.*

# மனச்சோர்வு உங்கள் எதிரி

- எப்படிப்பட்ட மனச்சோர்வையும் விரட்டியடிக்கும் தன்மை இசைக்கு உண்டு. எனவே இசையை ரசியுங்கள்.
- நடப்பது, நீந்துவது என ஏதேனும் உடற்பயிற்சியை செய்துவந்தால் மனச்சோர்வு உங்களைவிட்டு அன்று விடும்.
- உங்கள் தகுதியை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அதற்கு அப்பாற்பட்ட விசயங்களைசெய்ய நினைக்காதிர்கள்.
- உணர்ச்சிகளை மனதுக்குள்ளேயே போட்டு அடைத்துக்கொள்ளாதிர்கள். எவ்வகையிலாவது அதை வெளிக்காட்டி விடுங்கள்.
- வருடம் ஒரு முறையாவது எங்கேயாவது சுற்றுலா செல்வதை வழக்கமாக் கிக் கொள்ளுங்கள்.
- நிறைய சிரியுங்கள் எதை மறந்தாலும் புன்னகையை மறக்காதிர்கள். உங்களுக்குள் இருக்கும் குழந்தையை தட்டி எழுப்புங்கள்.
- உங்கள் வேலையைத் தவிர வேறு ஏதேனும் புதுப் பொழுதுபோக்கு அல்லது கலையில் உங்களைத் திவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.
- தியானம் யோகா மாதிரி ஏதேனும் ஒரு மனப் பயிற்சியை பழகிக் கொள்ளுங்கள். மனம் கட்டுப்பாட்டுக்குள் வந்தால் சோர்வு காணாமல் போகும்.


அண்ணே ஒரு
விகடன் தாங்கோ.
எந்த
விகடன்?
இலங்கை
விகடன் தான்.

அழகும் ஆரோக்கியமும் பொருந்திய வாழ்வு என்றென்றும் ஆனந்தத்தைத் தருவதுடன் வாழ்க்கையில் வெற்றி பெறத்தேவையான உத்வேகத்தையும் அளிக்கும்.

எமது திட்டமிடலுக்கும் செயற்பாடுகளுக்கும் இசைவாக உடல் இயங்க மறுத்தால் மனச்சோர்வு ஏற்பட்டு படுக்கையே கதியென்றாகிவிடும்.

படத்தில் காணப்படும் இந்த நபரின் பெயர் வோல்ட்டர் ஹட்சன்.

அமெரிக்காவை சேர்ந்த இவரின் அழகும் ஆரோக்கியமும் அற்ற உடலமைப்பே இவருக்கு பெரும் செல்வத்தையும் புகழையும் தேடிக்கொடுத்துள்ளது.

அப்படி என்ன புகழ் இவருக்கு கிடைத்து விட்டது என்றா கேட்கிறீர்கள்?

உலகிலேயே இவருடைய இடுப்புத்தான் மிகப்பெரியது என அளவிடப்பட்டுள்ளது. இவரது இடுப்பளது 03.2மீற்றர். (119 அங்குலம்). நிறை 543 கிலோகிறாம் ஆகும்.



ராகுல சாங்கிருத்தியாயனின்
வோல்காவிலிருந்து கங்கை வரை

தொடர் நவீனம் 6



# பேசும் விலங்கு



"திவா! இந்தப் புஷ்பங்கள் இப்பொழுதுதான் அழகைப் பெற்றிருக்கின்றன."

"மலரா அல்லது நானா?"

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. கொஞ்சம் தயங்கி, "நான் சிறிது விலகிப் போய் பார்த்தேன். திவா! நீ எவ்வளவு அழகுடன் விளங்கினாய்! இன்னும் கொஞ்சத்தூரம் சென்று நோக்கினேன். அப்பொழுதும் உன்னுடைய சோபை, உன்னுடைய வசீகரம் மிக மிகப் பிரகாசமாகவே தோன்றியது."

"அதோ அந்த வோல்கா நதிக்கரையிலிருந்து நோக்கு வாயானால்?"

"முடியாது: அவ்வளவு தூரத்திலிருந்து முடியாது." சூரனுடைய முகம் சடக்கென்று மாறி விட்டது. அவன் விழிகளில் நீர் ததும்பிற்று.

"திவா! நான் தூரப் போகப் போக இந்தப் புஷ்பங்களைத் தான் காண முடிகிறது. அதன் அழகை அனுபவிக்க முடியவில்லை."

"அப்படியானால் தூரத்திலிருந்து என்னைப் பார்க்க விரும்புகிறாயா? அல்லது பக்கத்திலேயே இருக்க விரும்புகிறாயா?"

"பக்கத்திலிருக்கத்தான் திவா! பகலோடு சேர்ந்தால் தானே சூரியன் பிரகாசிக்கிறான்."

"நீ இன்று என்னோடு நாட்டியம் ஆடுவாயா?"

"நிச்சயமாக ஆடுவேன்"

இன்று நீ என்னோடு தங்குவாயா?"

கட்டாயம் தங்குவேன்."


"இரவு பூராவும்?"

"நிச்சயமாக."

"அப்படியானால் நான் இன்று வேறு எந்த வாலிபர்களையும் அண்டவிட மாட்டேன்" என்று சொலலியவாறே அவனைத் தழுவிக் கொண்டாள்.

வேட்டையாடிக் களைத்த அநேக யுவ-யுவதிகள் அங்கு வந்தனர்; அவர்கள் வரும் காலடிச் சத்தம்

கேட்டும் கூட இவர்களி-ருவரும் அப்படியே, ஆலிங்கனம் செய்த வண்ணமே நின்றனர்.



"திவா! இன்று சூரனைத் தோழனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாயா?" என்று கேட்டாள் அவர்களில் ஒரு யுவதி.

திவா:- "ஆம். இதோ இந்தப் புஷ்பங்களை பார். சூரன்தான் இவற்றை எனக்குச் சூட்டினான்"

யுவ:- சூர்! நீ புஷ்பங்களைக் கொண்டு நன்றாக அலங்கரிக்கிறாயே! என்னுடைய கூந்தலிலும் அலங்கரிக்க மாட்டாயா?"

திவா :- "இன்றைக்கு முடியாது; இன்றைக்கு அவன் எனக்குச் சொந்தம்."

யுவ :- "அப்படியானால் சூரன் நாளை என்னுடையவன்"

திவா :- "நாளைக்கா? இல்லை: நாளைக்கும் என்னுடையவனே."

யுவ :- "தினந்தோறும் அவன் உனக்கே சொந்தமா? அது சரியில்லை திவா."

திவா தன்னுடைய தப்பி தத்தை உணர்ந்து கொண்டாள். "தினந்-தோறுமில்லை. இன்றைக்கும் நாளைக்கும் மட்டும்தான் என்றாள்.

கொஞ்சங் கொஞ்சமாக பல யுவர்களும் யுவதிகளும் அங்கு வந்து கூடினர். ஒரு பெரிய கறுப்பு நாய் சூரனுடைய கால்களை வந்து நக்கிற்று, அப்பொழுதுதான் அவனுடைய ஆடுகள் அவன் ஞாபகத்துக்கு வந்தன. உடனே திவாவிடம் ஏதோ சொல்லிவிட்டு ஓடி விட்டான்.

ஒரு பெரிய விசாலமான குடிசை. அதன் சுவர்கள் மரங்களாலானவை. புல்லால் வேயப்பட்ட கூரை, கல்லால் செய்யப்பட்ட கத்திகள் எவ்வளவுதான் கூர்மையாயிருந்தர் லும், இவ்வளவு மரங்களையும் அவற்-றைக் கொண்டு வெட்டுவது முடியாத காரியம். ஆனால், மரங்களை வெட்டுவதற்கு அவர்களுக்கு நெருப்பும் உதவி செய்கிறது. அந்தக் கல்

கத்திகள், அநேக காரியங்களுக்கு ஆயுதமாக உபயோமாகின்ற தென்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் இவ்வளவு பெரிய குடிசையை கட்டியிருக்கிறார்களே? ஆச்சரியம்தான்.

அந்தக் குடிசையில்தான் நிஷா-ஜனங்கள் (நிஷா என்ற பெயருடைய பழைய காலத்து பெண்ணின் பரம்பரை) பூராவும் வசிக்கின்றனர். யாவரும்-ஒரே குடும்பமாக, இந்தக் குடும்பத்திற்கு-சமூகத்திற்கு ஒரு பெண் தலைவி. இந்தச் சமூகத்தை ஒரு பஞ்சாயத்து நிர்வகிக்கிறது. அந்தப் பரிவாரத்தினுடைய வாழ்க்கையின் எந்த அம்சமும் இந்தச் சபையின் நிர்வாகத்திற்கு அடங்காததல்ல. வேட்டையாடுதல், நடனம் ஆடுதல், காதல் செய்தல், குடிசை கட்டுதல், தோலினால் பாத்திரங்கள் - கருவிகள் செய்தல், எல்லாக் காரியங்களையும் இந்தச் சபைதான் நடத்துகிறது.

இந்தச் சபையில் தாய்க்குத்தான் முதல் ஸ்தானம். நிஷா-ஜனங்களின் இந்தக் குடிசையில், ஆண்களும் பெண்களுமாக 150 பேர் வசிக்கின்றனர். அப்படியானால் இத்தனை பேரும் ஒரே குடும்பமா? இல்லை; இதில் பல குடும்பங்கள் இருக்கின்றனவென்றே சொல்ல வேண்டும். ஏனெனில், தாய் உயிருடனிருக்கும் போதே அவளுடைய மகளில் பலர் ஒரு சிறிய குடும்பம் போல் ஆகிவிடுகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் அவர்கள் தாயின் பெயராலேயே அழைக்கப்படுவதால், பல குடும்பங்களாகவே தோன்றுகிறது.

உதாரணமாக திவாவையே எடுத்துக் கொள்வோம். அவளுக்கு தாயில்லை. அவள் அநேக குழந்தைகளுக்கு தாயாகிவிட்டாள். அவளுடைய குழந்தைகள் யாவும் திவா புத்திரர்கள்-புத்திரிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். இப்படியிருந்த போதிலும், இவர் களுக்குச் சொந்தமான உடமை (மாமிசம்-பழங்கள் முதலியன) எதுவும் கிடையாது. சமூகத்தின் ஒவ்வொருவரும் அவர்கள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி சேர்ந்தேதான் தேடவேண்டும். சேர்ந்தேதான் அனுபவிக்க வேண்டும். ஒன்றும் கிடைக்க வில்லையானால் சேர்ந்தேதான் பட்டினி கிடக்க வேண்டும். சமூகத்திற்கல்லாமல் தனிப்பட்ட யாருக்கும் எந்த உரிமையும் கிடை யாது. சமூகத்தின் ஆணையை, சமூ கத்தின் பழக்க வழக்கங்களைக் காப் பாற்றுவது, அவர்கள் ஒவ்வருவரு டைய மனதுக்கும் பிடித்ததாகவும், சுலபமானதாகவுமேயிருந்தது.

NEW VIMAL
ELECTRICALS
Electrical Dealers,
Importers, Exporters,
Contractors, Merchants
& Stationery
78, Maliban Street,
Colombo 11.
Tel: 075-373154
Fax: 075-374843

இங்கு இவர்கள் கட்டியிருக்கிறார் களல்லவா குடிசை, இதுவும் நிரந்தரமானதல்ல. இந்தப் பிரதேசத் தில் மிருகங்கள், காய்கனிகள் கிடைக்கும் வரைதான் இங்கே தங்குவார்கள். அப்பால் வேறொரு பிரதேசத்திற்கு போய்விடுவார்கள். அடுத்து எந்தப் பிரதேசத்திற்கு இந்த மிருகங்கள் போயிருக்கும் என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் இது இவர்களுக்குத் தொன்று தொட்டு வரும் பழக்கம். இங்கிருந்து இவர்கள் போய்விட்ட பின் இந்த வீட்டின் கூரை விழுந்து விட்டாலும், மரங்களாலும் கற்க ளாலும் கட்டப்பட்டிருக்கும் சுவர்கள் பல வருடங்களுக்கு அப்படியே இருக்கும்.

இவர்கள் அடுத்த பிரதேசத்திற்கு போனவுடன், குடிசை கட்டுவதற்கு இவர்களுக்குத் தேவையானது புற்கள் தான். பழைய சுவர்களில் புற்களைப் போட்டு வேய்ந்து குடிசைகளைக் கட்டிக் கொள்வார்கள். இந்தக் குடிசையில் ஒரு பக்கம் சாமான்கள் வைத்துக் கொள்வதற்கும், மற்றப் பக்கம் சமைத்துக் கொள்வதற்குமாக ஒதுக்கிக் கொள்கிறார்கள். மண்ணைக் கொண்டு பாத்திரங்கள் செய்ய இவர்களுக்கு தெரியும். மண்டை ஓடுகளையும் பாத்திரங்களாக உபயோகப்படுத்துவார் கள். மாமிசத்தை சில சமயம் பச்சையாக தின்பார்கள். ஆனால், உலர்ந்த மாமிசத்தை சமைத்துச் சாப்பிட அவர்கள் விரும்புவதில்லை. வோல்கா நதியின் இந்தப் பிரதேசத்தில் தேன் அதிகமாக கிடைக்கிறது.


ஆகையால் தேன் குடிக்கும் கரடியும் இங்கு அதிகம். நிஷா-ஜனங்கள் தேன் மீது மிகுந்த பிரியம். தேனை ருசிக்காக மட்டுமல்ல, போதைப் பொருளாகவும் கருதி அருந்துவார்கள்.

இவர்களுக்குப் பாடவும் தெரியும் ஆடவும் தெரியும். ஆண்களும் பெண்களும் இனிமையாகப் பாடுவார்கள். எல்லா வேலைகளையும் இவர்கள் சேர்ந்து செய்வதோடு, திருத்தமாகவும் அழகாகவும் செய்கிறார்கள். சேர்ந்து கூட்டமாக வேலை செய்யும் பொழுதெல்லாம் சங்கீதம் முக்கிய ஸ்தானம் பெறும். சங்கீதம் வேலையின் சிரமத்தை மறைத்து விடுகிறதல்லவா! ஆனால், இவர்கள் இன்றுபாடுவது, வேலை செய்யும்போது எல்லோரும் சேர்ந்துபாடுவார்களே அந்த மாதிரிப் பாட்டுகளாகத் தெரியவில்லை. இங்கே முறை வைத்த மாதிரி ஒரு தடவை பெண்கள் மிருதுவான குரலில் சேர்ந்து பாடுகிறார்கள். அதைத் தொடர்ந்து ஆண்கள் தங்கள் கம்பீரமான குரலில் பாடுகிறார்கள். நாமும் சென்று பார்போமே.

குடிசையினுள் ஒரு புறத்தில் சமூகத்தின் ஆண், பெண், குழந்தைகள், யாவரும் ஒரேயிடத்தில் கூடி இருக்கின்றனர். நடுவே பூமி தோண்டப் படுகின்றது. அதில் விறகு நெருப்பு ஜோதி மயமாய் எரிந்துகொண்டிருக்கின்றது. பெண்களும் ஆண்களும், மாறி மாறிப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன பாடுகிறார்கள்? எதைப்பற்றிப் பாடுகிறார்கள்? இதோ கேளுங்கள்.

(அடுத்த வாரம் தொடரும்)

# கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை



கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று தமிழில் ஒரு பழமொழி உள்ளது. அதற்கேற்ற வகையிலான சம்பவம் ஒன்று அண்மை யில் அமரிக்காவின் மியாமி பகுதியில் இடம் பெற்றுள்ளது. மியாமி உணவு சந்தைப் பகுதியில் புளொரிடா அதிஷ்டலாபச் சீட்டை வாங்கிய ஒருவருக்கு 50 மில்லியன் டொலர் பரிசு விழுந்துள்ளது. எனினும் இந்தப் பணம் குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட வில்லை. அதனால் அப்பணம் மீண்டும் அதிஷ்டலாபச் சீட்டு நிதியத்திற்கே திரும்பியுள்ளது.

மார்ச் மாதம் 12ஆம் திகதி நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசைப் பெற்றுக்கொள்ள 180 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலப் பகுதிக்குள் அதிஷ்டசாலி பரிசைப் பெற்றுக்கொள்ள தவறியதால் பரிசைப் பெறும் வாய்ப்பை அவர் இழந்துள்ளார்.

புளொரிடா அதிஷ்டலாபச் சீட்டு வரலாற்றில் பரிசு பெற்றுக்கொள்ளப்படாத அதி கூடிய தொகை இதுவாகும். இதுவரை 19 ஜக்பொட் பரிசுகள் பெற்றுக்கொள்ளப்படாது இருப்பதாகவும் உரிமை கோரப்படாது 123 மில்லியன் டொலர்கள் இருப்பதாகவும் புளொரிடா அதிஷ்டலாபச் சீட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

-ராஜேஸ

# அடுத்த தயாராகும்போது





முதல் குழந்தையின் மீது அன்பையும் பாசத்தையும் பெற்றோர் கள் வாரி இறைப்பார்கள். தாய் - தந்தையின் பாசத்தால் வளரும் அந்த குழந்தை, தாய்க்கு இன்னொரு குழந்தை பிறக்கும்போது ஒரு வித பயத்துடன் காணப் படும். தாய் - தந்தை தன் மீது வைத்திருக்கும் பாசத்தில் புதிய குழந்தை பங்கு போட்டு விடுமோ என்று அஞ்சுவதே அந்தப் பயத்திற்கு



காரண மாகும்.

அதனால் பல சிறுவர் சிறுமிகள் இரண்டாவது குழந்தையை ஒருவித எரிச்சலுடன் பார்ப்பார்கள்.

மூத்த குழந்தையின் எரிச்சலையும் பயத்தையும் போக்கும் விதத்தில் தாய், கர்ப்பிணியாக இருக்கும் போதே செயல்படவேண் டும்.

குழந்தைக்கு ஐந்து வயது என்று வைத்துக்கொள் ளுங்கள். நீங்கள் நான்கு மாத கர்ப்பிணியாக இருக்கும போதே, உங்கள் குழந்தையை அழைத்து அருகில் வைத்துக் கொண்டு, "என் வயிற்றில் உன்னைப் போல் இன் னொரு குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தை உன்னை அண்ணா/அக்கா என்று அழைக்கும்" என்று சொல்லி உங்கள் வயிற் றைக் காட்டலாம்.

**கர்ப்பிணியாக இருக்கும் தாய் மூத்த குழந்தையின் எரிச்சலையும் பயத்தையும் போக்கும் விதத்தில் எவ்வாறு சொல்பட வேண்டும?**

"இதோ பார் லேசாக துடிக்கிறது ... அந்த குழந்தை உதைக்கிறது. அண்ணனை/அக்காவைப் பார்க்க ஆசைப்படுகிறது" என்றெல்லாம் கூறி, அந்த புதிய குழந்தையை ஆவலுடன் எதிர்பார்க்கும் சூழலை மூத்த குழந்தைக்கு ஏற்படுத்துங்கள்.

அவன்/அவள் வயிற்றை தொட்டுப் பார்க்க விரும்பும் போதெல்லாம் அதற்குரிய வாய்ப்புக்களை கொடுங்கள்.

இவ்வாறு செய்வதன் மூலம் சிறுவன் அல்லது சிறுமி புதிய குழந்தையின் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கிவிடுவார்கள்.

அது மட்டுமின்றி அண்ணன் அல்லது அக்காவுக்கும் வயிற்றுக்குள் இருக்கும் சிசுவுக்கும் ஆத்ம பந்தம் உருவாகத் தொடங்கிவிடும்.

இவ்வாறு செய்தால், அந்தக் குழந்தை பிறந்த பின்பு அதனை எரிச்சலோடோ, பயத்தோடோ பார்க்க மாட்டார்கள். தன் மீது பெற்றோர் வைத்திருக்கும். பாசம் குறைந்து போய்விடும் என்று கவலைப்பட மாட்டார்கள்.

சில குழந்தைகள், "வயிற்றில் வளரும் இந்தக் குழந்தை நமக்கு வேண்டாம்" என்பது போல் சொன்னாலும் அதற்காக வருத்தப்பட வேண்டாம். குழந்தையை மிரட்ட வேண்டாம். அவன் ஏன் வயிற்றில் இருக்கும் குழந்தைய்ய வேண்டாம் என்று சொல்கிறான் என்று கேளுங்கள். அவன் தரப்பு கருத்தை அமைதியாகக் கேட்டு, அவன் வழியிலேயே பக்குவமாக அவனது துணைக்கு இன்னொரு குழந்தை தேவை என்பதை உணர்த்துங்கள்.

பக்கத்து வீட்டில் இரண்டு குழந்தைகள் ஒற்றுமையாக பாசமாக இருப்பதை உணர்த்துங்கள். எக்காரணத்தைக் கொண்டும் அவன் மீது இருக்கும் பாசம் எள்ளளவும் குறையாது என்பதை உறுதி செய்யுங்கள். ■

# சகல மருத்துவ பிரச்சினைகளுக்கும் ஆலோசனை கேட்போம்

கர்ப்பிணித் தாய்மார்களே! கர்ப்பகாலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் தேவையா?

ஆண், பெண் அந்தரங்க பிரச்சினைகளா? சந்தேகமா?

எழுதுங்கள் உங்கள் பிரச்சினைகளை!

**மருத்துவ நிபுணர்கள் பதிலளிக்கிறார்கள்**
**160, Thelankapatha Road,**
**Wattala, Sri Lanka.**


குழந்தை வளர்க்கும் நுட்பம் குறித்து சிந்திக்க முடியவில்லையா?

*வீட்டில் சண்டையும் சச்சரவுமா?*

# அமரர் பொன். இராஜகோபால்

## சிறுகதைப் போட்டி

அமரர் பொன். இராஜகோபால் வீரகேசரி வார வெளியீட்டின் ஆசிரியராக ஏறத்தாள 40 வருடங்கள் இலக்கிய, சமூக பணியாற்றியவர். வீரகேசரி சிறுகதைகள் எனும் தனித்துவ முத்திரையை ஈழத்து இலக்கிய உலகில் பதிப்பதற்குக் காரணமாக இருந்தவர். இவரது அளப்பரிய பணியை கௌரவிக்கும் முகமாக இச்சிறுகதை போட்டி நடாத்தப்படுகிறது.



இப்போட்டிக்கென அனுப்பி வைக்கப்படும் சிறுகதைகள் இலங்கை விகடனில் பிரசுரமாகிய பின்னர் வாசகர்களிடம் இருந்து கிடைக்கப் பெறும் விமர்சனக் கடிதங்களின் எண்ணிக்கையினை அடிப்படையாக வைத்து வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவார்கள். பிரசுரமாகும் கதைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

முதலாவது பரிசு: ரூ. 25,000
இரண்டாவது பரிசு: ரூ. 15,000
மூன்றாவது பரிசு: ரூ. 10,000

**முடிவு திகதி: 15-05-2004**

### அனுப்ப வேண்டிய முகவரி:

அமரர் பொன். இராஜகோபால் சிறுகதை போட்டி
**160, Thelankapatha Road, Wattala, SriLanka.**

சிறுகதை

# காதலென் சுமைகள்



-டுசி



நாலைவில் நாயின் ஊளையிடல் சத்தமும், ஆந்தையின் அலறலும் கொண்டே இருக்கின்றன. அந்த நிசப்த இரவில் இது ஒரு பயங்கரம் , ஆனாலும் எனக்கு இந்தப் பயங்கரம் பழகிப்போன ஒன்று. ந்திரை இல்லாமல் நான் கட்டிலில் புரள்வதும் பின்பு மெல்ல நடந்து மாட்டை மாடிக்குச் செல்வதும் அங்கு அந்த இரவின் அமைதியை, ளிர்காற்றின் தழுவலை, இரவில் மலரும் மலர்களின் நறுமண கந்தத்தை, வெட்ட வெளி வானத்தின் நட்சத்திர சிதறல்களை நான் சிப்பதும் இப்பொழுது சில நாட்களாகவே தொடர்ந்து காண்டிருக்கின்றது. மனதில் இருக்கும் சுமைகளைக் கூட இங்கே ந்தால் எனக்கு மறந்து போனது போல் ஒரு நினைவு. கடவுள் இந்த யற்கைகளை படைக்கும் போது மிகவும் ரசித்து, சுவைத்து டைத்திருப்பார் போலும் என்று நினைத்துக் கொண்டே நான் மாட்டை மாடியில் மண்டியிட்டு அமர்கின்றேன். என் நினைவுகள் பின்னோக்கி நகர்கின்றன.

அன்றும் வழமைபோல் நான் பஸ் நிறுத்தும் இடத்தில் பஸ்ஸுக்காக காத்திருக்கவில்லை, அவனுக்காக காத்திருக்கின் றேன். அம்மாவின் கண்டிப்பான தடைகளையும் தாண்டி நம்பக்கூடிய மாதிரி ஒரு பொய்யான காரணமும் கூறி இதோ அவனுக்காக காத்திருக்கின்றேன். அவன் அநேகமாக இந்த நேரம் வந்துவிடுவான். ஆனால் இன்று ஏனோ சுணக்கம். அதோ அவன் வரும் பஸ் வருகின்றது.

ஆம் வந்துவிட்டான்.

அவனைக் கண்டதும் என் முகம் மலர்கின்றது. உள்ளுக்குள் எனக்கு உருவாகிய சந்தோஷத்தை என்னால் வார்த்தைகளால் விபரிக்க முடியாது. அந்த சந்தோசத்தோடு சின்னதாய் ஒரு நடுக்கமும், ஒரு பதைபதைப்பும், கொஞ்சம் நாணமும், யாரும் பார்த்து விடுவார்களோ என்ற ஒரு கலக்கமும் கொண்ட உணர்ச்சியின் கலவைகளோடு நான் காத்திருக்கின்றேன்.

என் அருகில் அவன் நெருங்கிவிட்டான். அவனுக்கே உரிய அந்த வாசத்தை என் நாசிக்குள் நான் பத்திரப்படுத்தி கொண்டேன். இந்த சுகந்தத்தைதானே நான் என் வீடு சென்றும் நுகர்ந்துகொண்டிருப்பேன்.

"என்ன இன்று நான் லேட்டா" என்கிறான் அவன்.

கோபம் தான் கொள்ள முடியுமா? கோபம் கொண்டு அந்த சொற்ப நேரத்தை வீணாக்க முடியுமா?

அதோ நாம் பயணமாகும் அந்த பஸ்ஸும் வந்துவிட்டது. றுகிறோம். அந்த பயணத்தை தான் மறக்க முடியுமா?

அந்த நேரம் அந்த பஸ்ஸில் எப்படியும் இடம் இருக்கும். இருவரும்

ஒரு ஆசனத்தில் அமர்கின்றோம். அவன் கையோடு என் விரல்களை சேர்த்து , அவன் தோளில் தோள் சாய்ந்து அவனிடம் மெதுவாக எப்பொழுது என் மேல் காதல் வந்தது என்று கேட்கின்றேன்.

அவன் சொல்கிறான் பூ மலர்வது யாருக்குத்தெரியும் அது போல் தான் உன் மீது நான் கொண்ட காதல் மலர்ந்தது எப்பொழுது என்று தெரியாது.

மிக நல்ல விளக்கம். அதை இப்பொழுது நினைத்தாலும் எனக்குள் புல்லரிக்கும். சந்திக்கும் நேரம் நெருங்க நெருங்க வானத்தில் மிதப்பது போலவும், சந்தித்து வீடு செல்லும் போது வானத்தில் இருந்து யாரோ தள்ளிவிட்டது போலவும் நான் உடைந்து விடுவேன். அவன் கைகளை நான் மெல்லமாக அழுத்தியதும் உண்டு.

காதலனாய் அவனும் காதலியாய் நானும் இருந்தபோது நானும் அவனும் கடந்து வந்த அந்த நாட்களின் இனிமை கண்களை மூடி ரசிக்கும் மென்மையான இசையைப்போன்றது.

**பூ மலர்வது யாருக்குத் தெரியும்? அது போல் தான் உன் மீது நான் கொண்ட காதலும் மலர்ந்தது!!**

ஆனால் இப்பொழுது.

கீழே என் குழந்தையின் அழுகைச் சத்தம் என்னை சுய நினைவிற்கு அழைத்து வருகின்றது. ஓடிச் சென்று என் குழந்தையை அணைத்துத் தூங்க வைக்கிறேன். அவனும் அம்மா அம்மா என்று அழுதபடி என் கைகளை இறுக்கிப் பிடித்தபடி உறங்கிப் போகின்றான். இன்று வீட்டில் நடந்த கலவரத்தில் அவன் பயந்து போயிருப்பது எனக்கு நன்றாகவே தெரிந்தது.

அடி வாங்கி அடி வாங்கி மரத்துப்போன உடம்பு போல் என் இதயமும் என் கணவனின் கொடூர வார்த்தைகளால் மரத்துப் போய்விட்டது.

ஒவ்வொரு மனித ஜனனத்திற்கும் காரண காரியம் இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால் என் ஜனனத்தின் காரண காரியம் என்னவென்று எனக்கு இன்னும் புரியவில்லை. மனிதனை ஆசைகள் தானே இயக்குகின்றன. ஒரு மனிதனைப் பார்த்து ஆசைகளை அடக்கிக்கொள் என்று சொல்வார்களே தவிர ஆசைகளை அகற்றிக்கொள் என்று சொல்லமாட்டார்கள். என் ஆசைகள் எல்லாம் இங்கே நிராசைகளாய் என் அடி மனதில் என் கணவனால்

*காதலனாய் கணவன் இருந்த போது இனித்த அந்த பொழுது கள் கலியாணத்தின் பின் ஏன் கசக்கின்றது. நான் கணவனை மட்டும் பிழை கூறுவதில் அர்த்த மில்லை.*

*அவனை காதலிக்கும் பொழுது நான் என்னைப்பற்றி எப்பொழுதாவது கதைத் திருக்கின்றேனா? என் விருப்பு வெறுப்புக்களைப் பற்றி, குணா திசயங்களைப் பற்றி, என் பழக்க வழக்கங்களைப் பற்றி......*

**இல்லையே... எதுவும் இல்லையே!!**

குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன.

இப்பொழுது என்னிடம் எந்த விதமான ஆசைகளும் இல்லை. அதனால் என்னிடம் எந்த விதமான பற்றுதலும் இல்லை. இப்பொழுது நான் காவி உடை பூணாத சந்நியாசி. கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் நித்திரையில் புலம்பும் என் மகனின் புலம்பல் என்னைத் திடுக்கிட வைக்கின்றது.

"அப்பா சண்டை பிடிக்காதையுங்கோ அம்மா பாவம்" என்று அழுது கொண்டே கூறுகின்றான். அவனை அள்ளி அணைத்தபடியே யோசிக் கின்றேன்.

காதலனாய் கணவன் இருந்த போது இனித்த அந்த பொழுதுகள் கலியாணத்தின் பின் ஏன் கசக்கின்றது. நான் கணவனை மட்டும் பிழை கூறுவதில் அர்த்தமில்லை.

அவனை காதலிக்கும் பொழுது நான் என்னைப் பற்றி எப்பொழுதாவது கதைத்திருக்கின்றேனா? என் விருப்பு வெறுப்புக்களைப் பற்றி, குணாதிசயங்களைப் பற்றி, என் பழக்க வழக்கங் களைப் பற்றி......

இல்லையே... எதுவும் இல்லையே.

பின் நான் எப்படி அவனை மட்டும் பிழைகூறுவது. என் சுய முகம் எது வென்று தெரியாமலே அவன் என் னைக் காதலித்திருக் கிறான். அது போல் அவனைப்பற்றி நான் தெரிந்து கொண்டவை சொற்பமே

இரண்டு பேரும் சில விசயங்களில் ஒத்துப்போனா லும் பல விசயங்களில் மாறுபடுகின்றோமே.

காதலிக்கும் போது மறைக்கப்பட்ட எங்கள் சுய முகங்கள், கலியாணத்தின் பின் ஒவ்வொரு நாட்களையும் யுத்த கணங்களாக உருப்பெறுகின்றன. காதலிக்கும் போது எங்களது விட்டுக்கொடுப்புகள் கலியாணத்தின் பின் எங்கே போனது, அன்று எங்களது சந்திப்புகளில் ஒலித்த இனிமையான

மெல்லிய சங்கீதம் இன்று அவரோகனமாய அல்லவா ஒலிக்கின்றது.

என் முகத்தைக் கண்டாலே எதாவது காரணத்தைக் கூறி சண்டையிடுவதும், வேண்டாத பொண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பது போல் எதைச் செய்தாலும் அதில் பிழையை கண்டுபிடிப்பதும், வார்த்தைகளாலே என்னைச் சாகடிப்பதும் எந்த நாளும் தொடருகின்றன. இதன் முடிவு தான் என்ன என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது என் குழந்தையின் முனகல் என்னை மீண்டும் சுயநினைவுக்கு கொண்டு வருகின்றது.

குழந்தையின் முனகலில் ஒலித்த வார்த்தைகள் என்னைத் திடுக்கிட வைக்கின்றது. என் கணவனின் காட்டுமிராண்டித்தனமான கத்தல்களாலும் அதற்கு என் பதில்களாலும் என் குழந்தையின் மனம் எவ்வளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவன் முனகல் பறை சாற்றுகின்றது. நினைக்கும் போது என் நெஞ்சம் பதறுகின்றது.

என் குழந்தையை நல்ல சூழலில் வளர்க்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருககிறது என்பதை இப்பொழுதுதான் உணர்கின்றேன். என் பிறப்பின் காரண காரியமும் எனக்கு மெல்ல மெல்ல புலப்படுகின்றது. என் குழந்தையை வளர்த்து நல்ல ஒரு பிரஜையாக்க வேண்டியது என் காரண காரியமாக விளங்குகின்றது.

என் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான முடிவை எடுக்கும் தருவாயில் நா்ன் இப்பொழுது இருக்கின்றேன். என் சுய மரியாதை குறையாமல் கௌரவமாக தனியாக நின்று என் குழந்தையை என்னால் வளர்க்க முடியுமா?

யோசிக்கிறேன், முடியும் என்றே படுகின்றது. எனக்கு அதற்கான தைரியமும், தன்னம்பிக்கையும் இருக்கின்றது. யாரின் துணையும் இன்றி என்னால் என் குழந்தையை வளார்த்து ஆளாக்க முடியும்.



இதோ வாடி இருந்த என் இதயச் செடியில் மெல்ல துளிர் விடுவதை என்னால் உணரமுடிகின்றது. இதய மூலையில் பிள்ளையின் வளர்ச்சி பற்றிய கனவு அவனை ஒரு டாக்டராக்க வேண்டும் என்ற ஆசை துளிர் விடுகின்றது. இதோ எனக்கும் வாழ்க்கையில் பிடிப்பு வருகின்றது. என் உள்ளமும் உணர்வுகளும் மெல்ல மெல்லமாக தன் காவி உடையை களைகின்றது.


என் கணவனுக்கு என் முடிவை தெரிவிக்க வேண்டும். அவனால் எனக்கு போடப்பட்ட சிறையில் இருந்து விடுதலை. அதுமட்டுமா நான் நானாக இருக்கும் காலம் இதோ வெகு விரைவில் என்று நினைக்கும் போதே என் மனதுக்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடிக்கின்றன.

இதோ என் மகனும் இப்பொழுது நிம்மதியாய் தூங்குகின்றான். பல நாட்களுக்குப் பின் என்னையும் நித்திரா தேவி அழைக்கிறாள். ■









மழைக்காலம் வந்தாலே போதும் - மஸ்கெலியா நகரிலுள்ள கான்களில் 'மல' வாசனைகள் வெளிக்கிளம்பத் தொடங்கிவிடும். சில வேளைகளில் வெயில் காலங்களிலும் இதே நிலைதான்!

போதாக்குறைக்கு நகரினுள் எங்குமே ஒழுங்கான மலசலகூடம் இல்லை. தாக சாந்தியை தவிர்ப்பதற்கு நீரும் இல்லை

'பயர் கெப்' என்று சொல்லப்படும் கடைகளுக்கு இடையில் விடப்படும் தீ இடைவெளியே இப்போது திறந்தவெளி மலசலகூடமாக இயங்குகறிது.

''1969 ஆம் ஆண்டு முறையான திட்டமிடல் இல்லாமல் இங்குள்ள வசதி படைத்த வர்த்தகர்கள் தாமாக கடைகளைக் கட்டிக்கொள்ள விரும்பியதால் தான் இந்த பரிதாகநிலை" என்கிறார் இங்கேயே பிறந்து வளர்ந்த வயோதிப முதலாளி ஒருவர்.

சில நேரங்களில் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் கூட அவசரத்திற்குக் குறுக்குப் பாதை வழியாகச் செல்ல முடியாத நிலை. துர்நாற்றத்தின் கொடுமை தாங்கமுடியாது!

இதுபற்றி பொது சுகாதார அதிகாரி ஒருவர் கருத்து கூறிய போது சகல முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததை அறிய முடிந்தது.

''பிரதேச சபையில் போதியளவு நிதியில்லை. அவற்றைத் திருத்தியமைக்க பல இலட்சம்

ரூபாய்க்கள் செலவாகும். ஆனால் நாசினிகள் எதுவுமே இதுவரை இக் கான்களுக்கு தெளித்ததாக ஞாபகம் இல்லை" என பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி னார்.

"சுமார் 34 வருடங் களாக பொதுமக்களைப் பாதிக்கும் இவ்விடயத்தை நாங்களும் பலமுறை எடுத் துச் சொல்லுகிறோம். நீங்க ளும் பத்திரிகைகளில் எழுது கிறீர்கள். ஒரு பத்திரிகை படத் துடன் வெளியிட்டது. ஆனால் என்ன செய்வது? யார் இதை எல்லாம் கண்டு கொள்கிறார் கள்? பாராளு மன்ற உறுப்பினர் கள் பணம் ஒதுக்கினால் தான் இதனைச் செய்யமுடியும். கட்சி வேறு பாடுகாட்டி பணம் ஒதுக்குகி றார்கள் இல்லையே" என் கிறார் இன்னொருவர்.

மஸ்கெலியா நகரில் கான்களும் போக்குகளும் இன்ற அசிங்கங்களால் நிரம்பி வழிகின்றன. ஏதோ அடிக்கடி மழை பெய்வதால் ஊர் தப் பிப் பிழைத்துக் கொண்டு இருக்கிறது.

- *நந்தி* -

## இரசித்த குரல்

முற்பிறப்பு வாசனைகள் மறைந்திடுமா நெஞ்சில்
இன்றுவரை தொடர்கிறதே வசந்தத்தடயங்கள்
முன்கேட்டு நான் மகிழ்ந்த அதேயினிய குரலில்
என்னையழைத்தது யாரே இனிக்கிறதே என் செவியில்

## காற்று

இள்ங் காற்று இன் மலர்களைத் தொட்டு
தாலாட்டிடும் தாயின் கரங்கள்
வளையா மூங்கில் உள்ளே நுழைந்தால்
இசைத்திடும் இனிய சுரங்கள்.

திருமதி.எஸ்.ஜெயா

# மாணவ பத்திரிகையாளர் திட்டம்

நீங்கள் மாணவ மாணவியரா?

**ஆம்** எனில்,

எங்கள் மாணவ
பத்திரிகையாளர்
திட்டத்திற்குள்
உள்வாங்கப்படுவதற்கு பூரண
தகுதி பெற்றுவிட்டீர்கள்
பத்திரிகையியல் குறித்த
பாடநெறியை இலவசமாக
கற்பதற்கு அருகிலுள்ள
விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி
செய்து அனுப்புங்கள்.

பெயர்: ..............................

பால்: ..............................

விலாசம்: ..............................

.............................. ..............................

வகுப்பு: ..............................

பாடசாலை: ..............................

அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்:

..............................

**மாணவ பத்திரிகையாளர் திட்டம்**
**160, Thelankapatha Road,**
**Wattala, Sri Lanka.**

## இலங்கை விகடன் சந்தா படிவம்

**இலங்கை விகடன்** வாரப் பத்திரிகை தடங்கல்கள் இன்றி பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் உங்கள் கரம் சேர்வதை **இலங்கை விகடனின்** சந்தாதாரர்களாகி உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

தொலைபேசி இல.: ..............................................

பத்திரிகை விநியோக முகவரி:

..............................................................

..............................................................

........................................ ..................2003/04

ஒப்பம் திகதி

**கட்டணம் செலுத்தும் முறை:** *(புள்ளடி இடுக.)*

52 வாரங்கள் ☐ 26 வாரங்கள் ☐

## சந்தா கட்டண விபரம் (தபால் செலவு உட்பட இலங்கை ரூபாய்களில்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு வருடம் | - | 52 வாரங்கள் | - | ரூபா | 1,300/- |
| ஆறு மாதங்கள் | - | 26 வாரங்கள் | - | ரூபா | 675/- |

காசோலை ☐ காசுக்கட்டளை ☐

இப்படிவத்தை பூர்த்திசெய்து **Reporters Publication** என்ற பெயருக்கு **Order Cheque** ஆக வரையப்பட்ட காசோலையுடன் அல்லது கொழும்பு (G.P.O.) தபாலகத்தில் பணம் பெறக்கூடியதாக பெற்றுக் கொண்ட காசுக்கட்டளையுடன் **ILANGAI VIKADAN** 160, THELANKAPATHA ROAD, WATTALA, SRI LANKA.முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

ஒரு வருட சந்தாதாரர்களுக்கு

# பரிசு மழை

(விபரங்கள் பின்னர் வெளியிடப்படும்)

# இன்னொரு பக்கம்

## மனோ கணேசன் எழுதுகிறார்!

புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனை சந்தித்த போது அரசியல் சார்ந்த பின்னணி மற்றும் முன்னணி விஷயங்களை பகிர்ந்து கொள்ள முடிந்தது.

இன்று நிலவும் அரசியல் நெருக்கடிகளுக்கு அப்பால் சென்று சில விஷயங்களை தமிழ்ச்செல்வன் விபரித்த பொது நானும், எனது மேல் மாகாண மக்கள் முன்னணித் தோழர்களும் மிகவும் நெகிழ்ந்து போனோம். 'ஓமந்தையில் இருந்து நீங்கள் கிளிநொச்சிக்கு பயணித்த ஏ9பாதை போர் நிறுத்தம் ஆரம்பித்த போது இருந்த நிலையைவிட தற்போது பெருமளவு செப்பனிடப்பட்டிருப்பதும், இருமருங்கிலும் கண்ணி வெடி வயல்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருப்பதும்தான் சாதாரண கண்களுக்குத் தெரியும்' என்று சொன்ன தமிழ்ச் செல்வன் தொடர்ந்து 'இந்தப் பாதையை தக்க வைப்பதற்காக நடந்த சண்டையில் எங்களது மாவீரர்கள்2200 பேர் வீரமரணம் அடைந்தார்கள்.எனவே எங்களைப் பொறுத்தவரையில் இந்த ஏ9 சாலை கற்களாலும், தாரினாலும் போடப்படவில்லை. எங்களது போராளிகளின் இரத்தத்தினாலும், சதையினாலும்தான் ஏ9 சாலை உருவாக்கப்பட்டஇருக்கிறது.' என்று சொன்னபோது ரொம்பவும் இறுக்கமாக இருந்தது.



புலிகளின் வீரவரலாற்றில் இன்னொரு பக்கத்தையும் தமிழ்ச்செல்வன் சொன்னார்.

இந்தியப் படையை எதிர்த்து சண்டையிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற திர்க்கமான நிலமை ஏற்பட்ட போது, எமது தலைவர் எம்மை அழைத்து 'நாம் மண்டியிட்டு சாகப் போகிறோமா? அல்லது நிமிர்ந்து நின்று

சாகப் போகிறோமா? என்று நீங்களே முடிவு செய்யுங்கள்" என்று சொன்னார். நிச்சயம் சாவு என்ற நிலையில் நின்று போரிடத் தொடங்கிய எம்மைத் தட்டி எழுப்பிய வார்த்தைகள் அவை. அதையடுத்து தொடர்ந்த சண்டை இன்று புலிகளின் வெற்றி வரலாறாகிவிட்டது.


அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் மூன்றாவது தரப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது புலிகளின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது. முஸ்லீம் மக்களின் கலாசார தனித்துவ விழுமியங்களை புலிகள் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே புலிகள் முஸ்லீம் மக்களுடன் தனியாக பேச விரும்புகின்றார்கள். அது போல் முஸ்லீம் பிரதிநிதிகள் அரசுடன் பேசுவதிலும் அவர்களுக்கு ஆட்சேபனை இல்லை. இவ்விதமாக முஸ்லீம் மக்கள் புலிகளுடனும், அரசுடனும் வெவ்வேறாக பேசலாமே தவிர அரசு -புலிகள் பேச்சு வார்த்தைமேசையில் மூன்றாவது தரப்பாக இடம்பெறுவது பொருத்தமற்றது என்பதுவே புலிகளது அபிப்பிராயமாகும்.

இந்தக் கருத்துக்கள் தென்இலங்கையிலும் மேல் மாகாணத்திலும் மலையகத்திலும் வாழும் தமிழர்கள் சம்பந்தமான எமது மேல் மாகாண மக்கள் முன்னணியின் நிலைப்பாடுகளுக்கும் வலுசேர்க்கின்றது.

தென்இலங்கை தமிழர்களும் ஒரு தரப்பினராக இந்தப் பேச்சு வார்த்தையில் இடம்பெற வேண்டும் என்று ஒரு சிலர் சொல்கின்றார்கள். அல்லது புலிகள் மலையக மக்கள் பிரச்சினைகளையும் தமது பேச்சு வார்த்தையின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இன்னும் ஒரு சிலர் ஒரு படி மேலே போய் மலையகத்துக்கும் சேர்த்து புலிகளே அரசியற் தலைமை தரவேண்டும் என்று கதைக்கின்றார்கள். மலையகப் பிரதேசங்களையும் வடகிழக்குடன் இணைத்து ஈழம் என்று ஒரு காலத்தில் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கங்கள் அழைத்ததைப் போல் சிலர் மறைமுகமாக் கூறுகின்றார்கள். புலிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கப் போகின்றோம் என்றும் சிலர் கருத்துரைக்கின்றார்கள்.

இந்தக் கருத்துக்களில் இருக்கும் நியாயமும், தர்க்கமும் எனக்கும் புரியவில்லை.

முதலில் புலிகளும், ஈழத் தமிழர்களும் இந்த உயரிய அந்தஸ்த்தை எத்தகைய தியாக வரலாற்றின் பின்னணியில் அடைந்திருக்கிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். 20,000போராளிகள், 100,000 பொதுமக்கள், அங்கவீனர்கள், இலட்சக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு அகதிகள், பொது,தனியார் சொத்திழப்புகள்,தரையிலும் கடலிலும் ஒட்டு மொத்த அழிவுகள், கலாசார சமூக பின்னடைவுகள் என்று பட்டியல் நீளுகின்றது.இவை எல்லாவற்றையும் விட 70களில் வடகிழக்கு மக்கள் ஜனநாயகத் தேர்தலில் தந்த தமிழீழ ஆணை வெறும் கோஷமாக நின்று போய்விடவில்லை. அந்தக் கோரிக்கையை ஒரு அரசியல் போராட்டமாக இத்தனை விலை கொடுத்து புலிகள் இன்று வரையும் பிடிவாத மாக முன்கொண்டு செல்கின்றார்கள்.




முஸ்லீம்களும், தென்இலங்கை தமிழர்களும் பேரினவாத வரலாற்றிலே

களையும் கோஷங்களையும் முன்வைத்திருக்கிறோம். ஆனால் இழப்பீடுகளும், வெறும் கோஷங் களும் அரசியல் போராட்டங்களாகிவிடாது. தொழிற்சங்க போராட்டங்கள் கூட அரசியல் போராட்டமாக கருதப்பட முடியாது.

அதனால் தான் புலிகளை முன்மாதிரியாகக் கொண்டு நாம் தலைமை தாங்கும் தென்இலங்கை தமிழர்களுக்கு உரிய அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான அரசியல் போராட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும் என தென்இலங்கை தமிழ் கட்சிகளிடம் மேல் மாகாண மக்கள் முன் னணி கூறுகின்றது.

அதேபோல் கடந்த கால இழப்பீடுகள் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் மூல காரணமான பேரினவாதத்துக்கு எதிரான அரசியல் போராட்டங்களை முன்னெடுங்கள் என்று முஸ்லீம் நாடாளுமன்ற நண்பர்களுக்கு நான் கூறியிருக்கின்றேன்.

சொல்லொனாத்துன்ப வரலாற்றுக்கு பிறகு ஒரு தீர்வை அண்மித்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் உடன்பிறப்புகளின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் தடையாக இருந்து விடக்கூடாது . முஸ்லீம்களுக்கும், தென்இலங்கை தமிழர் களுக்கும் சேர்த்து புலிகளே போராட வேண்டும் என்று நாம் கருதிவிடக் கூடாது. ஏற்கனவே புலிகளின் வீர போராட்டத்தினால்தான் தென்இலங்கை தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் நியாயம் வழங்கிட வேண்டும் என்று ஓரள வுக்காவது பேரினவாதம் அசைந்து கொடுக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே அந்த இடத்திலிருந்து நாம் ஆரம்பித்து நமது அரசியல் போராட் டங்களை புலிகளுடனான புரிந்துணர்வுடன் முன்னெடுக்க வேண்டும் என்பது எனது உறுதியான நிலைப்பாடாகும்.

மலையகத்தில் வாழும் தமிழர்களுக்கான அரசியல் எதுவென்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. மலையகத்தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்றும் அந்த இனத்திற்கும் சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்றும் மலை யக மாகாணம், பிரதேச சுயாட்சி என்றெல்லாம் கோஷமிட்டவர்கள் அதற் கான அரசியல் போராட்டங்கள் எதையுமே செய்யவில்லை.

இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவரும் ஒரே தேசிய இனம் என்று ஒருநாளும் மலையகமக்கள் தனியான தேசிய இனம் என்று இன்னொரு நாளும் தமிழர்களை வெறும் சிறுபான்மை இனம்என்று மறுநாளும் மாற்றி மாற்றி பேசிமக்களை குழப்பும் கலாசாரம் மாறவேண்டும்.

வடகிழக்கில் இடைக்கால நிர்வாகமும் நிரந்தரசுயாட்சித்தீர்வும் புலிகளின் தலைமையில் உருவாவதற்கு உரிய மனமாற்றத்தை சிங்கள சகோதரர்கள் மத்தியில் உருவாக்குவதே எமது தேசியக்கடமையாக்ககருதி செயற்படவேண்டும்.

மாறாக, முதலில் வடகிழக்கையும் அடுத்து மலையகத்தையும் அதையடுத்து மேல்மாகாணத் தையும் புலிகள் பிரித்தெடுப்பார்கள் என்ற அச்சத்தை சிங்கள மக்கள் மனங்களில் ஏற்படுத்தும் அரசியலைக் கைவிட வேண்டும்.



பாடசாலை மாணவர்கள் மேற்படிப்பு படிக்கும் மாணவர்கள் உட்பட பலரும் முதுகில் சுமந்து செல்லும் பைகளையே பயன்படுத்துகின்றனர். இது அவர்களுக்கு வசதியாப இருப்பதுடன் தேவையான அளவு பொருட்களையும் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கிறது. இதனால் மாணவர்கள் பெரும்பாலும் முதுகில் சுமந்து செல்லும் பைகளையே நாடுகின்றனர். எனினும் இந்த புத்தகப் பைகளைத் தொடர்ச்சியாகப் பாவிப்பதனால் பாரிசவாதம் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக தற்போது திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதுகில் சுமக்கும் பாரம் கூடிய புத்தகப் பைகளினால் முள்ளந்தண்டு முதுகு தோள் பட்டைமற்றும் கழுத்துப் பகுதிகளில் வலி ஏற்படுகின்றது. இவ்விதமான பாரம் கூடிய புத்தகப் பைகளைத் தொடர்ச்சியாக முதுகில் சுமப்பதனால் தோள்பட்டைக்குச் செல்லும் நரம்புகள் சுருங்கி காலப்போக்கில் பாரிசவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் இருப்பதாக முள்ளந்தண்டு சம்பந்தமான நோய்க்கான அமெரிக்காவின் ஊநனயசள ஞஸயெ நிலையத்தின் இயக்குநர் டாக்டர் அவ்ரொம் கார்ட் தெரிவிக்கின்றார்.

புத்தகப் பையின் அதிகூடிய பாரத்தை சமாளிக்க பிள்ளைகள் ஒருபுறம் சரிந்தோ அல்லது முன்புறம் வளைந்தோ தான் நடக்கிறார்கள். இதனால் அவர்கள் வளர்த்த பின்னரும் கூனல் தன்மை தொடர்வதாக டாக்டர் கார்ட் தெரிவித்துள்ளார்.

கைகளில் சுமந்து செல்லும் புத்தகப் பைகள் மற்றும் பிரீப்கேஸுடன்

# பாடசாலை மாணவர்களுக்கு பாரிசவாத வாய்ப்புக்கள்

ஒப்பிட்டுப் பார்க்கையில் முதுகில் சுமந்து செல்லும் பைகள் வசதியாக இருக்கின்றன முதுகில் சுமக்கும் பைகளை கொண்டு செல்வதனால் பிள்ளைகளுக்கு முதுகின் கீழ் புறத்தில் வலி ஏற்படுவதுடன் விரைவில் களைப்படைந்தும் விடுகின்றனர். தமது உடல் எடையை விட 15 சதவீதம் அதிக எடை கொண்ட புத்தகப் பைகளை சுமந்து செல்லும் பிள்ளைகளில் 50 சதவீத மானோர் முதுகு வலிக்கு உள்ளாவதாக அமெரிக்காவின் பிஸியோதெரபி சங்கம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.



எனினும் இங்கிலாந்தின் மன்செஸ்டர் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின்படி முற்றிலும் மாறு பட்ட முடிவுகள் கிடைத்துள்ளன. வயிற்றுக் கோளாறு, தலையிடி, தொண் டைப்புண் போன்ற நோய்களை உடைய சிறுவர்களே அதிகளவில் முதுகு வலியால் அவதிப்படுவதாக அந்த ஆய்வு கூறுகிறது.

11 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட சுமார் 1000 மாணவர்கள் இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் பாரம் கூடிய புத்தகப் பைகள் தொடர்பில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன.

இலங்கையின் கல்வித் திட்டங்களுக்கு அமைய மாணவர்கள் நாளாந்தம் பெருமளவான புத்தகங்களை பைகளில் சுமக்கின்றனர். முதுகில் சுமக்கும் புத்தகப் பைகளினால் ஒரேயடியாக ஆபத்து இல்லை என முடிவு கட்டிவிட முடியாது. எதுவாயினும் வருமுன் காப்பது நல்லது.

அதனால் பிள்ளைகள் பயன்படுத்தும் புத்தகப் பைகளில் கூடுதல் கவனம் செலுத்துவது நல் லது.

* உடல் எடையைவிட 15 சதவீதத்திற்கும் அதி கமான எடையை கொண்ட புத்தகப் பைகளை தவிர்த்தல்.

* இருபுறமும் வார்களையுடைய சிறந்த பைகளை தெரிவு செய்தல் பைகளின் கனத்தை அவதானித்து தேவையில்லாத புத்தகங்களை சுமப்பதை தவிர்த்தல்.

இதுபோன்ற வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் ஆபத்துக்கள் வராமல் காத்துக் கொள்ளலாம்.




# பின்தங்கிய பிரதேசத்தில் முன்னேறிய பணி


கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் பலருக்கும் பல விதமான இழப்புக்கள் ஏற்பட்டன. பதவியிலிருந்த சிங்கள பேரினவாத அரசாங்கங்கள் தமிழர்கள் மீது பல்வேறு விதமான தடைகளை விதித்து நாளாந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி வந்தன.

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தியது.

அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்கியது.

பின்னர் அரசாங்கத்திற்கும் தமிழீழ புலிகள்

-துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை



இயக்கத்தினருக்கும் இடையில் ஆறு சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றன.

யுத்த காலத்தில் வன்னிப் பிரதேசம் மிகவும் பாதிக்கப்பட்டுப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. உணவு மருத்துவம் உட்பட மின்சாரம் தொலைபேசி போன்ற வசதிகள் நிறுத்தப்பட்டன. அமைதிச் சூழ்நிலையை அடுத்து தொலைபேசி இணைப்புகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சர்வதேசத் தமிழ் தொழில்நுட்ப நிபுணர்களின் அமைப்பு கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சி நகரில் வன்னிடெக் என அழைக்கப்படும் வன்னி தகவல் தொழில்நுட்ப நிலையத்தை ஆரம்பித்தது. அதியுயர்ந்த தொழில்நுட்பத்தில் இயங்கும் இந்த நிலையத்தில், முப்பதிற்கும் மேற்பட்ட கண்ணிகள் உள்ளன. இங்கு கண்ணித்துறை சார்ந்த மென்பொருள், வலையமைப்பு போன்றனவற்றில் நான்கு பாடத்திட்டங்கள் கற்பிக்கப்படுகின்றன.


ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும் பாடத்திட்டங்களில் 60 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் 53 சதவீதமானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அநேகமான மாணவர்கள் க.பொ.த(உயர்தரம்) வரை கல்வி கற்றுள்ளனர். தூர இடங்க ளிலிருந்து வரும் மாணவர்கள் அங்கேயே தங்கியிருந்து கல்வி கற்பதற்கான வசதிகள் உள்ளன. டீசலில் இயங்கும் இரண்டு மின்பிறப்பாக்கிகள் மூலம் தடையின்றி மின்சாரம் வழங்கப்படுகிறது .

இங்கு ஒன்பது மாதங்கள் கல்வி கற்றபின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்களில் இரண்டு வருடங்கள் பணியாற்ற வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் , மொறட்டுவைப்பல்கலைக்கழகம் ,சென்னைப்பல்கலைக்கழகம் , ஆகிய பல்கலைக்கழகங்களைச்சேர்ந்த கணனித்துறை நிபுணர்கள் இங்கு

கற்பிக்கின்றனர். இலர்களைத்தவிர புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் கணனிதுறைசார்ந்த நிபுணர்களும் அடிக்கடி கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு தமது அறிவையும் அனுபவத்தையும் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். இவர்களில் பலர் எதுவித கட்டணங்களும் அறவிடாமல் தமது சேவையை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

''எனது உறவினர் ஒருவரைச் சந்திப்பதற்காக வன்னிக்கு வந்தேன்.



வன்னி டெக்கின் சேவைகளால் ஈர்க்கப்பட்டேன் . இங்கேயேதங்கிவிட்டேன். இந்தியாவிற்கு மீண்டும் திரும்பிச்செல்லவில்லை. தொடர்ந்தும் இங்கேயே சேவையாற்றுவேன்'' என கணனித்துறை நிபுணரான செந்தில் கூறினார்.

"நான்மூன்று வயதில் பெற்றோருடன் கனடாவில் குடியேறி விட்டேன். ஒவ்வொரு கோடைக்கால விடுமுறையின் போது வன்னியிலுள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க முடிவெடுத்துள்ளேன். இதன்படி தற்பொழுது வன்னியிலுள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்து வருகிறேன். இங்குள்ள மாணவர்கள் ஆங்கிலிலக்கணத்தை சரியாக்க் கற்றுள்ள போதிலும் , ஆங்கிலத்தில் பேசுவதற்கான சூழலை அமைத்துக்கொடுக்க வேண்டும். நான் கனடாவில் வசித்தாலும் இதுதான் எனது தாய்நாடு'' என்றார் பெருமையுடன் கல்பனா நாகேந்திரன்.

''யுத்தம் தொடர்ந்திருந்தால் இவ்வாறானதொரு தகவல் தொழில் நுட்பம் வன்னியில் நிறுவப்பட்டிருக்காது. .இது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம். கணனித்துறையில் நிபுணத்துவம் அடைவதே எனது குறிக்கோள். "என்று ஒரு மாணவரும் கருத்துத் தெரிவித்தார்.

இவரைப் போல் அங்கு கல்வி கற்கும் மாணவர்களில் பலரும் கருத்துத் தெரிவிக்கும் போது பத்திரிகைகள் சஞ்சிகைகளில் கணனிபற்றி பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளையும் புகைப்படங்களையும் பார்த்துள்ள போதிலும் இப்பொழுதுதான் கணனியை முதல் தடவையாகப்பார்ப்பதாகவும்இந்த அமைதிச் சூழ்நிலை தொடர்ந்தால்

(40ஆம் பக்கம் பார்க்க)




# தரமான பாடல்கள் எவை?



ஒப்பற்ற கவிதை ஒரு கவிஞனின் படைப்பு திறனால் மட்டுமே பிறப்பதில்லை. உலகம் அதிர்ஷ்டம் செய்ததாலேயே பிறக்கிறது. நித்தியஸ்ரீமகாதேவனின் சங்கிதமும் அப்படித்தான் பிறந்ததாக தோன்றுகிறது.

கர்நாடக இசை சக்கரவர்தினியும் திரைப்பட பாடகியுமான நித்தியஸ்ரீ அண்மையில் கொழும்பு வந்திருந்த போது இலங்கை விகடனுக்கு சிறப்பு பேட்டியொன்று அளித்திருந்தார்.

கர்நாடக இசையை மறந்து விட்டுத்தான் திரை இசையை பாடுகிறேன் என்று புன்சிரிப்புடன் ஒளிவு மறைவின்றி கூறிய நித்தியஸ்ரீ தொடர்ந்து சொன்னதாவது;

'திரைப்படத்திற்காக பாடுற சமயத்தில் இந்தப்பாடல் இந்த ராகத்திலேர்ந்து மாறுபட்டு இருக்கே? இப்படி எல்லாம் இருக்கமுடி யாதே என்று எண்ணுவது கிடையாது. இசைய மைப்பாளர் எதைச்சொல்லிக் கொடுக்கி றாரோ அதை அவர் ஓ.கே சொல்ற வரைக்கும் பாடணும். அந்த ஹீரோயினிக்கு குரல் சரிவரனும். அந்த சிற்றுவேஷ னுக்கு என்னோட குரல் பொருந்தனும். அந்த பாபத்தை நான்

வெளிக்கொணரணும்;

ஆனால், கர்நாடக மேடைக் கச்சேரிகளில் பாடும் போது அந்தப்பாடலை நான் முழுமையாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். இது என்ன தாளம்? என்ன ராகம்? என்று அறிந்து ரொம்பத்தடவைகள் ப்ரக்ரீஸ் செய்யனும். அப்போதுதான் ஒரு 25 சதவீதமாவது இசைக் கச்சேரியை கிரியேட்டிவ் பண்ண முடியும். மொத்தத்தில் இரண்டுமே கஸ்டமானதுதான் என்றார்.

தற்போது வெளிவரும் திரைப் படப்பாடல்கள் குறித்து உங்களது அபிப் பிராயம் என்ன என்று கேட்ட போது அவர் கூறியதாவது, இப்ப வருகின்ற பாடல்கள் எல்லாம் மேலைத் தேயசங்கீத பாணியை அடிப்படையாகக்கொண்டு இரட்டை அர்த்தப்பாடல்களாக விளங்குகின்றன.

இது குறித்து நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் இசையமைப்பாளர்களிடம் கேட்டால் இரட்டை அர்த்தப் பாடல்களைத்தான் ரசிகர்கள் விரும்புகிறார்கள் என்கிறார்கள்.

ரசிகர்களோ ஆரோக்கியமான பாடல்கள் வெளிவரவில்லையே என்று ஆதங்கப்படுகிறார்கள். இசையமைப்பாளர்கள் மீது குறை காணுகிறார்கள். இப்படி இரண்டு தரப்பும் மாறிமாறி ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துவதால் தரமான பாடல்கள் வெளிவருவதற்கான வாய்ப்பை கடவுள்தான் ஏற்படுத்த வேண்டும்.

இசை ஒரு கடல். எத்தனையோ முத்துக்களும் வைரங்களும் அதற்குள் மூழ்கியிருக்கிறன. நிறைய தரமான பாடல்களை வெளிக்கொணர முடியும். தரமானது எனும்போது ஒரு பாட்டைக் கேட்டவுடன் மக்கள் மனங்களில் நல்ல எண்ணங்கள் பரவவேண்டும். மனம் அமைதி அடைய வேண்டும். இந்த மாதிரியான நல்ல உணர்வுகளை ஏற்படுத்தக் கூடிய பாடல்கள் வெளி வர வேண்டுமென்று கூறிய நித்தியஸ்ரீ பாரம்பரிய சங்கித பரம்பரையின் வழி வந்தவராவர்.

கானசரஸ்வதி, சங்கீத கலாநிதி டி.கே.பட்டம்மாளின் பேர்த்தியாகிய நித்தியஸ்ரீ தனது தாயாரையே குருவாக போற்றும் அரிய பாக்கியத்தைப் பெற்றவர்.தமிழிசை மாமணி லலிதா சிவகுமார், திருப்புகழ் மாமணி மற்றும் மிருதங்க வித்துவான் ஐ.சிவகுமார் இவருடைய பெற்றோர்ஆவர். தகப்பனார்தான் தற்பொழுது நித்தியஸ்ரீயின் கச்சேரிகளுக்கு மிருதங்கம் வாசிக்கின்றார். கணவன் மகாதேவன் பொறியியலாளர் ஆவார்.

இசைக் கச்சேரிகளின் போது சினிமாப் பாடல்களைத் தவிர்த்து பக்திப் பாடல்களை பாடி வரும் நித்தியஸ்ரீயுடனான பேட்டி கேள்வி பதில் வடிவில் கீழே தரப்பட்டுள்ளது :

கேள்வி:- இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹூமான் உங்களை திரையுலகுக்கு அறிமுகப்படுத்தினார். (கண்ணோடு காண்பதெல்லாம் - ஜீன்ஸ்)அந்த வகையில் உங்களுக்கு பிடித்த் இசையமைப்பாளர்?.

பதில்:- ஒவ்வொரு இசையமைப்பாளரிடமும் ஒவ்வொரு சிறப்பம்சம் இருக்கிறது.ஆகையால் அவர்களுக்கு ஒவ்வொரு விதமான தனித்துவம் கிடைக்கிறது. கண்ணோடு காண்பதெல்லாம் மாதிரி தெரிவு செய்யப்பட்ட பாடல்களைப் பாடினாலும் கூட முன்னணியில் இருக்கிற அத்தனை இசையமைப்பாளர்களின் இசையமைப்பிலும் பாடியிருக்கிறேன்.

கேள்வி:- கர்நாடக இசைக்கலைஞரான நீங்கள் தொடர்ச்சியாக

"கர்நாடக இசைக்கு நான் சின்னவள். நான் இசைக்கு தருவதை விட இசை எனக்கு நிறைய தருகிறது."

துரைபபடப பாடலகளைப பாடும போது ஏதாவது பாதிப்புகள் ஏற்படு வதாக கருதுகிறீர்களா?

பதில்:- நான் தெரிவு செய்து பாடல் களை பாடுவதால் குறைந்தளவில் பாடல்களையே பாடியுள்ளேன். இதனால் இப்போதைக்கு ஒரு பாதிப்பும் இல்லை.திரைப்படப் பாடல் களில் நான் தீவிர கவனம் செலுத்தி னால் ஒரு வேளை பாதிப்பு ஏற்படலாம்.

கேள்வி:- இசை அல்பம் ஏதாவது வெளியிட்டுள்ளீர்களா?

பதில்:- " க்ளாசிகல் " அல்பங்கள் நிறைய வெளியிட்டுள்ளேன்.

கேள்வி:- இயேசுதாஸ், உன்னி கிருஷ்ணன் போன்ற இசைக் கலை ஞர்கள் போல் திரை இசையில் ஏதா வது முத்திரை பதிக்க விரும்பு கிறீர்களா?

பதில்:- ஒவ்வொருத்தருக்கும் ஒவ் வொரு தனித்துவம் இருக்கிறது. அவர்களின் குரல்களில் பேசும் சங்கதி கள், இசை நுணுக்கங்கள் என்னுடைய குரலில் செய்ய முடியாது. ஆனால் எனக்கும் ஒரு சில தனித்துவங்கள் இருக்கிறன. இவர்களுக்கு மேலே போகவேண்டும் என்கிற எண்ண மெல்லாம் கிடையாது. ஆனால் நான் என்னை கர்நாடக இசையில் முழுமையாக அர்ப்பனித்து எவ் வளவு புதுப் பாடல் பாட முடியுமோ அதை நான் பாடியிரு க்ககிறேன்.

கேள்வி :- இசைத் துறையில் உங்களது எதிர்கால திட்டம் என்ன?.

பதில்:- கர்நாடக இசைக்கு நான் சின்னவள். நான் இசைக்கு தருவதை விட இசை எனக்கு நிறைய தருகிறது.

கேள்வி :- நீங்களாகவே சாகித்தியம் ஏதும் செய்திருக் கிறீர்களா?

பதில்?:- பதினைந்து பாடல் கள் வரை கம்போஸ் பண்ணி யிருக் கின்றேன். சமீபத்தில் கால மான யாழ்ப்பாண வீரமணிஐயா போன் றவர்களது பாடல்களை கம் போஸ் பண்ணவேண்டு மென்று விருப்பம் உள்ளது. என்னுடைய குரலில் நூற்றுக் கணக்கான ஒலிநாடாக்கள் வெளியிட வேண்டும். இசைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் போன்ற ஐடியாக்கள் உண்டு.

கேள்வி:- சமீபத்தில் பாடிய திரைப்படப் பாடல் எது?

பதில்: புரட்சிக்காரன் படத்தில் பாடியுள்ளேன்.

னா..ன...ன.ன... பாரதி தாசனார் உடையது

தூங்கும் புலியை திரை கொண்டு எழுப்பினோம். இலங்கை விகடன் வாசகர்களுக் காக பாடலை பாடியும் காட்டி னார்.

-பகவத்சிங் நிரஞ்சன

(35ம் பக்கத் தொடர்ச்சி)
வன்னியில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மாணவர்களும் கணனிபற்றிய அறிவை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வன்னிடெக்கில் கல்வி பயிலும் மாணவ மாணவியர் பல்வேறு வித மான கருத்துக்களைத் தெரிவித் தனர்.

ஒன்பது மாதங்களுக்கு கற்பிக் கப்படும் பாடத் திட்டங்களை இரண்டு வருட காலப்பாடத் திட்டங்களை மாற்றியமைக் கப்படுவதே வன்னி உடனடிக் குறிக்கோளாகும்.

அத்துடன் கிராமப்புற பாடசாலை மாணவர்களுக்கு கணனியின் அவசி யத்தை அறிமுகம் செய்து அதன் நன்மை கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது.

2002ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நிறுவப்பட்ட சர்வதேச தமிழ் தொழில்நுட்ப நிபுணர்களின் அமைப்பு இலங்கையிலும் பதிவு செய்யப்பட்டுள் ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி அபிவிருத்தித் திட்டங்களுக்கான சேவையை வழங்குவதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

# அவன் என்னை காதலிக்கிறானா?



நீங்கள் ஒருவனை காதலிக்கிறீர்கள். ஆனால் அதே சமயம் அவனிடம் சென்று "ஐ லவ் யூ" சொன்னால் எங்கே உங்கள் மூக்கு உடைந்து விடுமோ என்று பயமாக உள்ளதா?

அவன் உங்களை காதலிக்கிறானா என்று கண்டுபிடிக்க இதோ சில அணுகுமுறைகள்.

அவன் உங்களை காதலிக்கிறான் என்றால்:

- காரணமே இல்லாமல் தினமும் பலமுறை தொலைப்பேசியில் தொடர்பு கொள்வான்.
- அவன் அம்மாவின் பிறந்த நாள் பரிசை தேர்ந்தெடுக்க உங்களை அழைத்துச் செல்வான்.
- நாள் முழுவதும் செய்ததை ஒன்றுவிடாமல் உங்களிடம் சொல்வான்.
- அவன் உபயோகிக்கும் சென்ட், "ஆஃப்டர் ஷேவ்" ஆகியவை உங்களுக்கு பிடித்துள்ளதா என்று கேட்பான்.
- ஒரே கதையை பல முறை சொன்னாலும் கவனத்துடன் குறுக்கிடாமல் கேட்பான் (கேட்பது போலாவது நடிப்பான்.)
- உங்களுக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்று கேட்டுத் தெரிந்து கொள்வான்
- நண்பர்களோடு நேரம் செலவழிப்பதை விட உங்களோடு இருக்க விரும்புவான்.

# காஸ் சிக்கனத்துக்கு

**காஸ் அடுப்பை உபயோகிப்பவர்கள் காஸை சிக்கனமாக பயன்படுத்தி சமைப்பதற்கு சில எளிய வழிகள்:**

✠ பாத்திரங்களைத் திறந்து வைத்து சமைப்பதை பெரும்பாலும் தவிருங்கள்.

✠ சமைப்பதற்கு ஒடுக்கமான பாத்திரங்களுக்கு பதிலாக அகலமான பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள்.

✠ பருப்பு, தானிய வகைகளை சில மணி நேரத்திற்கு முன்பாகவே ஊறவைத்து விடுங்கள். இப்படி ஊற வைத்து சமைக்கின்றபோது 22 சதவிகிதம் காஸ் மிச்சமாகிறது.

✠ பால் போன்றவற்றை குளிர்சாதனப் பெட்டியிலிருந்து உடனடியாக காஸ் அடுப்பில் வைக்கவேண்டாம்.

✠ காய்கறிகளை திட்டமிட்டு முன்பே நறுக்கி வைத்துக்கொள்ளுங்கள்.

# உண்மையின்

பக்கங்கள்

றோட்டில் மாடொன்று நைலக்ஸ் சேலை ஒன்றை முகத்தி லும் கழுத்திலும் எடுத்துப் போட்டவாறு, ஒரு பெண் ஓய்யாரமாக நடந்து வருவதுபோல் வந்து கொண்டிருந்தது, அவனை வியக்க வைத்தது.

மு. பொ

மாட்டுக்கு யார் சேலை அணிவித்தது? அல்லது மாடு எவ் வாறு சேலை அணிந்து கொண்டது?

அதை விளங்கிக்கொள்ள அவனுக்கு அதிக நேரம் எடுக்க வில்லை.

பூட்டிவிட்டு யாழ்ப்பாணம் ஓடியவர்களின் வீடுக ளெல்லாம் உடைக்கப்பட்டுவிட்டன.யார்வீடுகளை உடைத்தார்கள் என்பதுதான் இன்னும் ரசனைக்குரி யது. புங்குடுதீவிலுள்ள தமது உறவினரை சந்திக்க வந்ததாகச் சொல்லிக் கொண்டவர்கள், தமது உற வினரோடு சேர்ந்து இரவு இரவாக ஒவ்வொரு வீடு வீடாகப் பேய்கள் மாதிரிப் புகுந்தவர்கள் இஇவ்வொரு வீடுகளுக்குள் இருந்தும் விலை மதிப்புள்ள சேலை கள் என்றும் சில்வர்கள் என்றும் மூட்டைகட்டிக் கொண்டுதான் வெளி வந்தார்கள்.

## • கைது செய்யப்

மூட்டை கட்டப்பட்ட பொருட்கள் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டன.
இந்தக் களவும் கடத்தலும் உச்சநிலை அடைந்தபோது, அதைக் கண்காணிப்பதற்காக
முக்கியமான இடங்களில் ஈ.பி.டி.பி.யினர் "சென்றி" போட்டு காவல் செய்தும்
அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை
இப்படியாக உள்ளூர், வெளியூர் கள்ளர்களால் திறந்துவிடப்பட்ட வீடுகள்,
போவோர் வருவோரை "வா வா"வென அழைத்தன. மக்கள் இடம்பெயர்ந்து
விட்ட ஊரில் றோட்டில் போவோர் வருவோராய் இருந்தவர்கள் மக்கள்
அல்ல: ஆடுகளும், மாடுகளும், நாய்களுமே வழமைக்கு மாறாக
என்றைக்குமில்லாத மாதிரி திறந்து விடப்பட்டு "ஹோ" வெனக் கிடந்த
வீடுகளைப் பார்த்தபோது, மிருகங்களே ஏதோ வென்றால்
தூண்டப்பட்டவைபோல் உள்ளே நுழைந்து பார்க்க விரும்பின.

நாய்கள் உள்ளே புகுவதற்கு முன், எப்பவுமே தாம் செய்வதுபோல் சுற்று
முற்றும் பார்த்துவிட்டு நேரடியாகவே சமையல் அறைக்குள் நுழைந்தன.
ஏற்கனவே ஜன்னல்கள் ஊடாக நுழைந்து அவ்விடங்களைத் தமதாக்கி
விட்டிருந்த பூனைகள் இவற்றைக் கண்டதும் சீறிக்கொண்டு வெளியே
பாய்ந்தன.

ஆடு, மாடுகளுக்கு முன்பின் பார்க்கிற, கபடம் நிறைந்த எந்தவித
யோசனைகளும் இல்லாததால் அவை நேராகவே தமக்கு பிடித்த
வீட்டறைகளுக்குள் புகுந்தன. அங்கே இருந்த பெட்டகங்கள், அலுமாரிகள்
என்பவற்றிலிருந்த உடுப்புகள் திருடர்களால் வெளியே எடுத்து உதறப்பட்டும்,
சிதறப்பட்டும் கிடந்தன. உள்ளே சென்ற மாடுகளும், ஆடுகளும் அவற்றின்
மேல் சாணமிட்டன, புளுக்கை போட்டன, சலம் வடித்தன. ஈற்றில்
சிந்திக்கிடந்த உடுப்புகள் சிலவற்றை வைக்கோலை இழுத்தெடுத்து உண்பது
போல் உண்டவாறு வெளாயே வந்தன. அலுமாரிக்குள் இருந்து வெளியே
இழுத்தபோது உடுப்புகள் அவற்றின் மேல் விழுந்து சாமிக்கு பட்டு சாத்துவது
போல் அவற்றை அலங்கரிக்க வெளியே அவை ஆடி அசைந்து வந்த காட்சி
கண் கொள்ளாததாகவே இருந்தது.

பார்க்கும் இடமெல்லாம் திறந்த வீடுகள்
அப்படி திறக்கப்படாத வீடுகள் இருக்குமானால் அங்கே
இடம்பெயராது எஞ்சிபோன "கிழடு கட்டைகள்"
காவலுக்கு கிடக்கின்றன என்பதுதான் அர்த்தம்.
பெரிய வெற்று சங்கு கோதுக்குள் உள்
நுழைந்துவிட்ட சிறுபூச்சிகள் போல் அவர்கள்
அந்த வீடுகளுக்குள் நடமாடினர். தங்களால்
சமைக்க முடியாத நிலையில் அடிக்கடி
"வெறுந்தேத்தணி" மட்டும் குடித்து

ட்ட கிராமம் • 7

விட்டு ஊசலாடினர்.

சிலர் "சீலம் பாயை" விரித்து அதன் மேல் அழுக்கு தலையணையை தலைக்கு போட்டுவிட்டு படுத்திருந்தனர். பூனையொன்று அப்படி கிடந்த ஒருவரோடு ஒட்டிகொண்டு கிடந்தது. வீட்டு நாய் அடி வளவில் நின்று ஊளையிட்டு கொண்டு நின்றது. அது அடிக்கடி ஊளையிடுவதும் திடீர் என்று விசர் பிடித்தது போல் முற்றத்திற்கு ஓடி வருவதுமாய் இருந்தது.

அப்போது அப்பக்கத்தால் ஊரதீவிலிருந்து சைக்கிளில் வந்த நடுத்தர வயது மதிக்கத்தக்க வேலுப்பிள்ளை சைக்கிளை ரோட்டு கரையோரமாக சாத்திவிட்டு "தம்பி ராசண்ணை லம்பிராசண்ணை" என்று கூப்பிட்டவராய் உள்ளே நுழைந்தார். தம்பிராசண்ணை நீட்டி நிமிர்ந்து சீலம் பாயில் கிடந்தார். அவரது ஊன்று கோல் தூர போய் கிடந்தது. அவரிடமிருந்து எதையோ காவிக்கொண்டு ஓடுவதுபோல் அவரோடு கிடந்த பூனை பாய்ந்து போயிற்று.

வேலுப்பிள்ளை இன்னும் நெருங்கி தம்பிராசண்ணையை பார்த்தார்.வாய் அவிழ்ந்த நிலையிலும் கண் வெறித்த நிலையிலும் அவர் கிடந்தார். "ஆள் செத்து போச்சு" என்று வேலுப்பிள்ளை தனக்குள் சொல்லியவாறு விறுவிறுவென வெளியே வந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார். தூர தூர இருந்த ஒவ்வோர் ஆட்களின் வீட்டு படலையையும் திறந்து தம்பிராசண்ணை செத்து போனதை அறிவித்துப் போனார்.

அன்றிரவு தம்பிராசண்ணையின் பூதவுடலின் தலைமாட்டில் ஒரு சிறு குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவரை சுற்றி வேலுப்பிள்ளையின் தலைமையில் இரண்டொருவர் தேவாரம் பாடிக்கொண்டிருந்தனர். இடைக்கிடை நாலைந்து வயதுபோன பெண்கள் உயிரற்ற குரலில் நித்திரையிலிருந்து விழித்துகொண்டவர்கள் போல் ஒப்பு சொல்லிஅழுவதும் மூக்கை சீறி சேலை தலைப்பால் துடைப்பதுமாய் இருந்தனர்.

அடுத்த நாள் காலை பத்து மணி போல் தம்பிராசண்ணையின் பாடை சுடலையை நோக்கி நகர்ந்தது.

நான்கு முனைகளிலும் வாழைக்குட்டிகள் வைத்து கட்டப்பட்ட பாடை. சோடனை கடதாசிகள் எதுவும் இல்லை. சவப்பெட்டி இல்லாது பன்னாங்கில் தம்பிராசண்ணையின் பூதவடல் கிடத்தப்பட்டிருந்தது. பாடையைக் காவிய நான்கு பேருக்கு பின்னால் ஐந்தாறு பேர் தேவாரம் பாடிக்கொண்டு செல்ல வேலுப்பிள்ளையர் சங்கூதி கொண்டும் தில்லையர் சேமக்கலம் தட்டிக்கொண்டும் சென்றார்.

மேளம் அடிக்கும் குடி மக்கள் இல்லை. கொள்ளி வைக்கும் கருமாறிகளை செய்யும் நாவிதரும் இல்லை. நாவிதர் நேவிக்காரருக்கு "சேவகம்" செய்யப்போய்விட்டதாக கேள்வி. சடங்குகள் நீத்த தம்பிராசண்ணையின் தகனம் மணல் காட்டு சுடலையில் "சிறப்பாக" நடைபெற்றது.

வேலுப்பிள்ளையரின் கையாள் ஒருவர் சுற்றி வந்து கொள்ளி குடத்தை உடைத்துவிட்டு கொள்ளி வைத்தார். காவோலைகளில் பட்ட தீ திகுதிகுடிவன எரிய ஆரம்பித்தது.

(இன்னும் வரும்)

• கைது செய்யப்பட்ட கிராமம் • 7

# வலம் வரும் உலா







கி.பி.167 ஆம் வருடம் -

வெண்ணிப் பரந்தலை.பெயருக்கேற்ப பெரும் பொட்டல்வெளி கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெளிதான். பரந்தலையில் தண்டலிறங்கியிருந்தது மூவேந்தர் பெரும்படை.

சேரமாமன்னர் பெருஞ்சேரலா தனின் விற்கொடியின் கீழ் மேற்கே ஒரு காத தூரம் வரை பரவி நின்றனர் சேர்ர்பெரும் படை.

ஆம்பிராவாதி ஆற்றுநீர் வளைந்தோடும் பிரதேசம் வரை பரந்து நின்ற கருவூர் வஞ்சிக் கோட்டையில் நின்றும் சில தினங்களின் மேற்தான் வெளிப் போந்திருந் தான் பெருஞ்சேரலா தான். கிழக்கே தண்டவிட்டிருந்தது தென்னவன் பாண்டி யனின் மீன் கொடிக் கம்பத்தில் திரண்ட பாண்டியர். படை.பட்டொலி வீசிப் பறந்தபடி புலிக் கொடி. வெண்ணிப் பரந்தலையில் மையம் கொண்டிருந்தது. சோழர்கள் ஆழியென திரண்டிருந்த னர். முன் முகப்பே இருங்கோவேன் மன்னவன். கன்னவன் தலைமையின் கீழ் மாரப்பவேன், நாங்கூர்வேன் போன்ற வெளிர் குல சிற்றர சர்கள் பன்னிருவர்.

பொன்னிந்தி தழுவி யோடும் உறையூர் கோட்டையினின்றும் சிலதினங்கள் வெளிப்பட் டிருந்தான் சோழ மன்னன். மூவேந்தர்கள் விழிகளி லும் எதிர்பார்ப்பின் ஏமாற்றம் தந்த வெஞ்சினம்.

சில தினங்கள் முன்பே, ஏரி, குளம், குட்டை முதலிய நீர் நிலைகள் அழிக்கப்பட்டிருந்தன. வேளாண்மை, கரும்புத்தோட்டங்கள் பயிர் பச்சையெல்லாம் தீயூட்டிருந்தன. மருதநிலத்து மக்கள் வெருட்டி விரட்டப்பட்டிருந்தனர். கால்நடைகள் அபகரிக் கப்பட்டிருந்தன. இவ்வளவு

— அபூஅன்வர்

## புலிக்கொடியுடன் களம் இறங்கிய வீர வேங்கை

அடாதுட்டிகளை விளை வித்து நின்றவன்; கரிகாலன்.
மிகி இளவல் சில காலத்திற்கு முன் சேர பாண்டியர்களை ஒடுக்கி, திறை செலுத்தும் சின்னரசர்களாக்கி சோழப் பேரரசின் பெரு மாமன்னனாக வீற்றிருந்த இளஞ்சேட் சென்னியின் வீரமைந்தன்.
உறவு பூண்டு உண்டு களித்து, குடிக்க கொடுத்து, உறையூர் அரண்மனையில் அரசன் மயங்கிய வேளையில், இரவோடிரவாக தீப்பந்தல் தளைக்கச் செய்து அரச வம்சத்தையே பூண்டோடழித்து அரியணையையும் கைப்பற்றி இருந்தான். பன்னிரு வேளிர் குல முதல்வனான இருங்கோவேன் மாமன்னர் இளஞ்சேட்சென்னியின் கடைபுதல்வனான திருமாவளத்தான் எனும்;இளவல் மட்டும் தப்பியிருந்தான். கோட்டைக்குள் பாதுகாப்பரன்கள் சூழப் பெற்றிருந்த இருங்கோவேன் சோழப் பெரும் படையும், குறுநில மன்னர்களாகயிருந்து, பெருவரசர்களாக உருப்பெற்ற சேர பாண்டியர்கள் பெரும் படையும் இருங்கோ வேளுக்கு ஆதரவாக த்தம் கோட்டை கொத்தளங்களினின்றும் வெளிப்பட்டிருந்தனர்.
கரிகாலன்; குளம் குட்டைகளை அழித்து, பயிர் பச்சைகளை தீயிட்டு, கால் நடைகளைக் கைப்பற்றவே, மூவேந்தர் பெரும் படையும் இதோவெண்ணிப் பரந்தலையில் திரண்டுவிட்டிருந்தது.
அவர்களை தனியே பொருத எதிர் கொள்வதாய் ஓலை அனுப்பிய இளஞ்சேட் சென்னியின் இளவள் படைத்தான் இன்னும் வந்து சேர்ந்ததாய் காணோம்!
இருங்கோவேள், காதளவோடியிருந்த தன் பெரு மீசையை விரல்களால் நீவி விட்டபடி அட்டகாசமாய் அதிர்ந்து சிரித்தான்.
"இளம்பிராயத்தான் சீண்டிப் பார்த்தான். பெரும் படை தண்டலிட்டதும் வாலைச் சுருட்டி காகைத்தேகிவிட்டான் ஹாஹ்ஹாஹ்ஹே!
சேரனும் பாண்டியனும்சோழனுடன் இணைத்து கொக்கரித்துக் கொட்டினர்.
"ஐந்து நாள் ஏறியும் அரவமே இல்லையே!" எடுத்துக் கொடுத்தான் பெருஞ்சேரலாதன்.
"மாமனாகிய இரும்பிடர்தலையர் சேகரித்த சிறு படை கொண்டு போர்க் களம் புகலாமென மனப்பால் குடித்திருப் பானாக்கும்! என்றான் தென்னவன் பாண்டியன்.
அன்றோடு ஐந்தாவது நாளும் பொழுது சாய்ந்தது.
ஆறாவது நாளும் வந்தது!
இருங்கோவேன் மூவேந்தர் படைகளுக்கும் இருந்தப் பணித்த கடைசி நாள்!.
பகலவனைத் தவிர படையோ, பகைவரோ தென்பட்டிலர். வழமைபோல தாரை தம்பட்டை கொம்புகள் மேல தாளங்கள் முழங்க கேளிக்கைகள்

ஆரம்பமாகின.
பாணர்கள் பெருங்குராலடுக்காயினர்!
மாலையும் வந்தது -
முதலாவது தலையும் தெரிபடலாயிற்று.
கரிகாலன்!வெண்புறவியில் ஆரோ கணித்தபடி.
இடதுகையில் புதிதாயிருந்தது புலிக் கொடி. வலது கையில் நீண்ட பெருவாள். முண்ணனியில் வந்து கொண்டிருந் தது வெறும் காலாட்படை மட்டுமே சொற்பவாயிரம் பேர்.
இருங்கோவேளுக்கே என்னவோ மாதிரியாகிவிட்டது.
'எலியைக் கெல்லி மலையைப் பிடிப்பதா? பெருஞ்சமுத்திரத்தைக் குடித்து முடிக்க சிறு நண்டு முயல்வதா?
வெண்ணிப் பரந்தலையில் வியாபித்துக் கிடக்கும் பெரும்படையின் முன்பேயா? தகுமா?'
இளங்கோவேள் எக்காளம் கொட்டி எள்ளி நகைத்தான்.
" சிறு பிள்ளையாய்! இன்று போய் பிறிதொரு நாள் படைதிரட்டி வா! போ!"
கரிகாளனின் குழந்தை முகத்தில் புன்னகை கீற்றாய் நெளிந்தோடியது. அன்றைய பொழுதும் சாய்ந்தது. சர்ப்ப வியூகம் வகுந்து நீக்கமற நிறைந்து நீண்டு கிடந்த தன் பெரும் படையை திரும்பிப் பார்த்து லயித்து நின்ற இருங்கோவேன்ள்ய் ' இந்த வியூகத்தை எப்படி உடைக்க இந்தச் சிறுபடையை திரட்டி வந்துள்ளான் இந்தச் சிறு பிள்ளாய்?
என்று எக்காளமாய் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.
படையினரிடையே பாட்டும், கூத்தும் இரவு வெகுநேரம் ஏறியும் இரண்டறக் கலந்து கிடந்தன.
பாணனுக்கும் சோர்வு தட்டிப் போயிருந்தது.
சிறு குரலில் அன்ற்றினான்.
முன்னணியில் நின்ற யானைப் படைப் பிரிவினர் யுத்த ஆயத்தம் தளர்த்தி பாகன் சகிதம் மாந்தி மாந்தி களித்து கிடந்தனர்.
இரண்டாவது ஜாமம் தொடங்கிற்று. கஜபடைப்பிரிவின் கண் எதிரே நீண்ட வரிசையாய் திப்பந்தங்கள் திடீரென எழுந்து எரிந்தன.
நீண்ட ஈட்டிகள் சரமாரியாய் யானைகள் தலை கண் காதுகள் துளைத்தன,பொழிந்தன.
யானைகள் பயங்கரமாய் பிளீரிட்டன, உருண்டன. எழுந்த யானைகள் தம் படையினரையே செய்து கொண்டு பின்னோக்கிப் பாய்ந்தன.
சுதாகரித்து எழுந்தான் இருங்கோ வேன். பெரும் படை முன்னே வந்து;

**இந்திய வரலாற்றின் ஆதார பூர்வமாய்தொல் பொருட் பதிவேடுகள், இலக்கியச் சான்றுகள் மூலம் நிரூபிக்கப்பட்ட பெரு வெற்றிப் போர்**

மன்னன் ஆணையிட்டான்.சேரன் படை சுதாகரித்து எழுந்து நின்றாலும் தடுமாறியது.
தன்படை மாற்றான் படை தெரியாது மிரண்டனர்.


தென்னவன் பாண்டியன் நிலையும் இதுவே! வெள்ளிகளின் மினுங்கியடித்த வான் பிரபந்த சிறு வெளிச்சமேயன்றி பொட்டுக்கும் துளி வெளிச்சமேயில்லாத்து அன்றைய இரவு.
அமாவாஆசை இரவு! ,
திடீரென பெருஞ்சேரலாதன் குதிரைப் படை முன்பு தீபபந்தங்கள் வரிசையாய் எழுந்தன.
நீண்ட ஈட்டிகள் பறந்து வந்தன.மனிதர்களும் மிருகங்களும் கதறி மாண்டு விழுந்தனர். விழுந்தன.
பந்தங்கள் அனைந்தன. தென்னவன் பாண்டியன் முன்பும் இதே கதை.
திடீரென திப்பந்தங்கள் ஒளிர்ந்தன.
சேரன் படை சுதாகரித்து எழுந்து நின்றாலும் தடுமாறியது.
தன்படை மாற்றான் படை தெரியாது மிரண்டனர்.

தென்னவன் பாண்டியன் நிலையும் இதுவே! வெள்ளிகளின் மினுங்கியடித்த வான் பிரபந்த சிறு வெளிச்சமேயன்றி பொட்டுக்கும் துளி வெளிச்சமேயில்லாத்து அன்றைய இரவு.
அமாவாஆசை இரவு! ,
திடீரென பெருஞ்சேரலாதன் குதிரைப் படை முன்பு தீப்பந்தங்கள் வரிசையாய் எழுந்தன.
நீண்ட ஈட்டிகள் பறந்து வந்தன.மனிதர்களும் மிருகங்களும் கதறி மாண்டு விழுந்தனர். விழுந்தன.
பந்தங்கள் அனைந்தன. தென்னவன் பாண்டியன் முன்பும் இதே கதை.
திடீரென திப்பந்தங்கள் ஒளிர்ந்தன.
"தாரை தம்பட்டங்கள் முழங்கட்டும். கரிகாலன் சிறு படையை எமது சர்ப்ப வியூகம் சுற்றி வளைக்கட்டும் தலையை பெருஞ்சேரலாதன் மேற்கே வளைத்து வரட்டும். வால் பகுதியால் கிழக்கு படையினரை தென்னவன் பாண்டியன் சூழ்ந்து நெருக்கவும்! ம்! சேரன் படை சுதாகரித்து எழுந்து நின்றாலும் தடுமாறியது.
தன்படை மாற்றான் படை தெரியாது மிரண்டனர்.
தென்னவன் பாண்டியன் நிலையும் இதுவே!
வெள்ளிகளின் மினுங்கியடித்த வான் பிரபந்த சிறு
வெளிச்சமேயன்றி பொட்டுக்கும் துளி
வெளிச்சமேயில்லாத்து அன்றைய இரவு.
அமாவாஆசை இரவு! .
திடீரென பெருஞ்சேரலாதன்
குதிரைப் படை முன்பு
தீப்பந்தங்கள் வரிசையாய்
எழுந்தன.

யுத்த ராஜ தந்திர பூரண மாகப் பயன் படுத்தப்பட்டு பெரும் படைப் பிரிவினரை சிறு தொகையினர் அழித்து ஆதிக்கம் நிலை நிறுத்திய முதற் போர்

(65ம் பக்கம் பார்க்க)

# பயம் எனும் பாம்பு



"பயம் எனும் பாம்பை அடித்திடு-வோம்..."

அறிமுகம் இல்லாத ஒருவர் என்னிடம் சொன்னார். நான் கோவில் கோபுரத்தைக் கும்பிடுவதை நிறுத்திவிட்டு அவரைப் பார்த்தேன்.

"இது... பாரதியாரின் வரிகள் அல்-லவா..."

சொன்னவர் ஆமென்று தலையாட்டினார்.

"இப்ப அதுக்கென்ன..."

"இல்ல... என்ர பயம் எனும் பாம்பை நானிப்ப அடிச்சு கொன்று போட்டன்..."

"ந்ல்லது தானே..."

நான் கோவிலுக்குள்ளே செல்ல முற்பட்டேன். அவர் என்னை பார்-வையால் மறித்தார்.

"பல நாளாய் கோவில் விக்கிரகம் ஒன்றிற்கு குறிபார்த்து வந்தன். இந்த பயமென்ற பாம்புதான் பயமுறுத்தி வந்தது. அந்த கவிஞர் சொன்னதோட நான் பயமெனும் பாம்பை அடிச்சு கொன்று போட்டன்..."

நான் பயந்தே விட்டேன். பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்த அவரை ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

"யார் இவர்...?? இவரைப் பார்த்-தால் களவெடுக்கிறவர் போல இல்-லையே..." என் மனம் என்னுள் பேசிக் கொண்டது.

அவரது முகத்தை பார்க்கவே பய-மாக இருந்தது.

பயத்தோடு கோவிலுக்குள் சென்-றேன்.

**திருமலை சுந்தா**



# உங்களுக்கும் ஆயுள் 100

எம்மோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் எம்மை நினைக்கும் போது திடீரென்று நாம் அவர்கள் முன் தோன்றினால் அவர்கள் உடனே உங்களுக்கு ஆயுசு நூறு, இப்பதான் உங்களை நினைத்தேன் என்று கூறுவார். இதனைக் கேட்கும் எமக்கு எவ்வளவு மகிழ்ச்சி. உண்மையிலேயே நூறு ஆண்டுகள் வாழ யாருக்குத்தான் ஆசை இருக்காது.

ஆசியர்களான எமக்கு இது ஒன்றும் சிரமமான விடயமல்ல. ஏனெனில் நூறு வயதைத் தாண்டியவர்களில் பெரும்பாலானோர் ஆசிய நாட்டைச் சார்ந்தவர்களே என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும். சீனா, ஜப்பான், கொரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே நீண்டகாலம் உயிர் வாழ்வதாக கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களான நாமும் ஆசியர்கள்தான். நூறு வயதிற்கு மேல் நாம் வாழ்வதற்கு செய்யவேண்டியது இவ்வளவுதான். இயற்கை உணவுவகைகளை உட்கொள்ளவேண்டும். குறிப்பாக சோறு, மரக்கறி வகைகளை உண்ணவேண்டும். மாமிசம் சாப்பிடுவதை தவிர்த்து மீன் வகைகளை உண்ணவேண்டும். தினமும் இரவில் எட்டு மணி நேரம் உறங்க வேண்டும். தனது அலுவல்களை தானே செய்துகொள்வதோடு, மனக்கவலை யற்றிருக்க வேண்டும். இதுவே நூறு வயது வாழ்வதன் இரகசியம்.

**பாரம்பரியமாக நீண்ட ஆயுள் மரபணுக்களைப் பெற்றோர் எத்தடைவரினும் கூடிய காலம் உயிர் வாழ்வர்**

வயல்களில் வேலை செய்யும் விவசாயிகள், தொழிலாளிகள், குறிப்பாக தினமும் உடற் பயிற்சி செய்பவர் களை முதுமை விரைவில் தீண்டாது என்பது ஆதார பூர்வமான விடயமாகும். இவர்களை இருதய நோய், நீரிழிவு, இரத்தத்தில் கொழுப்பு, இரத்த அழுத்தம் என்பவை அறவே தொற்றாது. உடலும் பருமனாகாது.

ஜப்பானில் ஒகினாவா பிரதேசத்தில் வாழ்பவர்களே நீண்ட காலம் வாழ்வதாக தெரியவந்துள்ளது. உலகிலேயே மிகவும் வயது கூடிய 113 வயதுடைய "யுகிசி சுகஞ்சி" என்ற வயோதிபரும் 115 வயதுடைய "கமாட்டோ ஹெங்கோ" என்ற மூதாட்டியும் ஜப்பான் ஒக்கினாவா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் பாமா பிரதேசத்தில் பிங்ஹன் கிராமப்புறத்தில் வாழும் மக்களே அதிககாலம் உயிர் வாழ்வதாக கூறப்பட்டபோதும் அதனை உறுதிப்படுத்தும்

(54ஆம் பக்கம் பார்க்கவும்)

# நான் கடனாளி அல்ல


நடிகர் கார்த்திக்



எனக்கு இரண்டு மனைவிகள்தான். முதல் மனைவி ராகினி. அவருக்கு கௌதம், காயன் என்று இரண்டு குழந்தைகள் இருக் கிறார்கள். இரண்டாவது மனைவி ரதி. அவருக்கு தீரன் என்ற ஆறு வயது மகன் இருக்கிறான். ராகினியின் தங்கைதான் ரதி. நான் ரதியை திருமணம் செய்துகொண்டதால் எனக்கும் ராகினிக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதும் உண்மைதான். ஆனால் அதற்காக அவர் என்னைவிட்டு பிரிந்து ஊட்டிக்கு செல்லவில்லை. அங்கு நல்ல கல்வி நிறுவனங்கள் இருப்பதால் குழந்தைகளை படிக்க வைப்பதற்காகத்தான் அவர் ஊட்டி சென்றார். இப்போது எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம். முதல் மகன் கௌதமை சினிமா ஹீரோவாக்க விரும்புகிறேன். அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ அவன் நிச்சயமாக ஹீரோ ஆவான என்கிறாா நடிகர் கார்த்திக்.

கடன் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் அவர் தொடர்ந்து கூறுவதாவது. அபார்ட் மெண்ட் ஒன்று விலைக்கு வந்த போது அதை வாங்க ஒரு கோடி ரூபாய் வரை பணம் தேவைப்பட்டதால் கடன் வாங்கினேன். கடன் கொடுத்தவருக்கும் எனக்கும் நல்லமுறையில்தான் உறவு இருந்தது. ஒரு முறை மட்டும் பணம் கொடுப்பதில் கொஞ்சம் காலதாமதமாகி விட்டது. அவர் என்மீது வழக்கு போட்டார். அந்த சம்பவத்திற்கு பிறகு கோர்ட்டுக்கு வெளியே அந்த பிரச்சினையை பேசி முடித்துவிட்டேன்.

இந்த விசயத்தை கேள்விப்பட்டு ரஜினிகாந்த் எனக்கு போன் செய்தார். உதவி ஏதும் தேவைப்பட்டால


WORLD BAZAAR
TEXTILE CENTRE
X-Mas New Year
Grand Sale!!!
NOW ON!
Sarees & Shalwar
Ladies Wear - Gents Wear
Children Wear - Baby Care
Lovely Curtains
Dress Materials
Etc.... Etc....
நத்தார் புதுவருட
மாபெரும்
மலிவு விற்பனை
RUSH TODAY
இல. 4, ரோகினி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
தொலைபேசி: 2599158, 2593554
(சவோய் பட மாளிகைக்கு எதிரில் -
வாகன தரிப்பிட வசதி)
Wholesale Division
FIVE STAR
TEXTILES CENTRE
No. 95, 2nd Cross Street,
Colombo - 11.
Tel: 2441810, 2345280
Fax: 94-1-2345184
Curtaining Specialists



Little ASIA
EMPORIUM (PVT) LTD.
நத்தார் -
சல்வார்,
மற்றும்
சாறிகள்
திருமண
NO. 317-317A, GALLE ROAD, WELLAWATTE,
COLOMBO 6. SRI LANKA. TEL: 2504470, 2500098
E-Mail: info@littleasialk.com Website: http://www.littleasialk.com
VISIT TODAY




புத்தாண்டு
சுடிதார்
195
GALLE ROAD, BAMBALAPITIYA,
COLOMBO 4. TEL: 2508934
Shauli Fashions
Specialists in Wedding Sarees, Salwar Kameez, Blouse Materials & Readymade Garments
195
GALLE ROAD, BAMBALAPITIYA,
COLOMBO 4. SRI LANKA. TEL: 2508934
VISIT TODAY



வெள்ளவத்தையில்........
ஆஹா! எத்தனை அழகு!
“புதியதோர் உதயம்”
NEW
DHIVIYAAS
Specialist in:
Sarees, Salwar, Readymades
Ornaments, Fancy Goods
Available Here
42-A, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 6.
போன்: 009412508501, 009474510592 பெக்ஸ்: 009412505065
New DHIVIYA JEWELLERS
42-C,காலி வீதி, கொழும்பு - 06.
Tel: 074-510592, 2508501, Fax: 2505065
Specialist
for 916 Gold jewellery




செய்வதாகச் சொன்னார். இதை கேட்டதும் எனக்கு ஆகாயத்தில் மிதப்பது போல் இருந்தது. நீங்கள் போன் செய்து இப்படிக் கேட்டதே போதும் என்று சொன்னேன். விஜயகாந்தின் சொந்தப் படத்தில் என்னால் சுதந்திரமாக செயல்பட முடியவில்லை. நான் 138 படங்களில் நடித்து விட்டேன். நடிப்பது என்பது சுயமானதாக இருக்க வேண்டும் என்பது என் கொள்கை. ஆனால் நான் சொந்தமாக வசனம் பேசுகிறேன் என்று பிரச்சினை செய்தார்கள். அதனால் அந்த படத்திலிருந்து விலகிவிடடேன்.

**நடிப்பு சுயமானதாக இருக்க வேண்டும் என்பதே எனது கொள்கை.**





(51ஆம் பக்கத் தொடர்ச்சி)



## நாகரிகம் உட்புகுந்து கொள்வதால் மக்கள் நோயாளிகளாகின்றனர்

பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் அவர்களிடம் இல்லதாதல் இதனை உறுதி செய்ய முடியாதுள்ளது.

1949ஆம் ஆண்டிலேயே இப்பகுதியில் பிறப்புச் சாட்சிப் பத்திரம் அறிமுகப படுத்தப் பட்டுள்ளது, வேடிக்கையான விடையமாகும். எனினும் இங்கு இன்னும் உயிர் வாழும் நூறு வயதைத் தாண்டிய "ஹூவாங் மாலியங்" என்ற மூதாட்டி கடந்த 43 வருடங்களாக மரணத்தை எதிர்பார்த்து சவப்பெட்டியுடன் காத்திருக் கிறார். எனினும் எமன் இவரை இன்னும் எட்டிப் பார்க்கவில்லை. இவரின் சவப்பெட்டியை கொள்ளுப் பேரப்பிள்ளைகள் தற்போது விளையாட்டுப் பொருளாக உபயோகித்து வருகின்றனர்.

அறுபது வயதைத் தாண்டியதும் வீட்டிற்கு சவப்பெட்டியைக் கொண்டுவந்து சாவை எதிர் பார்த்திருப்பது சில சீன மாநிலங்களிலுள்ள சம்பிரதாய முறையாகும். அறுபது வயது தாண்டியதும் எந்நேரமும் மரணம் வரலாம் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாகும். இப்பிரதேசத்தில் வாழும் இரண்டு இலட்சத்து நாற்பதினாயிரம் பேரில் நூற்றிற்கு எழுபத்தைந்து வீதமானோர் நூறு வயதை தாண்டியவர்கள் . இவர் களை நேரில் சந்தித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்ட

ஆய்வாளர்கள் இவர்கள் நீண்ட நாள் உயிர் வாழ்வதற்கான காரணம் இவர்களின் பரம்பரை மரபணுக்கள் என கண்டுபிடித்துள்ளனர். பாரம்பரியமாக நீண்ட ஆயுளைப் பெற்றோர் எத்தடை வரினும் கூடிய காலம் உயிர் வாழ்வதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். செயற்கை உணவுகளைத் தவிர்த்து தமது உணவுவகைகளைத் தாமே தயாரித்து உண்பதும், மாசற்ற இயற்கைச் சூழலும் இவர்களுக்குத் துணைபுரிகின்றன.

தென் கொரியாவில் ஸன்வெங் பிரதேசத்தில் வாழும் நூறு வயதைக் கிட்டிய மக்கள் இன்னும் தமது வயலில் உழுகின்றனர். நூறு வயதைத் தாண்டியவர்கள் இங்கும் நிறைய உள்ளனர். எனினும் அண்மைக்காலமாக நிலைமை மாறி வருகிறது. ஜப்பானில் தமது பரம்பரைக் கலாசாரங்களை புறக்கணித்துவிட்டு புது நாகரிக மோகத்தை வாரிசாகக் கொண்ட ஜப்பானியர்கள் பலர் தற்போது பல நோய்களுக்கு ஆளாகிவருகின்றனர். தனது வாழ்க்கை முறையை மாற்றி ஒவ்வற்ற வாழ்வை மேற்கொண்டதன் விளைவே, இதுவாகும்.

பாகிஸ்தானின் ஹன்சா பிரதேச வாசிகளுக்கும் இந்நிலையே ஏற்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு பாகிஸ்தானையும், சீனாவையும் இணைத்து நிர்மாணிக்கப்பட்ட அதிவேக பாதைகளினால் புதுவித உணவு வகைகளும், பானங்களும், செயற்கையான ஆகாரங்களும் இரு நாடுகளிலும் குவியத் தொடங்கியதால் அவர்களின் உணவு முறைகளில் மாற்றம் ஏற்பட்டது. நாகரிகம் உட்புகுந்து கொண்டது. தற்போது அங்குள்ள மக்கள் இருதய நோய், உயர் இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு, நீரிழிவு நோய் போன்ற வியாதிகளுக்கு ஆளாகி விரைவில் மரணத்தை தழுவிக்கொள்கின்றனர்.

எனவே எமக்கு 100 வயது வரை வாழ வேண்டுமென்ற எண்ணமிருப்பின் இயற்கை உணவுகளையே உண்ணவேண்டும். எமது பழம் பெரும் கலாசாரங்களைப் பேணி நடக்க வேண்டும். அந்நிய நாகரிகத்தை தூர எறிந்துவிட வேண்டும். தூய சிந்தனையும், தூய்மையான சூழலுமே நீண்ட ஆயுள் வாழ்வதற்குரிய இரகசியங்களாகும். உங்களுக்கும் ஆயுள் நூறு.

-போபாஜி

## திராட்சை பழம் சாப்பிடுங்கள்



உணவாகவும் மருந்தாகவும் பயன்டுவது திராட்சைப்பழம். இதில் விட்டமின், இரும்பு, பொட்டாசிய சத்துக்கள் அதிமாக உள்ளன. ஈரல் சம்பந்தமான நோய் உள்ளவர்கள், திராட்சை பழச்சாற்றில் சம அளவு தேன் கலந்து பருகலாம்.

# எனது காதலனும் நானும்

நான் விடுமுறையை கழிப்பதற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது அவரது வீட்டில் தான் தங்கியிருந்தேன். அவர்கள் கொழும்பிற்கு வந்தால் எங்கள் வீட்டில் தங்குவார்கள். நட்பாக பழகிய நாம் காதலர்களானோம். கடந்த 2002 ஆகஸ்டிலிருந்து எமது உறவு ஆரம்பாகி இப்போது ஒருவருடத்தை தாண்டிவிட்டது.

க.பொ.த. உயர் தர பரீட்சை எழுதி விட்டு கொழும்பில் இரண்டு மாத காலம் தங்கியிருந்த அவர் தற்போது மேற்படிப்புக்காக யாழ்ப்பாணம் சென்றுள்ளார். வாரம் ஒரு முறை தொலைபேசியூடாக தொடர்பு கொள்வார்.


பிரிவு மிகவும் கொடுமையாக உள்ளது.

அவரது நினைவாக நாங்கள் இருவரும் பிரயாணங்கள் செய்யும்போது எடுக்கும் பஸ் டிக்கெட்டுக்கள், அவர் எனக்கு முதன் முதலாக பரிசளித்த Kandos Promises Chocolate பெட்டி, அவர் எனக்கெழுதிய முதல் காதல் கடிதம், நாங்கள் இருவரும் சேர்த்து வாங்கிய அபிவிருத்தி லொத்தர் சீட்டுக்கள், அவர் எனக்கு அனுப்பிய B'day, Christmass cards, கடைசியாக இங்கு ஏ.எல். கிளாஸுக்கு போகும் போது பாவித்த Pens, உடை என்பவற்றை சேகரித்து வைத்துள்ளேன். அவருக்கு பரிசளிப்பதற்காக Autograph இல் காதல் கவிதைகள் மற்றும எனக்கு பிடித்த பாடல் வரிகள் என்பவற்றையும் திகதியிட்டு (மறக்க முடியாத நாள்) எழுதி வைத்துள்ளேன்.

மீண்டும் அவர் உயர் கல்வி முடிந்த பின் Colombo வரு வார்.

*Jennefer*
*Modera Street,*
*Colombo 15.*

அனுப்ப வேண்டிய முகவரி:
'காதல் பரவசத்தில்'
160, Thelankapatha Road,
Wattala, Sri Lanka.



அடுத்த வாரம் முதல்
புலம்பெயர் வாழ்வை
சித்தரிக்கும்
புதிய
நாவல்
$\sqrt{\text{கனவுகள்}^2 + \text{கற்பனைகள்}^2} = \sqrt{\text{கனடா}^2}$?
கனவுகள்
கனடா
கற்பனைகள்
அட்டகாசத்
தொடர்
ஆரம்பம்
எழுதுவது
திவ்ய பிரகாஷ்

# நினைவில் நிறுத்துங்கள

⌘வாழ்க்கையில் தோற்றுவிட்டேன் என்று தீர்மானம் செய்து கொண்டவனுக்கு தோல்வி தான் கிட்டும்.

⌘முயற்சி செய்ய முடியாது என்று நினைப்பவன் முயற்சி செய்வதையே விட்டு விடுவான்.

⌘வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு வெற்றி கிடைக்கப்போவதில்லை என்று கருதுபவனுக்கு வெற்றி கிடைக்காது.

⌘ வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று உறுதியாக நினைப்பவனுக்குத்தான், அவன் பின்னாலேயே வெற்றி தொடர்ந்து செல்லும்.

⌘ ஒருவனுடைய மனநிலையும் உழைப்பையும், சந்தர்ப்பத்தையும் பொறுத்துத்தான் வெற்றி அமையும்.

⌘ போராட்டங்களின் சாதகமான விளைவு பலசாலிகளுக்குத்தான் கிடைக்கும் என்று நினைப்பது தவறு.

⌘ விரைவிலோ, காலம் கடந்தோ வெற்றி நிச்சயம் கிடைக்கப்போகிறது என்று தளரா நம்பிக்கையுடன் செயல்படுபவனுக்குத்தான் வெற்றி உறுதியாகக் கிடைக்கும்.

**நார்மன் வின்செண்ட்பீல**

# சமாதானத் தூது

புனித மானிட நேயத்தால் இறையுலகு புகாமல்
மண்ணிலே தரித்து மனிதருக்குத் தோன்றி
ஞான உடலுடன் தியானத்திலிருந்த
புனித ஆன்மாவுக்கு மனித உயிர்களின்
மரண ஓலங்கள் புரிந்தது.

உலகில் எங்கோ அவலங்கள் நிகழ்கின்றன.
நேரிற் கண்டறிதல் வேண்டும்
என்றிங்ஙனம் சிந்தைசெய்து
புனித ஆன்மா உலகவலம் புறப்பட்டது,

உலகைக் கண்டு உண்மை தெரிந்தது
உள்ளன்புள்ள மக்களையும் கண்டது
தன்னை வணங்கும் மக்களும் அதிகமென்று அறிந்தது.



-குகதாசன்-

நதிகளும் மலைகளும் நீள்சம வெளிகளும்
மேலும் வளம்நிறை இயற்கைச் சிறப்புகளும்
இனிய உலகின் செயற்கைப் பணிகளும்
கண்டது புனித ஆன்மா. ஆயினும் அதன்
ஆழ்மனதினுள் முன்கேட்ட மரணஒலிகள்
தொடரலையெனச் சஞ்சரித்தன.

வடக்கு வீதியொன்றில் கானகதது நடுவினிலே
மனித உயிர்கள் மடிந்து வீழ்வதை
புனித ஆன்மா கண்டது
மனதுள் சலனம் கொண்டது

யுத்தத்தின் அழிவினைக் கண்டு
துறவினைக் கொண்டு





பௌத்தத்தை உலகெங்கும் பரப்பிய
அசோகன் வழியில் புத்தம் கண்ட இலங்கை
பிறழ்ந்து போய் விட்டதே!

மனிதனை மனிதன் கொலை செய்கின்ற
கொடுமை மண்ணில் மறைந்த பாடில்லை.
ஆலயம் தொழுதல் அனைத்தையும் விடவும்
மனித நேயமே சாலவும் நன்று.

மூப்பு, பிணி, சாக்காடு
இவை இயற்கையின் நியதியல்லவோ!
கொடிதினும் கொடிது யுத்தமல்லவோ!
சுயநல மனிதர்கள் வாழ்வது
மண்ணிற்குப் பாரம்மல்லவோ!
அவர்கள் அறிவதும் நியாயம்தானோ!
பௌத்த அரசு ஆளும் நாட்டிலும்
தர்மங்கள் இல்லைதானோ

## யுத்த பூமியின் விடியற்பொழுது

*விடிந்தது பொழுது*
*முனகல் ஒலிகளுடன் குற்றுயிருடல்கள்*
*வீதிகளில் விசிறப்பட்டிருந்தன.*
*வீதியின் இருமருங்கு மரங்களில் மனிதக் குடல்களும்*
*சதைகளும் குற்றிக் கிடந்தன.*
*சிவப்பு இரத்தமே எங்஑னும் செறிந்து கிடந்தது.*
*இரத்த பீதியில் புனித ஆன்மா புரண்டு தவித்தது.*
*புனித ஆன்மாவும் மானுடப் பற்றால்*
*ஞானமிழந்து போவதாய் எண்ணி*
*சாத்தான் கூட்டம் இச்சாக்களம் விரைந்தது.*

## தெளிதல்

*சாத்தான்கள் எண்ணம்*
*புனித ஆன்மாவின் ஞானக் கண்களுக்குப் புரிந்தது*
*வீண்போரில் இறந்த உடல்கள்*
*சாந்தியடைதல் சாத்தியமோவென்றெண்ணி*
*பிணவாடை வீசும் கானகம் விடுத்து மேலும் ஏகியது*

## வருத்தல்

*மின்சுடரும் விண்வரையில் வெடிச்சுடரும்*
*செய்தென்ன பயன்*
*வீணே செத்தவர் பிழைத்ததற்கு இதனாலே*
*வழியுமுண்டோ!*
*தொடரும் போரின் வேதனைகள்*
*தவிர்க்கும் வழிகள்தான் இவையாமோ!*



*காலின் கீழ் பிணக்குவியல்*
*கைகூப்பல் இறைவனிடம்*
*மாந்தர்தம் மனது மரத்துப் போயிற்று*
*நல்லுள்ளம் எங்கோ தொலைந்தன.*
*மானுடம் தானே அழிந்திட தகுதியாயிற்றோ!*

## யுத்தங்கள் நிலையாக ஓயட்டும்

*இறந்த உடல்களில் எழுந்த ஆன்மாக்களின்*
*அழுகுரல் இன்னும் ஓயவில்லை.*
*மரணங்களாலே ஆட்சிகள் அமைக்கும்*
*மன்னர்குணம் ஏன் மாறவில்லை.*
*தீயமனிதர்கள் மனதே மாபெரும் சாத்தான்கள்*
*உணர்வதில் தவறும் இல்லை.*
*ஆள்வது மனிதர்தான் எனின்*
*நிரூபனம் ஆகட்டும் மனிதம் மண்ணிலே*
*இங்ஙனம் எண்ணிய புனித ஆன்மா*
*அமைதிநிறை தியானத்தில் நிறைந்தது*
*யுத்தமெலாம் நின்றன.*
*எதிர்மோதும் தரப்புகள் சமாதானம் பேசின*
*பேசியொரு தீர்வு காணின்*
*மனிதம் மண்ணிலே மங்கிடாதொளிரும்!!!*



# கோளாறு தருகிறதா இதயப் பெட்டகம்

இதயத்தில் பாதிப்பு ஏற்படும் போது, இதயம் ஒழுங்கில்லாமல் துடிக்கும். அல்லது ஒட்சிசன் கிடைக்காமல் இதயம் தனது துடிப்பை நிறுத்திக் கொள்ளும். இதயத்தில் கோளாறு ஏற்படுகிறது என்பின்வரும் வழி முறைகள் மூலம் உறுதிப்படுத் திக் கொள்ளலாம்.

மார்பின்நடுப்பகுதியில் கடுமையான வலி ஏற்படும். வியர்வை வரும். தோல் நிறமிழக்கும். குமட்டல் வருவது போன்ற உணர்வு தோன்றும். மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் இழுப்பு தோன்றும். பயம் அல்லது அதிர்ச்சி தோன்றும். நோயாளி பலவீனமாகி விடுவார்.

இவ்வாறு அறிகுறிகள் தென்பட்டால் நோயாளிக்கு பின்வரும் முதலுதவி சிகிச்சைகளை அளிக்கலாம்.

1. உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

2. வாய் வழியாக நோயாளிக்கு செயற்கை சுவாசம் அளிக்க முடியாமல் போனால், அவரது மார்பின் மேல் இரு கைகளையும் ஒன்றின்மேல் ஒன்றாக வைத்து ஒரே சீராக அழுத்த வேண்டும்.

3. நோயாளியின் மார்பில் கைகளை வைத்து அழுத்தி உள்ளிருக்கும் காற்றை வெளியேற்றவும் செய்யலாம்.

(48ம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட ஈட்டிகள் பறந்து வந்தன.மனிதர்களும் மிருகங்களும் கதறி மாண்டு விழுந்தனர். விழுந்தன.

பந்தங்கள் அணைந்தன. தென்னவன் பாண்டியன் முன்பும் இதே கதை.

திடீரென தீப்பந்தங்கள் ஒளிர்ந்தன.

ஈட்டிகளுடன் பறந்து வந்தன. தீப்பந்தங்கள் அணைந்தன.

குதிரைப் படைப் பிரிவினர் ஆங்காங்கே தீப்பந்தங்கள் சகிதமாய் எங்கிருந்தோ ஓடி வந்து பன்னிரு வேளிர் பெரும் படையினை வளைத்தனர். மின்னல் வேகத்தில் நீண்டவாட்கள் இறங்கி எழுந்து மின்னி மறைந்தன. எங்கும் கொலைக்களம் .

அந்த மூவேந்தர் பெரும் படைப் பிரிவினருக்கு என்ன நடைபெறுகின்றதென்பதே --மரணத்தை தவிர --புரிபடவேயில்லை !

நாக வியூகத்தின் தலை வால் பகுதிகள் கரிகாலனின் புரவிப் படைப் பிரிவினரின் மின்னலிட்ட தாக்குதலால் ஸ்தம்பித்து நிலைகுலைந்து அழிவுபட்டன.

வெகு வேகமாக வந்த புரவித்தூதுவன் ஒருவன் இருங்கோவேளை ; அண்மித்தான் .

" மன்னவா! நாம் ஊருக்குள், பின்புரமாக தாக்கப்படுகிறோம் . அங்கும் உதவி தேவை என நகரப் படைத் தலைவர் கூறுகின்றார் ."

"என்ன உளருகின்றாய் ?.

" எதிரிப் படையினர் பலர் மருத நிலத்து குடிகள் போலநமது படையின் பின்பக்கம் பரவி விட்டனர் . உக்கிரானங்களுக்குத் தீவைத்து விட்டனர் . எமது படைப் பிரிவுக்குள்ளேயிருந்து திடீரென பந்தங்கள் சகிதம் எழுந்து ஈட்டி ,வேல் , வாள் கொண்டு தாக்கி பெருஞ் சேதம் விளைவித்து விட்டனர் .மேலும் .......?

மேலும் ? ம்?" 'இப்படி இரவினில் போர் புரிவது மரபல்லவே! எந்த ஆயத்தமும் இல்லாது வந்து விட்டோம் !"


தூதன் வாய் மூடுமுன் தன் வேலால் அவன் மார்பை துளைத்து எடுத்தான் இருங்கோவேள். சற்று சிந்திக்கவே எல்லாம் சிந்தைக்கு வெட்ட வெளிச்சமாகியது.

'பயிர் பச்சைகள் அழித்தது , தன்னை பெருங்கோட்டைப் பாதுகாப்புக்கு வெளியே அழைத்து வரவே! ஆறு நாட்கள் கடத்தியது ;அமாவாசை இரவு வரவே!

சிறு காலாட் படையைக் காட்டியது;தான் அசமந்தாக வீற்றிருக்கவே எந்த நெருப்பைக் கொண்டு இளஞ்சேட் சென்னியை பொசுக்கினேனோ, அதே தீ வந்து , தன் பெரும்படையை அழிந்துகொண்டிருக்கின்றது .!

அவன் சிந்தனையை மறுபடி அந்த வெண்புரவியும், அதன் சொந்தக்காரனும் வெட்டி விட்டனர் -நிமிரிந்த இருங்கோவேள் விழிகள் முன்பே ; ஒரு கையில் தீப்பந்தமும் மறுகையில் நீண்ட வாளும் கொண்டவன் எதிரிப்பட்டான் .

வெட்டிக் கொட்டிச் சரிக்கப்பட்ட குருதிப்பெரும்புனலை காணச்சகியாது கதிரவன் தன் செந்தன்றகரங்களை லேசாக்கி விடியலை ஆரம்பித்து வைத்தான் . வெண்ணிப் பரந்தலையில் ,தன் சக குருநில மன்னர்கள் ,படையினரிடையே புதையுண்டு ,மாண்டு கிடந்தான் இருங்கோவேள் !.


புரியாத
ஆன்மீகம்
விளங்காத
விஞ்ஞானம்
தெரியாத
மருத்துவம்
தெரியவேண்டிய
உளவியல்
குழப்பும்
அரசியல்
அந்தரங்க
சந்தேகங்கள்
கேள்விகளை அனுப்ப
வேண்டிய முகவரி :
"தேஜோ பதில்கள"
160, Thelankapaha Road,
Wattala. Sri Lanka

# தேஜா



# பதில்கள்

*வீ.நிதர்சன்,*
*32, ஸ்ரீநகர், பூந்தோட்டம், வவுனியா.*

**⓪ சுகமான சுமை என்று தாங்கள் கருதுவது எதை?**

⊙ ஆண்களுக்கு பொக்கட்டை உறுத்தும் மணிபேர்ஸ். எவ்வளவு கனத்தாலும், உட்காரும்போது எவ்வளவு பின்னால் அழுத்தினாலும் 'சீ' என்று மனம் சலிப்பதேயில்லை. பெண்களுக்கு குழந்தைகள்.

*கலைப்பிரியா, 51/1 செனரத்வெல, தெல்தெனியா.*

**⓪ ''அவளுக்கு சரியான திமிர்'' என்று சொல்கிறார்களே.... இதில் திமிர் என்றால் என்ன?**

⊙ எங்களுடைய நடை, உடை, பேச்சு, பார்வை எல்லாம் உன்னிப்பாக அவதானிக்கப்படுகிறது என்பதை அலட்சியம் செய்வது திமிர். ஆனால், இது மட்டும் திமிர் என்று வரையறுத்து விடமுடியாது. மற்றவர்களை ஏதோ ஒரு வகையில் சீண்டிப்பார்க்க எண்ணி அதன் மூலம் மகிழ்ச்சி அடைவது கூட திமிர்க் குணத்தின் கிளைதான். உண்மையில் 'திமிர்' என்பது ஒரு கலவைக் குணம்.

மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், நம்மால் முடிந்த வரை நம்மைச்சூழ இருப்பவர்களுக்கு உடல், உள ரீதியான பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளல், நெருங்கிவிட்டோம் என்று நினைத்துக்கொண்டு எல்லையைக் கடத்தல், தேவையில்லாத இடங்களில் மூக்கை நுழைக்காமலிருத்தல் இவற்றையெல்லாம் மெல்லக் கடைப்பிடித்து வந்தால் 'திமிர்' எனும் தவறான புரிந்துணர்தலில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

*எஸ்.லிங்கநாதன், டச் றோட், சித்தங்கேணி.*

? 30 வயதுக்கு மேல் தலைமுடி வளராதாமே? உண்மையா?




*ஜுலியட்,*
*907,முருகன் வீதி,*
*பாலையூற்று,*
*திருகோணமலை*


? 'இயா' என்றால் அர்த்தம் 'ஜெஸ்' தானே?

⊙ ஈஈயா! பண்டைக்கால ஆங்கிலத்தில் 'ஜெஸ்' என்ற வார்த்தை கிடையாது. Yea தான் பழக்கத்தில் இருந்தது. 16ஆம் நூற்றாண்டில் Yea வழக்கொழிந்து போனது. 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்க இளைஞர்கள் மீண்டும் Yea வைக் கொண்டு வந்து விட்டார்கள். Qea (Yeaவுக் முன்னால் Yes என்பதைக் குறிக்கும் சொல்தான் Qea)

*வீ.நாகேந்திரன், மல்லிகைத் தீவு, மூதூர்.*

? இலங்கையில் சமாதானம் மலருமா?

நீங்களே ''மலருமா'' என்கிறீர்கள். மலர்கள் நிறைந்த அழகிய பூங்கா தானாக உருவாகாது. நாம் தான் உருவாக்க வேண்டும். அதற்கு களைகளை வெட்டி, நீர்பாய்ச்சி அதை வளர்த்தெடுக்க பத்திரமாக அக்கறையாக உழைக்க வேண்டும்.



*மூஜா ஜலால்டீன், நிந்தாவூர்*

? சமீபத்தில் படித்து சுவைத்து சிந்தித்த கதை ஒன்று?

அண்மையில் உள்ள குளம் ஒன்றில் இரண்டு தவளைகள் வாழ்ந்தன. ஒன்று பச்சை நிறம். மற்றையது கறுப்பு நிறம். பச்சை நிறத் தவளைக்கு நெகட்டிவ் சிந்தனை அதிகம்!

கறுப்பு நிறத் தவளைக்கு பொஸிட்டிவ் சிந்தனை அதிகம். இந்தத் தவளைகள் இருக்கும் குளத்தில் தண்ணீர் வேகமாக வற்ற ஆரம்பிக்கின்றது! அடுத்த ஊரில் இருக்கும் ஒரு பெரிய குளத்திற்கு போகலாம் என்று பச்சைத் தவளை யோசனை சொன்னது.



இந்த யோசனை கறுப்புத் தவளைக்குப் பிடிக்கவில்லை. ''இந்த வேகாத வெய்யிலில் பத்து கிலோ மீற்றர் தூரத்தை தாவித் தாவி கடப்பதற்குள் நாம் சுண்ணாம்பாகி விடுவோம் என்றது.

''நமது ஊரிலிருந்து

பால்காரர் ஒருவர் வற்றாத ஏரி இருக்கும் அந்தப் பக்கத்து ஊருக்கு தினம் போவதை நீ கவனித்து இருக்கின்றாயா? அவர் அந்த ஊருக்குக் கிளம்பும் முன்னர் நமது குளக்கரையில் கொஞ்ச நேரம் நின்று பால் வியாபாரம் செய்துவிட்டுத்தான் அடுத்த ஊருக்குக் கிளம்புகிறார்! நாம் சாமர்த்தியமாகச் செயல்பட்டால் பால் பாத்திரத்திற்குள் குதித்துவிடலாம். ஊர்போய்ச் சேர்ந்ததும் நாம் வெளியே குதித்து ஏரிக்கு ஓடிவிடலாம்" என்று பச்சைத் தவளை வழியை சொன்னது.

இந்த யோசனையைக் கறுப்புத் தவளையும் உற்சாகத்தோடு ஏற்றுக்கொண்டது.

அடுத்த நாள்...! பால்காரர் குளக்கரைக்கு வருகிறார். அப்போது இரண்டு தவளைகளும் ஒரே எக்கர்க எக்கி ஆளுக்கு ஒரு பால்பாத்திரத்திற்குள் குதித்தன.

ஒரு சில மணி நேரத்திற்கு பிறகு ஊர்போய்ச் சேர்ந்த பால்காரர் பால் பாத்திரத்தின் மூடியைத் திறந்ததும் இந்த சந்தர்ப்பத்துக்காகவே தயாராகக் காத்திருந்த பச்சைத் தவளை மின்னல் வேகத்தில் வெளியே தாவி ஏரியை நோக்கிப் போய்விடுகிறது! கறுப்பு நிறத் தவளையோ மண்டை உடைந்து பால் பாத்திரத்தில் மிதந்து கொண்டிருந்தது!

இடையில் என்ன நடந்தது?

கறுப்பு தவளை தன் பலம் தெரியாமல் மூடியை முட்டி முட்டியே திறந்து விடலாம் என்று அதிகப்படியான நம்பிக்கையில் மூடியோடு முட்ட ஆரம்பித்தது! பச்சைத் தவளையோ கால்களை உதறி உதறி நீந்தியதில் பாலில் வெண்ணெய் திரண்டு மிதக்க.... ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு வெண்ணெயின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டது. பால்க்காரர் மூடியைத் திறந்ததும் தப்பித்துக் கொண்டது.

*வீ.ரஞ்சிதா, 14, பள்ளிவாசல் வீதி,*
*நீர்கொழும்பு.*

? நன்மை செய்வதாகக் கூறிக்கொண்டே சுரண்டல் அரசியல் நடத்தும் அரசியல்வாதிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?


⊙ வழிப்பறி கொள்ளைக்காரர்கள் பரவாயில்லை.

*பி.நிருபன், கொலிங்வூட் பிளேஸ்,*
*கொழும்பு - 06*

(?) சமூகமான உறவு என்றால் என்ன?

⊙ அரசும் விடுதலைப் புலிகளும் வார்த்தைகளைத் துப்பாமலும் அதேசமயம் விழுங்காமலும் தொண்டையிலே வைக்கிறார்களே. அதற்குப் பெயர்தான் சமூகமான உறவு.

*இ.தினகரன்,*
*இல 55/18, முருகன் கோவில் வீதி,*
*கந்தேநுவர,*
*அல்வத்தை.*



(?) நீங்கள் யாரை வெறுப்பீர்கள்?

⊙ நேரத்தின அருமை தெரியாமல் தங்களின் நேரத்தையும் மற்றவர்களின் நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருப்பார்களே சில கேடுகெட்ட ஜென்மங்கள் அவர்களை!

*ஏ.பி.எம்.நளீம்,*
*கல்முனை -09.*

(?) சிகரட், பீடி, சுருட்டு இவற்றில் தீமை தரக்கூடியது எது?

⊙ உருவத்தில் தான் வித்தியாசம். விஷத்தின் விகிதத்தில் வித்தியாசம் இல்லை.

அச்சமில்லாமல் உறுதியுடன் மனச்சாட்சிப்படி நடப்பது தர்மமாகும். அவ்வழியில் நடப்பதன் மூலம் ஒருவர் மேன்மையடைய முடியும்

நல்ல எண்ணங்கள், செல்வம், வெற்றி போன்றவற்றைப் பற்றியே எப்போதும் எண்ணுங்கள். இவற்றையே உங்கள் சிந்தனையில் தொடர்ந்து சேமியுங்கள். பிற்பாடு இவை வட்டியுடன் சேர்ந்து பெரு முதலாக பெரிய வெற்றிகளாக உங்களுக்கு கிடைக்கும். உங்கள் ஆழ்மனம் இவற்றை உறுதியாக பெற்றுத் தரும்

தென்றலை ஏற்று மகிழத் தெரிந்த மனிதனால் தான் சுழல் காற்றை எதிர்த்து நின்று முன்னேறும் அறிவையும் பெற்றிருப்பான்

ஒரு மனிதனின் பல வீனமே பெரும் பாலும் அவனுடைய வலிமை களில் சிறந்ததாக அமைந்து விடுகிறது

மனிதனுக்கு எழும் பிரச்சினைகள் அவனுடைய திறமைக்கு உட்பட்டவையே. அவற்றை மீறிய பிரச்சினைகளை இறைவன் அவனுக்கு கொடுப்பதில்லை




ஆண்டு 1947 - வயது 17

17 வயதில் ஒரு மாத காலம் ரெயில்வே ஸ்டேஷன் மார்டர்ஸ் சேவிஸில் (Railway Station Master Service) நாவலப்பிட்டியில் சேவை செய்து விட்டு ரெயில்வே எழுது வினைஞர் சேவைக்கு (Railway clerical Service) மாற்றம் பெற்று கொழும்பில் புகையிரத பிரதான கணக்காளர் ஆபிசில் (Chief Accountants office) 3 1/2 மாத காலம் சேவையாற்றிவிட்டு அரசாங்க பொது எழுது வினைஞர் சேவையில் (Gov. Clerical Service) புதிய நியமனம் கிடைத்தது. திறைசேரி கட்டிட தொகுப்பிலுள்ள ஓர் அரசாங்க திணைக்களத்தில் எழுது வினைஞர் பதவியை ஏற்றேன்.

ஐந்து மாதத்திற்குள் மூன்று வித்தியாசமான சேவைகளில் சேர்ந்துள்ளேன். மூன்று சேவைகளிலும் எழுத்து மூல பரீட்சைகள் மூலமும் நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்து ஒருவரின் சிபார்சும் இல்லாமல் நியமனங்கள்

கிடைத்தன. இது அக்காலத்தின் 'கலாசாரம்' என்றும் கூறலாம். திறமை அடிப்படையில் அரச சேவைக்கு ஆட்கள் திரட்டும் காலம்.

எழுத்து மூலம் பரீட்சையில் சித்தி பெற்றாலும் நேர்முகப் பரீட்சையில் கணிசமான அளவு புள்ளிகள் பெறாவிடில் நியமனம் கிடைக்காது.

பொது எழுதுவினைஞர் சேவையில் சேர்வதற்கு நடந்த நேர்முகப் பரீட்சைக்கு தலைமை தாங்கியவர் அக்காலத்து கல்வி திணைக்களப் பணிப்பாளர் Dr. Ian Sandenan. இவர் ஓர் வெள்ளையர். இதன் மூலமும் அக்காலத்தில் நேர்முகப் பரீட்சைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள் என்பதை எடைபோடலாம்.

கல்விமான்கள் தான் கல்வி திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்கள். Dr. Ian Sandenanக்கு பின்பு நியமிக்கப்பட்டவர் Dr.Howes மற்ற சேவைகளிலும் பார்க்க பொது எழுது வினைஞர் சேவைக்குத்தான் அரசு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தது. நாட்டில் இச்சேவைக்கு மிகவும் மரியாதையும் இருந்தது.

"கோழி மேச்சாலும் கொர்ணமேந் திலைதான" என்ற நிலைப்பாட்டில் உயர் கல்விக்கு செல்லாதவர்களும் இச்சேவைக் குத்தான் மிகவும் விரும்பினார்கள். பெற்றோர்களும் தம்முடைய பிள்ளை களுக்கு ஒரு 'கிளறிக்கல்' உத்தியோகம் கிடைத்தால் மிகவும் சந்தோஷப் பட்டார்கள். இவ்வளவுக்கும் 1947 ஆம் ஆண்டு இந்தப் பதவிக்கு மாதச் சம்பளம் ரூ 70/- தான் அத்துடன் யுத்தகால அலவன்ஸாக ரூ 60/- மட்டில் கொடுத் தார்கள். வருடாந்தம் சம்பள உயர்வு ரூ 6/.

**என் மன வானில்**

**அக்காலத்தில் சட்ட திட்டங்கள் இறுக்க மாக கடைப் பிடிக்கப்பட்டதால் பொது மக்களுக்கு திருப்தி கரமானமான சேவை கிடைத்தது.**

ரூ 6/- சம்பள உயர்வு பெறுவதற்கு மிகவும் கடின உழைப்பு தேவையாய் இருந்தது. விடுமுறை எடுப்பது மிகவும் கடினமாய் இருந்தது. வருட முடிவில் ஒரு உத்தியோகத்தரின் வேலையை இன்னு மொரு உயர் அதிகாரி பரிசீலனை செய்து திருப்தி என்று காணும் பட்சத்தில் தான் அந்த ரூபா 6/- சம்பள உயர்வு கிடைக்கும். வேலை திருப்திகரமாக இருக்கில்லை என்றால் சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டால், அந்தத் தொகை ரூ 6/- கிடைக்காமல் போனால் அது ஒரு கரும்புள்ளியாக கருதப்பட்டு பிற்காலத்தில் பதவி உயர்வுகளையும் சில சமயம் பாதிக்கலாம்.

இப்படியான இறுக்கமான சட்டதிட்டங்களும் அவைகளை இறுக்கமாக செயற்படுத்தினபடியால் தான் பொது மக்களுக்கு திறமான சேவை கிடைத்தது. இக்காலத்தில் நியமனம் தொடக்கம் நிர்வாகம் உட்பட சகலவற்றிலும் அரசியல் புகுந்துள்ள துர்ப்பாக்கிய நிலையில் மக்கள் அரச திணைக்களங்களில் ஓர் நேர்மையான ஊழல் அற்ற சேவையை எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பொழுது ஊழியர்களுக்கு நியமனம் கடிதம்

கொடுப்பதற்கும் அமைச்சர்கள் வைபவம் நடத்துகிறார்கள். தபால் மூலம் பெறக்கூடிய கடிதத்தை அமைச்சரை வணங்கிவிட்டு கைகூப்பி பெறவேண்டிய நிலையை அடைந்துள்ளோம். நான் இந்த பதவி ஏற்று அரச சேவையில் சேர்ந்த அதே தினம் என்னுடன் வேறு இருவரும் வந்திருந்தார்கள். இரண்டா வது உலக மகா யுத்தம் முடிவடைந்த பின் நாங்கள் மூவரும்தான் இந்தக் காரியால யத்திற்கு முதன் முதலாக நியமனம் பெற்று வந்திருந் தோம். யுத்த காலத்தில் ஆட்சேர்ப்பு நடைபெறாத காரணத்தால் இந்தக் காரியாலயத்தில் சேவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் பென்சன் எடுக்கும் வயதை எட்டியவர்க ளாக இருந்தனர். ஆதலால் அவர்களுக்கு நாம் பள்ளி மாணவர்கள் போல் காட்சியளித்தோம். எங்கள் மூன்று பேரையும் வெவ்வேறு பிரிவுகளுக்கு (Branches) அனுப்பியிருந் தார்கள். அங்கு கடமையாற்றும் பெரும்பாலானோர் சேட்டும் கால்சட்டை யும் ரையும் (Tie) அணிந்திருந்தார்கள். அவர்கள் கோட்டும் (Coat) அணிந்துதான் காரியாலயம் வருவார்கள். காரியாலயம் வந்தவுடன் கோட்டை கழற்றி கதிரையின் பின்னால் கொழுவி விடுவார்கள். கதிரையில் ஒருவர் இருக்காவிட்டாலும் அவருடைய கதிரையில் கோட் இருந்தால் அவர் அன்று காரியாலயத்திற்கு வந்திருக்கிறார் என்பதற்கு ஓர் அறிகுறி.

## என் மன வானில்

இப்பொழுது ஊழியர்களுக்கு நியமனம் கடிதம் கொடுப்பதற்கும் அமைச்சர்கள் வைபவம் நடத்துகிறார்கள். தபால் மூலம் பெறக்கூடிய கடிதத்தை அமைச்சரை வணங்கிவிட்டு கை கூப்பி பெறவேண்டிய நிலையை அடைந்துள்ளோம்

இவர்கள் அக்காலத்தில் தொப்பியும் அணிந்துதான் வருவார்கள். விதம் விதமான தொப்பிகள். காரியாலயத்துக்குள் பிரவேசித்த உடனே தங்கள் தொப்பிகளை கழற்றி மாட்டி விடுவதற்கு ஓர் "ஹப் ஸ்டான்ட்" (Hap Stand) ஒவ்வொரு காரியாலயத்திலும் இருக்கும்.

எனக்கு நியமிக்கப்பட்ட பிரிவின் தலைமை லிகிதர் (Head of Branch) பென்சன் எடுக்கும் வயதை எட்டியவராக இருந்தார். அவர் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்று ஒரு கதிரையில் அமர செய்து உரையாட தொடங்கினார். நான் சிறு பையனாக இருந்தபடியால் எனது வயது என்ன என்பதுதான் அவரின் முதல் கேள்வியாக இருந்தது. நான் 17 என்று சொன்னவுடன் அவர் ஆச்சரியத்துடன் என்னை ஒரு புன் முறுவலுடன் பார்த்தார்.

ஏன் உயர் கல்விக்கும் போகாமல் இந்த சேவைக்கு வந்ததாகவும் கேட்டார். பின்பு "நீர் இந்த இளம் வயதிலேயே தொழிலுக்கு வந்திருக்கிறீர் எனது மகன் 23 வயதாகியும் வீட்டில் தொழில் இல்லாமல் இருக்கிறார்'' என்று கவலைப்பட்டார்.

நான் தங்கி இருந்த விடுதியில் பல பேர் இருந்தபடியால் காலைக்கடன்களை

நிறைவேற்றுவதற்கும் காலை 5 மணிக்கு நித்திரையால் எழும்ப வேண்டியிருந்தது.

நான் வசித்த விடுதியில் மின் விளக்கு இருக்கவில்லை. சகலரும் தத்தம் அறை களில் சிறு மண்ணெண்ணை விளக்குகளை வைத்திருந்தார்கள். சிலர் குப்பி விளக்கு கூட வைத்தி ருந்தார்கள். ஆதலால் புத்தகம், பத்திரிகை வாசிப்பதற்கு ஒரு வசதி யும் இருக்கவில்லை.

காலையில் 7 மணிக்கே இருப்பிடத்தி லிருந்து புறப்பட்டு ஏதாவது ஒரு சைவ ஹோட்டலில் காலை உணவு அருந்தி விட்டு 7.45 மணியளவில் காரியாலயம் போய் சேர்ந்துவிடு வேன். காலை 9 மணிக்குத்தான் காரியாலயம் கடமைக்கு திறக்கப் படும். ஆனால் என்னைப்போல் 6 அல்லது 7 ஊழியர்கள் நேர காலத்தோடு வந்துவிடுவார்கள்.

நாங்கள் எல்லோரும் 9 மணி மட்டும் கரம் (carom) விளையாடுவோம். மத்தியா னம் மதிய போசனத்துக்கு ஒரு மணித்தி யாலம் ஓய்வு கிடைக்கும். அந்த நேரத்திலும் கரம் விளையாடுவோம்.

காரியாலயத்தை அடுத்து சிற்றுண்டிச் சாலையும் (Canteen) இருந்தது. ஆனபடி யால் சிற்றுண்டிச்சாலையிலே மதிய உணவு அருந்திவிட்டு கரம் விளையாட வசதியாய் இருந்தது.

ஆனால் நாங்கள் எங்களுக்கு நியமிக்கப் பட்ட கால எல்லைக்குள் மதிய உணவு அருந்தி விட்டு எங்கள் கதிரைகளில் அமர்ந்துவிட வேண்டும். தலைமை இலிகிதர் மிகவும் கண்டிப்பானவர். யார் யார் நேரம் தவறி வருகிறார்கள் என்று கவனித்துக்கொண்டு இருப்பார். அக்காலத்தில் காரியா லயங்களில் ஒழுக்கம் மிகவும் கடுமையாக பேணப்பட்டது.

**என் மன வானில்**

*யாழ்ப்பாணத்தவர்களை சிங்கள ஊழியர்கள் "பனங்கொட்டை" என்று அழைப்பார்கள். பதிலுக்கு தமிழ் ஊழியர்களும் "கொஸ்சட்டை" (பலாகொட்டை)என்று அழைப்பார்கள். இவையெல்லாம் இனக் குரோதம் ஏதும் இல்லாமல் நடைபெற்றன.*

நாம் தொழில் புரிந்த கட்டிடத்தில் (Gall Face Secretariat) 3 மாடிகள் இருந்தன. ஒவ்வொரு மாடியிலும் இரு சிற்றுண்டிச்சாலைகள் இருந்தன. ஒன்று கிழக்கு மூலையிலும் மற்றது தெற்கு மூலையிலும் அந்த கட்டிடத்தில் மொத்தமாக எட்டு சிற்றுண்டிச்சாலைகள் இருந்தன. கட்டிடத்தின் கிழக்கு பாகத்தில் தொழில் புரிந்த ஊழியர்கள் கிழக்குப் பக்கத்திலுள்ள சிற்றுண்டிச் சாலைகளை உபயோகித்தார்கள். அதேபோல் மேற்கில் உள்ள ஊழியர்கள் தங்கள் பக்கத்தில் இருக்கும் சிற்றுண்டிச்சாலைகளை பாவித்தார்கள்.

*ஊரையும், உறவையும் நினைக்கும்போது எமக்குள் எழும் எண்ணங்களும், உணர்வுகளும் விசித்திரமானவை. வலிய சக்தி மிக்கவை. அந்த ஊர்களையும், உறவுகளையும் நோக்கி பசுமையான நினைவுகளை மனவானில் சிறகடித்துப் பறக்கவிட்டால் அதிலொரு வாசம் இருப்பதை உணர்வீர்கள். மனதிற்குள்ளே மலர்ந்து, மனதிற்குள்ளே மணம் கமழும் அந்த மண்ணின் வாசத்திற்கு நிகர் எதுவும் இல்லை.*

*இங்கே ஓய்வுபெற்ற அரச ஊழியர் "கண்ணர்" தனது 17ஆவது வயதில் இடம்பெற்ற சம்பவத்தை இங்கே இரசனையுடன் நினைவுகூர்கிறார்.*

உங்கள் மனவானில் விரியும் மண்வாசனையை மணங்கமழச் செய்ய எமக்கு விரிவாக எழுதி அனுப்புங்கள். அதில் மற்றவர்கள் தெரிந்து, அறிந்து கொள்ள எவ்வள்வோ விஷயங்கள் இருக்கும்.
"என் மன வானில்"
160, Thelankapatha Raod,
Wattala, Sri Lanka.

இச்சிற்றுண்டிச்சாலைகள் யாவும் தனியார் துறையினர்களால்தான் நடத்தப்பட்டன. அரசாங்கம் மேசை கதிரை வாங்கும் சில தளபாடங்களும் மட்டும்தான் கொடுத்தது.

ஊழியர்கள் பலர் வழமையாக கடனுக்குத்தான் இச்சிற்றுண்டிச் சாலைகளில் உணவு அருந்துவார்கள். ஒரு கணக்குப் புத்தகம் இருக்கும். வேண்டியதை அருந்தி விட்டு கணக்கை எழுதிவிட்டு செல்லலாம். மாதம் முடிவில் சம்பளம் கிடைத்தவுடன் கடனை தீர்த்து விட வேண்டும். இந்த அடிப்படையில் தான் கடனுக்கு சாப்பிடுவார்கள். ஆனால் நடந்ததோ வேறு. ஒரு சிலர் முழு தொகையையும் கொடுக்கமாட் டார்கள். இப்படியே ஒவ்வொரு மாதமும் பாக்கி வைத்துக்கொண்டு போக 5 அல்லது 6 மாதங்களில் கடன் கூடுதலாகிவிடும். முழுவதும் செலுத்த இயலாத நிலை வந்த பின் கடன்பட்ட ஊழியர்கள் வேறு சிற்றுண்டிச்சாலைகளுக்கு சென்று விடுவார்கள்.

இப்படியே பலர் கடனை செலுத்த முடியாத நிலை வரும் போது சிற்றுண்டிச் சாலை நடத்துபவரும் நஷ்டத்தில் இயங்காத நிலையில் சிற்று ண்டிச்சாலையை மூடிவிட்டு செல்லுவார்கள். பின்பு புது ஆட்களை நியமிப்பார்கள். ஒன்று இரண்டு வருடத்தில் அவர்களுக்கும் அதே கதிதான். ஒவ்வொரு காரியாலயத்துக்கும் ஒவ்வொரு நலன்புரி சங்கம் (Welfare Society) இருந்தது. ஊழியர்களின் நன்மை கருதி கிரிகெட் போன்ற விளையாட் டுக்களில் ஈடுபட

இந்த நலன்புரி சங்கங்கள் உதவின.

அக்காலத்தில் அரச திணைக்களங்கள் சனிக்கிழமையும் 1 மணி மட்டும் திறந்து இருந்தது. கிரிகெட் விளையாட்டில் பங்குபற்றுபவர்கள் 1 மணிக்கு பின் வேறு திணைக்களங்களின் ஊழியர்களுடன் கிரிகெட் விளையாட சென்றுவிடுவார்கள். அக்காலத்தில் ஆங்கிலம் அரச கரும மொழியாக இருந்தமடியாலும் சகல ஊழியர்களுக்கும் ஆங்கிலத்தில் உரையாடக் கூடியதாக இருந்தமையினால் இன மத வேற்றுமை ஊழியர்கள் இடையே இருக்கவில்லை.


யாழ்ப்பாணத்தவர்கள் சிங்கள ஊழியர்கள் "பனங்கொட்டை" என்னு அழைப்பார்கள். பதிலுக்கு அவர்கள் "கொஸ்சட்டை" (பலா கொட்டை) என்று தமிழ் ஊழியர்கள் அழைப்பார்கள். இவையெல்லாம் குரோதம் ஏதும் இல்லாமல் நடைபெற்றது.

அரச விடுமுறைகள் தொடர்ந்து வரும்போது ஊழியர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் செலவில் நாட்டின் பல பாகங்களுக்கும் சுற்றுலா செல்வார்கள். இலங்கையில் பல இடங்கைள அவர்களுடன் சென்று பார்த்துள்ளேன். இள வயதிலேயே சிவனொளி பாத மலையும் ஏறி உள்ளேன். அக்காலத்தில் ஊழியர் கள் மத்தியில் இருந்த அந்நியோன் யம் இப்பொழுது இல்லை. இப் பொழுது இன மத பேதம் மட்டும் அல்ல அரசியல் கட்சிகளாகவும் பிரிந்து இருக்கிறார்கள். உண்மையாக எனது அரச சேவையின் ஆரம்ப காலம் மிகவும் சந்தோஷமும் சிறப்பு மிக்கதாகவும் இருந்தது. அப்போதைய நினைவுகள் இன்றும் மனதில் ஓர் இன்பத்தை தருகிறது.

## துயரத்தில் கருத்தரித்தால் பெண் குழந்தை பிறக்கும்

துயரமான சூழ்நிலைகளில் கருத்தரிக்கும் பெண்களுக்கு பெரும்பாலும் பெண் குழந்தை தான் பிறக்கு என்று டென்மார்க் நாட்டிலுள்ள மருத்துவ விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

நில நடுக்கம், வெள்ளம், புயல் ஆகிய இயற்கைச் சீரழிவுகள் மட்டுமின்றி குடும்பத்தில் சண்டை, உறவினர்களால் நிம்மதி இழப்பு, நெருங்கியவர்களுக்கு உடல் நலக்குறைவு ஆகிய துன்பங்களில் தம்பதிகள் மூழ்கி இருந்தாலும், அதிலும் குறிப்பாகப் பெண்ணுக்கு துயரத்தையும், வேதனையையும் அளிக்கும் பட்சத்தில் கருத் தரித்தால் பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலனவை பெண்கள் தான். ஆண் குழந்தைகளே பிறக்காது என்று இம் முடிவைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. பெண் குழந்தை பிறக்கும் வாய்ப்பே அதிகம் என்பது தான் மருத்துவ விஞ்ஞானிகள் உணர்த் தும் பாடம்.



# வாழ்க்கை ஒரு போராட்டம்

ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த கெமன்ஸ் வில்லியம் என்பவர் இறக்கும் போது உலகின் முதல் நிலை கோடீஸ்வரர்களில் ஒருவராக இருந்தார். உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன என்று அவரிடம் கேட்டபோது அவர் கூறிய பதில் 'உழைப்பு, உழைப்பு, உழைப்பு'!

தினமும் அரைநாளாவது உண்மையாக உழையுங்கள். வெற்றி வாய்ப்புகளைத் திறக்கும் சாவி உழைப்புத் தான்! வெற்றிக் கனி உங்களுடன் இருக்க வேண் டுமா? உழைத்துக் கொண்டேயிருங்கள். சோர்ந்து விடாதிர்கள். போராட்ட வாழ்வுதான், வாழ்க்கைப்போராட்டத்தில் வெற்றியீட்டித்

**டாக்டர். ச.முருகானந்தன்**

தரும். உழைப்பு என்னும் ஆயுதம் கொண்டு சலிப்பின்றிப் போராடிக் கொண்டேயிருங்கள்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் சிறப்பான பிறவிகள்தான். ஒப்பற்ற திறமைகள் உங்களிடம் உண்டு என்பதை உறுதியாக நம்புங்கள்.அவை தூண்டிலிடப்பட வேண்டும். தொடர்ந்து ஆற்றலுடன் செயற்படவேண்டும். தூண்டிகளில் முதலாவது உங்கள் மனம் தான். மனம் ஒரு மகா சக்தி. திடமான மனம் வேண்டும். சிறப்பான எண்ணம் வேண்டும். கரும் மங்களை எண்ணித் துணிய வேண்டும். துணிந்தபின் தயங்காமல் உழைத்திட வேண்டும். எண்ணாமல் முடிவெடுப்பவன் முட்டாள். முடிவெடுத்தபின் எண்ணிக்கொண்டிருப்பவன் கோழை. முன்வைத்த காலைப் பின் வைக்காமல் வெற்றிக்கான பயணத்தைத் தொடர வேண்டும். பாதையில் வரும் கல்லும் முள்ளும் பயணத்தைக் கைவிடத் தூண்டும். அப்படி கைவிட்டால் இவ்வளவு தூரம் பயணம் செய்ததே அர்த்தமில்லாமல் போய்விடுமல்லவா?

## நீச்சல் தெரியாது என்பதற்காக தண்ணீரிலே இறங்காது நின்று விட்டால் நீச்சலை எப்படிக் கற்றுக் கொள்வது?

ஒன்றை அனுபவிக்காமலே, முடியாத காரியம் என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தத் தொழில் எனக்குக் கிடைத்த வெகுமதி என்றெண்ணி அணு அணுவாக ரசித்துச் செய்யுங்கள். நீச்சல் தெரியாது என்பதற்காக தண்ணீரிலே இறங்காது நின்றுவிட்டால், நீச் சலை எப்படிக் கற்றுக் கொள்ள முடி யும் வெற்றி என்ற ஒன்றையே மனம் நினைக்க வேண்டும். வெற்றி ஏணியில் ஒவ்வொரு படியாகத்தான் ஏற வேண்டும். பாய நினைத்தால் சறுக்கி விழ வாய்ப்புண்டல்லவா? யாராவது ஏற்றி விடுவார்கள் என்று பார்த்துக் கொண்டிராமல் நாமே ஏற வேண்டும். உதவி கிடைத்தால் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வாழ்வில் கிடைக்கும் வாய்ப்புக்களைத் தட்டிக்கழிக்காமல், ஒத்திப் போடாமல் புத்திசாதுரியத்துடன் பயன்படுத்தி நியாயமாக உழைத்தால் வெற்றித் தேவதையை முத்தமிடலாம்.

# ஊமையின் இரகசியம்



"தங்க பஸ்பம் செய்வதைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு குண்டூசி முனையில் தங்க பஸ்பத்தைத் தொட்டு நெய்யிலோ, பாலிலோ கலந்து சாப்பிடுவார்களாம். குண்டூசி முனையை விட அளவு அதிகமாகி விட்டால் குடல் வெந்து செத்து விடுவார்களாம்.

என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன் உடலைப் பாதுகாப்பது என்பது மனதைப் பொறுத்ததாகும். ஒன்றைத் திடமாகச் சொல்கிறேன் "நமக்கு வயசாகிப் போச்சு" - இந்த எண்ணத்தை ஒழித்து, "எனக்கு எங்கேடா வயசாச்சு?" - இந்தக் கேள்வியை எழுப்புகிறவர்களை வயோதிகம் நெருங்காது.

தோள் இருக்கிறதா? தட்டிப் பாருங்கள். அது இல்லாமல், "என்னடா..." என்று சலிப்பதில் பிரயோஜனம் இல்லை.

இதை நான் ஏன் இவ்வளவு அழுத்தமாக கூறுகிறேன் என்றால், எனக்கு இன்னும் என்ன வயது என்று நான் எண்ணத் தயாராக இல்லை.

மற்றவர்கள்தான் அதை எண்ணிக்கொண்டிருக்கிறார்களே தவிர, நான் அதை எண்ணுவதும் இல்லை. எண்ணிப் பார்ப்பதும் இல்லை."

-சென்னை ஆணழகன் விழாவில் எம்.ஜி.ஆர். பேசியது.

# இராணுவ - அரசியல் ரீதியான

# தலைமைத்துவத்தில்

# ஒழுக்கம்

# கட்டுப்பாடு

# பண்புகள்

# மேலாண்மை

# செலுத்தினை



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் குணாம்சம் மற்றும் பழக்க வழக்கங்களே அவரது வெற்றிக் கான காரணங்கள் என திருமதி.அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை ' எனும் நூலில்' எனது பார்வையில் திரு.பிரபாகரன்' என்ற அத்தியாயத்தில் விளக்கியுள்ளார்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சிங்கள அரசின் இனவெறிக் கொள்கைதான் பிரபாகரனை ஒரு தீவிர நாட்டுப்பற்றாளனாக மாற்றியது எனலாம். தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள ஆழமான பாசமும், அவர்களது பண்பாடு மீதும், குறிப்பாக தமிழ் மொழி மீது கொண்டுள்ள தீராத காதலும் பிரபாகரனின் விடுதலை வேட்கைக்கு ஆதாரமாக அமைகின்றது. அரசியற் சித்தாந்தங்கள், கோட்பாடுகள் பற்றி பிரபாகரன் பெரிதும் அலட்டிக்கொள்ள வில்லை. அவரைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை சிக்கல்கள் நிறைந்த பூடகமான விடயமல்ல.

தமிழரின் பிரச்சினையை அவர் மிகவும் தெளிவானதாகவே நோக்குகின்றார். தமிழரின் போராட்டத்தையும் நியாயமானதாகவே அவர் கருதுகின்றார். தமிழீழம் என்கிற தாயக மண்ணில்தான் பிரபாகரனின் ஆழ்மனம் ஆழ வேரோடி நிற்கிறது. தமிழ் மக்கள் தமது வரலாற்று ரீதியிலான தாயக மண்ணில் சமாதானமாக, கௌரவமாக ஒத்திசைவாக வாழ்வதற்கு உரித்தான வர்கள் என்பதில் பிரபாகரனுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை யுண்டு.

பிரபாகரனின் தமிழீழக் கொள்கையில் பிரிவினை வாதமோ விரிவாக்க நோக்கமோ இருக்க வில்லை. தமிழீழம் தமிழீழ மக்களுக்கே சொந்தமா னது; தமிழீழ மாநிலம் மீது தமிழீழ மக்களுக்கே இறை யாட்சி உரிமையுண்டு என்பது பிரபாகர னின் நிலைப்பாடு. சிங்கள மக்களது பாரம்பரிய பிரதேசங் களை ஆக்கிர மிப்பதோ, அபகரிப் பதோ பிரபாகரனின் நோக்க மல்ல. அவரது சிந்தனை யிலும் செயற் பாட்டி லும் இத்தகைய நோக் கத் தைக் காண முடி யாது. சில இந்திய அரசி யல் விமர்சகர்கள் சொல வதுபோன்று தமிழீ முத்தை அகன்ற ஈழ மாக விரிவாக்கம் செய் யும் கனவு கூட அவர் கண் தில்லை.





தமிழ் மக்களின்

ஆயுதப் போராட்டத்தை நெறிப் படுத்துவதில் பிரபாகரன் எப்பொழுதுமே தனித் துவத்தையும், தன் வழியையும் கடைப்பிடித்து வருகி றார். உலக விடுதலைப் போராட்டங் களின் வரலாறு பற்றியும் மற்றைய நாடுகளின் சுதந்திர இயக்கங்கள் பற்றியும் நன்கு அறிந்த போதும் அந்நிய போராட்ட வடிவங்களை கண்மூடித் தனமாகப் பின்பற்ற பிரபாகரன் விரும்பியதில்லை. எந்த விடுதலைப் போராட்ட மும் அந்தந்த வரலாற்றுச் சூழலுக்கும், யதார்த்த புறநிலைகளுககும் ஏதுவான தாக வளர்ச்சி நிலை காணவேண்டும் என்பதே பிரபாகரனின் நிலைப்பாடு. தனது மக்களின் போராட்ட புறநிலைகளுக்கும் தேவைகளுக்கும் இசைவாகவே அவர் தனது போர்முறைகளை நெறிப்படுத்தினார். அவரது சில போர்த் தந்திரோபாயங்களும் உத்திகளும் பலத்த கண்டனங்களுக்கு ஆளாவதுண்டு. மிகவும் பலம் வாய்ந்த, சக்திமிக்க, ஈவிரக்கமற்ற எதிரியிடமிருந்து மிகவும் பலவீனமான, சிறிய தேசிய இன மக்களைப் பாதுகாப்பதற்கு ஈவிரக்கமற்ற உத்திகளை கையாள வேண்டியது அவசியம் என தனது போர் நடவடிக்கை ளுக்கு நியாயம் கூறுவார் பிரபாகரன்.


பிரபாகரன் செயலில் நம்பிக்கை உடையவர். மனித செயற்பாடுதான் வரலாற்றை இயக்கும் உந்து சக்தி என்பதில் அவருக்கு அசையாத சம்பிக்கை உண்டு. சிக்கலான தத்துவார்த்தக் கோட்பாடுகள் மூலம் பிரச்சினைகளை அலசிப் பார்க்காமல், ஆக்கமான செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தது காரணமாகவே அவர் தனது விடுதலை இயக்கத்தை முன்னேற்றப் பாதையில் முன்னடத்திச் சென்றார்.

தமிழ் அரசியல்வாதிகளின் வார்த்தை ஜாலங்களில் ஏமாந்து விரக்தியடைந்த புரட்சிகர இளைஞர் சமுதாயத்தை பிரபாகரனின் செயற்திறன் மிக்க போராட்டப் பாதை வெகுவாகக் கவர்ந்து இழுத்தது. இதன் காரணமாக, எத்தனையோ இடர்களுக்கும் மத்தியில், இளம் சமூகத்தை அணிதிரட்டி, சிங்கள அரச இயந்திரத்தை எதிர்த்துப் போராடும் வலுவுடைய ஒரு தேசிய விடுதலை இராணுவத்தை அவரால் கட்டியெழுப்ப முடிந்தது.

தனது போராட்ட இலட்சியத்தை பிரபாகரன் இன்னும் அடையவில்லை என்பது உண்மைதான். ஆயினும், பிரபாகரனது மதிநுட்பமான போர் திட்டங்களும், அவற்றை திறம்பட நிறைவு செய்யும் அபாரமான ஆற்றலும் காராணமாகவே, இருபத்தைந்து ஆண்டு காலத்துக்கு மேலாக அவர் கட்டி வளர்த்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ மக்களும் ஒரு தேசிய இனக்கட்டமைப்போடு நிலைத்து நின்றனர். பிரபாகரன் இல்லாது போனால் விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழ் தேசிய இனமும் பல வருடங்களுக்கு முன்னரே அழிக்கப்பட்டிருக்கும். புலிகளுடனான வாழ்பனுபவத்திலிருந்தே நான் இதைக் கூறுகிறேன். தமிழ் மக்களும் நிச்சயமாக இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

தமிழீழ மக்களின் அரசியல் இலட்சியங்களை அடைவதற்கு ஆயுதப்போராட்டத்தின் தேவையையும் அவசியத்தையும் முதன்மைப்படுத்தி பிரபாகரன் செயற்பட்டபோது, அந்த ஆயுதப் போராட்டத்தின் அரசியற் பரிமாணத்தை மேலோங்கச் செய்வதற்காக பாலா உழைத்தார். ஒருமுகச் சிந்தனையுடைய இவ்விரு தனிப்பட்ட மனிதர்களது உறவு மிகவும் அபூர்வமானது. வரலாற்று இயக்கத்தின் ஒரு முக்கிய காலகட்டத்தில், வெவ்வேறு ஆளுமையுடைய இரு மனிதர்கள் ஒன்றாக இணைந்து முக்கிய பங்குகளை வகித்துச் செயற்படும் அபூர்வமான உறவுகளில் இதுவும் ஒன்று.

பிரபாகரனதும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினதும் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும் செயற்படுவதே தனது பங்கு என



*1989 இல் அலம்பிலில் காட்டிலுள்ள 1-4 பாசறையில் அன்டன் பாலசிங்கம் தம்பதிகளுடன் பிரபாகரன்.*
*(படம்பிடித்தவர் கேணல் கிட்டு)*

பாலா எப்பொழுதுமே கருதிக் கொள்வார். பாலாவுக்கு அதிகார அபிலாசைகள் எதுவும் கிடையாது. எழுதுவது, கற்பிப்பது ஆலோசனை வழங்குவது போன்றவற்றுடன் தனது பங்களிப்பை அவர் வரையறுத்துக்கொள்வார். அத்தோடு உறுதி தளராத இலட்சியப்பற்றுள்ளவர். இவை காரணமாகவே பிரபாகரனின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக அவரால் பணிபுரிய முடிந்தது. உண்மை பேசும் நேர்மையான பண்பு பாலாவிடம் உண்டு. இப் பண்பியல்பு காரணமாகவே பிரபாகரன் பாலாவிடம் அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார். விடுதலைப் போராட்டத்தினதும பிரபாகரனதும் நலனைக் கருத்திற் கொண்டு, எப்பொழுதுமே எவ்விடயத்திலும் சரியான, உண்மை வழுவாத ஆலோசனை வழங்க வேண்டும் என்பதே பாலாவின் குறிக்கோள். தாம் மனம் நிறைந்து நேர்மையுடன் கூறுவது அவருக்கு வெறுப்பூட்டுமோ என்பது பற்றியெல்லாம் பாலா கவலைப்படுவதில்லை. பிரபாகரனின் ஆலோசகர் என்ற ரீதியில், எவ்வளவு கசப்பாக இருந்தபோதும் உண்மையை எடுத்துச் சொல்வதுதான் தனது கடமையென பாலா என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்.

பிரபாகரனின் தனிமனித இயல்புகளைப் பார்க்கும்போதுதான் அவரை ஆழமாக புரிந்து கொள்ள முடியும். வெளியுலகம் அவரை சித்தரிப்பதுபோல் அல்லாமல், மற்றவர்களுடன் எளிதில் பழகுவார். கூடிப்பழகி, உரையாடி மகிழ்கின்ற இயல்பு அவரது தனித்துவப் பண்பு. அவர் பல்வேறு விவகாரங்களில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர். சில விடயங்களில் தீவிரமான நிலைப்பாடுமுடையவர். ஒருசில விடயங்களில் எனக்கு அவருடன் கருத்து வேறுபாடு உண்டு.

விஞ்ஞான அறிவியற் துறையில் அவருக்கு அலாதியான ஆர்வமுண்டு. விஞ் ஞான, தொழிநுட்ப அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென அவர் அடிக் கடி போராளிகளை ஊக்கு விப்பதுண்டு. தமிழ்க் கலா சாரத்திலும் அவருக்கு ஆழமான பற்றுண்டு. போராட்ட வாழ்வு கலாசார வடிவங்களில் வெளிப்பட வேண்டுமென விரும்பும் அவர், இயக்கத்திலும் சமூக மட்டத்திலும் அதனை வலியுறுத்துவார். இராணுவ பயிற்சி முகாம்களில் கலைநிகழ்சி சிகளுக்கு முக்கிய இடம் கொடுப் பார். இந் நிகழுள்வுகளில் போராளி கள் நேரடியாக பங்களிக்க வேண்டு மென்பது அவரது அவா. விடுதலை விழுமியம்



சார்ந்த கலை, இலக்கிய படைப்புகள் தமிழீழத்தில் வளர்ச்சி காண வேண்டும் ஆர்வம் உடைய வர். இத்தகைய படைப்பு ஆக்கங் களை அவர் ஊக்குவித்தும் வரு கிறார்.

சுவையான உணவு வகைகளை உண்பதிலும் அவற்றைத் தயாரிப்பதிலும் அவருக்கு ஒரு தனி விருப்பு. இதனால் அவர் விசேடமான சுவைத்திறனை வளர்த்துக் கொண்டார். சுவைத்து உண்பது வாழ்க்கையின் அடிப்படை இன்பங்களில் ஒன்று என்பதும், சமைப்பது ஒரு கலை என்பதும் அவரது கருத்து. ஒரு சில மரக்கறி வகைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட எனது சுவையின்பத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அவரது இருப்பிடத்திற்கு எம்மை விருந்திற்காக அழைக்கும் போதெல்லாம் மிகவும் சுவையான மரக்கறி உணவு வகைகளை எனக்கென்று விசேடமாக ஏற்பாடு செய்வார். அவரது இருப்பிடத்திலிருந்து அடிக்கடி பாலாவுக்கு சுவையான உணவு வகைகள் தயாரித்து அனுப்பி வைப்பார். அப்பொழுது எனக்கும் மரக்கறி உணவு வரும். இப்படியான அவரது கவனிப்பால் எனது சமையல் சுமை குறைவதுண்டு.

போர்க்கலையில் பிரபாகரன் அபாரமான ஆற்றல் படைத்தவர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆயுதப் போராட்ட வாழ்வில் அவரை ஆழமாக ஈர்ப்பதும் வெறும் ஆயுதங்களோ, சீருடைகளோ, இராணுவத் தொழில் நுட்பங்களோ அல்ல. சீரான வாழ்க்கையை நெறிப்படுத்தும் சில போர்ப் பண்புகளை அவர் பெரிதும் மதிக்கிறார் என்பதே எனது கருத்து.

அவரது சமூக தத்துவார்த்தப் பார்வையிலும், இந்தப் பண்புகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்தப் போர்ப் பண்புகளில் முக்கியமானது ஒழுக்கம். பிரபாகரனது பார்வையில், வாழ்க்கை நெறிக்கு மையமான


கோட்பாடு ஒழுக்கம்தான். ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற பண்பு தான் அவரது தனிப்பட்ட வாழ்விலும், சமூகப் பார்வையிலும், இராணுவ - அரசியல் ரீதியான அவரது தலைமைத்துவத்திலும் மேலாண்மை செலுத்தி நிற்கின்றது.

தனது சொந்த வாழ்க்கையின் சகல பரிமாணங்களிலும் பிரபாகரன் ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிறைந்தவராக வாழ்ந்து வருகிறார். அவரது போராட்ட வாழ்வின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அவர் மீது ஒழுங்கீனம் பற்றியோ ஏதாவது அவதூறு பற்றியோ சிறிய சிலுசிலுப்புக்கூட ஏற்பட்டது கிடையாது. பிரபாகரன் ஒருபொழுதும் புகைத்தது கிடையாது. மதுபானம் அருந்தியதும் கிடையாது. மற்றவர்க ளிடமும் இப்பழக்கத்தை அவர் விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பில் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்ட ஒருவரை சகித்துக்கொண் டார் என்றால், அவர் பாலாவாக மட்டுமே இருப்பார். பாலாவின் வயதும் அவர் மீது வைத்துள்ள தனிப் பட்ட மரியாதையுமே இதற்கு காரண மாகும். எமது வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் உடல்நலத்தைக் கெடுக்கும் இந்த துர்ப்பழக்கத்தை பிரபாகரன் கேலியும் கிண்டலும் செய்வார். பாலாவிடமிருந்து வரும் சிகரட் நெடி பிரபாகரனுக்கு பிடிப்ப தில்லை. இதனால் பிரபாகரன் முன்னி லையில் சிகரட் பிடிப்பதை பாலா நிறுத்திக்கொண்டார்.

மனிதர்களிடம் வீரத்தையும் துணி வையும் போற்றுதற்குரிய பண்பாக பிரபாகரன் மதித்தார். தனது போராளி களிடம் மட்டுமன்றி, பொதுமக்களிட மிருந்தும் வீர உணர்வு வெளிப்பாடு கண்டால் அதனை அவர் போற்றிக் கௌரவிப் பார். வீரம் என்பது அவரது ஆளுமையில் ஆழப்பதிந்திருக்கும் ஒரு பண்பு. போராட்ட வாழ்வில் எந்தப்பெரிய சக்தியாக இருந்தா லும், எதைக்கண்டும் அஞ்சாத, கலங்காத குணாம்சம் பிரபாக ரனிடம் ஊறிப்போயிருக்கின்றது. எந்த ஒரு விடயத்திலும், எந்தவொரு இலட்சி யத்திலும் மனதை ஆழமா கப் பதிய வைத்து அக்கறையுடன் செயற்பட் டால் எதையும் சாதிக்க முடியும் என்பதில் பிரபாகரனிடம் அசைக்க முடியாத உறுதி இருக்கிறது. துணிந்த வனுக்கு வெற்றி நிச்சயம் என்பது பிரபாகரன் அடிக்கடி கூறும் தாரக மந்திரம்.

மனிதர்களிடம் வீரத்தையும் துணிவையும் போற்றுதற்குரிய பண்பாக பிரபாகரன் மதித்தார். தனது போராளிகளிடம் மட்டுமன்றி, பொதுமக்களிடமிருந்தும் வீர உணர்வு வெளிப்பாடு கண்டால் அதனை போற்றிக் கௌரவிப்பார். வீரம் என்பது அவரது ஆளுமையில் ஆழப்பதிந்திருக்கும் ஒரு பண்பு.

இன்னும் வரும்....




# சிங்கள அச்சாறு

(சிங்கள காய்கறி ஊறுகாய்)

**தேவையான பொருட்கள்:**

15-20 சின்ன வெங்காயங்கள்
10-15 சின்ன பச்சை மிளகாய்கள் (இரண்டாக நடுவில் வெட்டப்பட்டது)
2 பெரிய கரட் (சின்ன நீள் துண்டங்களாக வெட்டப்பட்டது)
1 சின்ன முள்ளங்கி (முக்கோண வடிவில் மெல்லிய துண்டங்களாக வெட்டப்பட்டது)
15-20 சின்ன ஹாலி பிளவர் மொட்டுக்கள் (இருந்தால்) (அரை காலிபிளவரை உதிர்த்தால் கிடைக்கும்)
2 கோப்பை வினிகர் (தேங்காய் வினிகர் இருந்தால் நலம்)
இஞ்சி தேவையான அளவு (இடித்தது)
2 தேக்கரண்டி கருப்பு கடுகு அரைத்தது
1 தேக்கரண்டி கறுப்பு மிளகு அரைத்தது
சிறிதளவு மஞ்சள்
உப்பு தேவைக்கேற்ப



**செய்முறை:**

ஒரு கோப்பை வினாகிரியை ஒரு சட்டியில் ஊற்றி சூடாக்கவும். வெங்காயத்தைச் சேர்த்து மெதுவான தீயில் வைக்கவும். வெங்காயத்தை வெளியே எடுத்து, இறுத்து, தனியே ஒரு பாத்திரத்தில் வைக்கவும். பச்சை மிளகாயை சூடான வினாகிரியில் சேர்த்து மெதுவான தீயில் சில நிமிடங்கள் வைக்கவும். வெங்காயம் கரட், ஹாலி பிளவர் ஆகியவற்றையும் இதனுடன் சேர்க்கவும். முள்ளங்கியை சூடாக்காமல் வெங்காயத்துடன் சேர்த்து சிறு துண்டங்களாகிக் கொண்டு எல்லாவற்றையும் கலக்கவும். மீதமிருக்கும் ஒரு கோப்பை வினாகிரியையும் சூடாகும் வினாகிரியுடன் சேர்த்து உப்பு, மஞ்சள், கடுகு, இஞ்சி, பூண்டு ஆகியவற்றை இந்த வினாகிரியுடன் சேர்த்து சிலநிமிடங்கள் கொதிக்க விடவும். இந்த சூடான வினாகிரி கலவையை வெங்காயம், காய்கறிக்கலவை மேல் ஊற்றி கலக்கவும். இதனை ஒரு போத்தலில் அடைத்து இரண்டு நாள் ஊற விடவும்.

ம
க்
க
ள்
க
ணி
ப்
பு

சந்தர்ப்பம், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு
பொய் பேசி மற்றவர்களை
நம்பவைப்பது/ஏமாற்றுவது

சரி : ☐
தவறு : ☐
புள்ளடி (X) இட்டுக் காட்டுங்கள்
காரணம் :
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

இங்கு தரப்பட்டுள்ள விடயம் குறித்து
உங்கள் முடிவும், கருத்தும் என்ன?
அணுக்கரு போல் இருக்கும்
எண்ணங்கள், கருத்துக்கள்,
கணிப்புக்கள் வெளிவரட்டும்

மக்கள் கணிப்பு
இலங்கை விகடன்
160, Thelankapatha Road, Wattala, Sri Lanka.




**1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி சென்னை வளரசரவாக்கத்தில் இந்திய பொலிசாரால் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த சி.பாலச்சந்திரன் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். இடைப்பட்ட காலப்பகுதியில் இவர் அனுபவித்த பயங்கர சிறை அனுபவங்களை இங்கு விபரிக்கிறார்.**

(கடந்த இதழ் தொடர்ச்சி)

அரசு செயலரால் உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட உறுதி மொழிக்கு மாறாக துறை யூர் சிறப்பு முகாமில் நான் சட்ட விரோதமாக கொடு மைப் படுத்தப்பட்டேன். ஒரு சிறிய செல்லில் மொத்தம் ஆறு பேர்களுடன் சேர்த்து அடைக் கப்பட்டேன். அச்சிறிய செல் 24 மணி நேரமும் பூட்டப்பட்ட

நிலையிலேயே இருந்தது. அதற் குள்ளேயே மலசலம் கழிக்க வேண்டும், சாப்பிட வேண்டும், உறங்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டேன்.

சிறையில் கைதிகளுக்கு சத்துள்ள உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், போர்வை, தரைவிரிப்பு, தலையணை, சோப், எண்ணை, சீயக்காய் தூள் என்பன வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல வாரமொரு தடவை இலவசமாக கார்ட் வழங்கி உறவினர் களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுகின்றது. மற்றும் பத்திரிகை, வானொலி, டெலிவிஷன், சினிமா போன்ற வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

மேலும் பகல் தவிர்த்து இரவு 12 மணிநேரம் மட்டுமே லொக்கப் செய்யப் படுகின்றது. பார்வையாளர்கள் பார்வையிடுவதற்கும் பொருட்கள் கொடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறையில் கைதி களுக்கு வழங்கப்பட்டிருக்கு' உரிமைகள், மற்றும் வசதிகள் கூட வழங்கப்படவில்லை. என்னையும் மற்ற சக அகதிகளையும் செல்களில் அடைத்து பூட்டி வைத்திருப்பதுடன் எமது செல்களுக்கு முன்னால் நவீன ஆயுதங்களுடன் போலீசார் காவல் புரிந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் சிறப்பு முகாம் நிர்வகிக்கப்படுவதாக கூறப்பட்டாலும் இம்முகாம்கள் காவல்துறை அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்படுகின்றதென்பது உண்மை.

உயர் அதிகாரிகள் அடிக்கடி விஜயம் செய்து சிறப்பு முகாமில் உள்ளவர்களின் குறைகளைக் கெட்டு நடவடிக்கை எடுப்பார்கள் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் தெரிவித்தார். ஆனால் எமது முகாம் பொறுப்பாளர் எனக் கூறப்படும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை ஒருமுறை கூட முகாமிற்கு வர வில்லை. அது மட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நாம் அனுப் பும் மனுக்களுக்கும் பதில் தருவதும் இல்லை. நடவடிக்கை எடுப்பதும் இல்லை.



இந்நிலையில் இவர்களின் சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்ட "சிவா" என்பவர் கரூர் நீதிமன்றத்தில் 17.10.94 அன்று இதுபற்றி வாக்கு மூலம் கொடுத்தார். அவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலத்தில் இருந்து சில பகுதிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதி லிருந்து எத்தகைய கொடுமையான முகாமில் வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

"21.12.93 அன்று உதவி ஆய்வாளர் அன்பழகன் தலைமையில் வெறிபிடித்த பொலிசார் கும்பலாகச்

சேர்ந்து என்னைத் தாக்கினார்கள். இதனால் என் கால்முறிந்தது. அன்று என்னை மட்டுமல்ல முகாமில் வைக்கப்பட்டிருந்த இன்னும் பலரையும் இவ்வாறு அடித்துத் துன்புறுத்தினர். அவர்கள் எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்பதைக் எழுதுவதற்கு என் கை நடுங்குகின்றது. அந்த அளவிற்கு கேவலமான முறையில் கொடுமை செய்தனர். கால் முறிந்து நடக்க முடியாமல் நான் வேதனைப்பட்ட போதும் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை. எனக்கு மருத்துவ சிகிச்சையும் தரப்படவில்லை.

இச்சிறப்பு முகாமில் தாய், தந்தை, பிள்ளைகளை பிரித்து அடைத்து வைத்துள்ளனர். இவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசுவதற்குக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறு தனியாக பிரித்து அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்களை தமது அதிகாரத்தைக் காட்டி மிரட்டி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துகின்றனர். இரவு நேரங்களில் மருத்துவ மனைக்கென அழைத்துச் சென்று வெளியே வைத்து தமது காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

இவ்வாறு போலீஸ் அதிகாரிகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் உயரதிகாரிகளிடம் நேரடியாக முறையிட்டும் மனுக்கொடுத்தும் இதுவரை இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது அரசு மற்றும் உயர் அதிகாரிகளின் சம்மதத்தோடும் ஆசீர்வாதத்தோடும் நடத்தப்படுகிறதென்றே நான் கருதுகிறேன்.

அத்துடன் இங்குள்ள சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. இந்நிலையில் "நோட்புக்", "பேனா", பாடப் புத்தகங்கள் எவற்றையும் சொந்தச. செலவில் பெற்று படிப்பதற்கும் அனுமதிக்கப்படவில்லை" என்று தனது வாக்குமூலத்தில் சிவா தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து போலீஸ் பொறுப்பில் இருக்கும் ஒரு முகாமில் என்ன நடக்கும் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும் என நம்புகிறேன்.

நீதி மன்றத்தில் ஒருவர் வாக்குமூலமாக இக்கொடுமைகளைத் தெரிவித்த பின்பும் கூட நீதிமன்றமோ அல்லது அரசோ இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிறப்பு முகாமில் பார்வையாளர்கள் அனைவரையும் பார்வையிடுவதற்கு அனுமதிக்க பேண்டுமென்று உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் "முகிலன்" என்பவர் என்னைப் பார்வையிட வந்தபோது அனுமதிக்கவில்லை.

இது தொடர்பாக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரடியாக மனுக்கொடுத்தும் அனுமதி வழங்கவில்லை. எனது வழக்கு ஒருங்கிணைப்பாளர் கணேசன் பார்வையிட வந்தபோது அனுமதிக்கவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் அனைவருக்கும் மனுக்கொடுத்தேன். ஆனால் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில் 21.7.94 அன்று இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கிற்காக ஆஜர் செய்யப்பட்டேன். அப்போதிருந்த நீதிபதி அவர்களிடம்,

"ஐயா, அகதி நிலையில் சிறப்பு-

முகாமில் வைக்கப்பட்டிருக்கும் எனக்கு சட்ட-விரோதமாக கைவிலங்கு, "லீடிங் செயின்" போட்டு அழைத்து வந்துள்ளனர். இவ்-வாறு போடக்கூடாதென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டி-ருந்தும், உயர்நீதிமன்ற உத்த-ரவை அவமதிக்கும் வகையில் இவர்கள் செயற்படுவதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்-டும். மேலும் சிறப்பு முகாமில் எவ்வித பொழுதுபோக்கு-மின்றி 24 மணி நேரமும் செல்லில் பூட்டி வைக்கப்பட்-டிருக்கிறேன். வெளியுலகுடன் எவ்வித தொடர்புமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்-கிறேன். என் கூடிகேஸ காரர்-களுடன் பேசுவதற்கு அனும-திக்கப்படவில்லை. என் வழக்-கறிஞருடன் கலந்தாலோசிப்-பதற்கு அனுமதிக்கப்பட-வில்லை. எனது வழக்கு ஒருங்கிணைப்பாளருடன் பேசுவதற்கு அனுமதிக்கப்பட-வில்லை. அதுமட்டுமல்ல, இவர்களுடன் நான் கடித மூலம் தொடர்பு கொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை. எனவே எனக்குரிய நீதியைப் பெறுவதற்கு உரிய வாய்ப்புகள் யாவும் மறுக்கப்பட்ட நிலை-யில் நான் வைக்கப்பட்டிருக்கி-றேன் என்பதைத் தாங்கள் புரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையு-டன் கேட்டுக் கொள்கி-றேன்" - என்றேன்.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனக்குரிய நீதியை பெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்-டியது இந்த மன்றத்தின் கடமையாகும். எனவே நீதி-யைப் பெறுவதற்கான வாய்ப்-புகள் மறுக்கப்பட்ட நிலையில் நான் வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்துகொண்ட இம்மன்றம் இது குறித்து தக்க நடவடிக்கைககள் மேற்-கொள்ளுமென்று நம்பினேன். ஆனால், திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவரின் பொறுப்-பில் சிறப்பு முகாம் நிர்வாகம் இருப்பதால் அது குறித்து விசாரிக்க இந்த மன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று பதில் தெரிவிக்கப்பட்டது.

எனக்கும் முகாமில் வைக்-கப்பட்டிருந்த சக அகதிகளுக்-கும் இழைக்கப்படும் கொடு-மைகள் குறித்து தடுத்து நிறுத்-தக் கோரி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் யாவருககும் மனுக் கொடுத்தேன். அதன்-பின் என்கது கிடைத்த வாய்ப்-பைப் பயன்படுத்தி நியாயம் கிடைக்க வழி செய்யுமாறு கோரி இந்த மன்றத்தில் தெரி-வித்தேன். எவ்வித பயனும் கிடைக்காததால் வேறுவழி-யின்றி 25.7.94 முதல் நானும் அடைத்து வைக்கப்பட்டிருக்-கும் சக அகதிகள் அனைவரும் கால வரையறையற்ற உண்-ணாவிரதம் மேற்கொண்-டோம். உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி போலீசார் எங்-களை மிரட்டினார்கள். காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் கூடிகூடி அடித்துக் கொள்-றால் ஏனென்று கேட்பதற்கு ஆளில்லாத அகதி நாய்✲✲ என்று என்னை தரக்குறை-வான வார்த்தைகளால் குறிப்-பிட்டு ஏசினார்.

மகாத்மா காந்தியை தேச பிதா என்று குறிப்பிடும் ஒரு நாட்டடில் நாம் எமது கோரிக்-கைகளை அறவழியில், அஹிம்சை வழியில் வலியுறுத்-தியபோது அரசு அதிகாரி ஒருவர் இவ்வாறு தரக்குறை-வாக கெட்ட வார்த்தைகளால் ஏசியும், மிரட்டியும் நடந்து கொண்டது

எத்தகைய சூழ்-நிலையில் நாங்கள் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை-யும், அரசு அதிகாரிகளினால், எப்படி நடத்தப்படுகிறோம் என்பதையும் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

நாம் இவ்வாறு கொடுமைப்ப-டுத்தப்படுவதையும் அதை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்து-வதையும் அறிந்த பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராம்தாஸ் அரசைக் கண்டித்தும் உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றி உண்ணாவிரதத்தை முடித்து வைக்-கும்படியும் கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு இளைஞர் பேரவை பொறுப்பாளர் முகிலன் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி தலைமை நீதிபதி, தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், தேசீய மனித உரிமை ஆணைக்குழு ஆகி-யோருக்கு தந்தி கொடுத்தார்.

அத்துடன் பத்திரிகைகள் மூலம் மக்களுக்கு, வெளியுலகத்திற்கு இச்சித்திரவதைக் கொடுமைகளை வெளிப்படுத்தினார். "மக்கள் உரி-மைக் கழகம்", "தமிழக ஒடுக்கப்-பட்டோர் விடுதலை இயக்கம்" எமக்கு இழைக்கப்பட்ட கொடுமை-களை கண்டித்தன. அகதியாக வந்த-வர்களை சிறப்பு முகாமில் அடைத்து சித்திரவதை செய்யும் அரசின் சுய-ரூபத்தை அம்பலப்படுத்தினர். 14 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டோம். இறுதியாக சில உரிமைகள் தருவதற்கு அரசு உறுதிய-ளித்ததால் 14 ஆம் நாள் தாசில்தார் முன்னிலையில் எமது உண்ணா-விரதத்தை முடித்துக்கொண்டோம்.

ஆனால் கொடுத்த உறுதி மொழியை காப்பாற்றாமல் வழக்கம்-போல் அரசு ஏமாற்றிவிட்டது. இந்-நிலையில் எனக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் குறிப்பிட்டும், நேரில் வந்து பார்வையிட்டு இவற்றைத் தெரிந்து கொள்ளும்படி கோரி "தேசீய மனித உரிமை ஆணைக்குழு", "உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி" ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பினேன்.

அது மட்டுமல்ல அமெரிக்கத் தூதுவர், பிரிட்டன் தூதுவர், நோர்வே தூதுவர், டென்மார்க் தூதுவர், சுவிட்சர்லாந்து தூதுவர், ஜப்பான் தூதுவர், இலங்கைத் தூதுவர் ஆகியோருக்கும் இவற்றைத் தெரியப்-படுத்தி எனக்கு நியாயம் கிடைக்க உதவி செய்யுமாறு கோரினேன். ஆனால் எவ்வித பயனும் கிடைக்க-வில்லை. மாறாக கொடுமைகள், சித்திரவதைகள், பழிவாங்கல், நட-வடிக்கைகள் தொடர்ந்தன.




**ஒருவர்:**
போட்டோகிராபி தொழிலில் முன்னேற அவசியமானது எது? திறமையா? அதிர்ஷ்டமா?

**மற்றவர்:**
இரண்டும் இல்லை. கமெராதான்.

# உயர்ந்தவர்



உயர்ந்த மனிதன் எனும்போது நாம் சாதாரணமாக எண்ணுவது குணத்தால், சிந்தனையால் உயர்ந்தவர்களேயாகும். ஆனால் இங்கு வித்தியாசமாக உடலமைப்பால் உயர்ந்து மக்களை கவர்ந்திருப்பவர் துரிசியா நாட்டைச் சேர்ந்த ராட்கோனி சாபிப். இவருடைய உயரம் 2.359 மீற்றர் ஆகும். அதாவது எட்டு அடிக்கு 0.1 அங்குலம் குறைவாகும். இவருடன் அருகில் நிற்பவர்கள் சாதாரண உயரம் கொண்ட (5.5 அங்குலம்) மொடல்ஸ்.

# இலவச விளம்பர சேவை

## வீடு விற்பனைக்கு மற்றும் வீடு வாடகைக்கு

நிபந்தனைகள்:

*வாசகர்களின் நலன்கருதி இலவச மாக வெளியிடப்படும் இப்பகுதியில் தவறான தகவல்கள் வழங்குவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும்.

*இப்பகுதிக்கு கிடைக்கப்பெறும் விளம்பரத்தின் நம்பகத்தன்மையில் சந்தேகம் ஏற்படின் அதன் மீது பிரசு ரத் தடை பிறப்பிக்கும் உரிமை இலங்கை விகடன் நிர்வாகத்திற்கு உண்டு.

*தரகர்கள் கொடுக்கும் விளம்பரங் கள் இப்பகுதியில் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது.

*வீடு விற்பனை செய்வோர், வீடு வாங்கு வோர் அல்லது வாடகைக்கு குடியேறு வோர் அல்லது வாடகைக்கு விடுவோர் இடையேயான பரஸ்பர நடவடிக்கைக ளுக்கு இலங்கை விகடன் பொறுப்பேற்க மாட்டாது.

**கூப்பனை பூர்த்தி செய்து கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பவும்:**

வீடு வாடகைக்கு மற்றும் வீடு விற்பனை இலவச சேவை
**160, Thelankapatha Road, Wattala.**

**வீடு விற்பனைக்கு மற்றும் வீடு வாடகைக்கு இலவச சேவை நிபந்தனைகளுக்கு இணங்கி கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கும் தகவல்கள் உண்மையானவை.**

கையொப்பம் அடையாள அட்டை இல. திகதி

பெயர்: ..........

தொழில்: ..........

முகவரி: ..........

**வீடு விற்பனைக்கு:**

முகவரி: ..........

மதிப்பு: .......... அறைகள்: ..........


தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே.இல.: ..........

**வீடு வாடகைக்கு:**

முகவரி: ..........

மதிப்பு: .......... அறைகள்: ..........

தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே.இல.: ..........



c
i
n
e
corner



சினிமா கவர்ச்சி மாயைக்குள் ரசிகர்களை சிக்கவைத்து திணறடிக்காமால் நவநாகரிக உடைகளில் தோன்றி ரசிகர்களை மட்டுமல் லால் ரசிகைகளையும் தன்பக்கம் ஈர்த்தவர்தான் நடிகை நதியா.

சினிமாவில் மிகவும் பிரபலமாக இருந்த போதே வங்கி அதிகாரியான

# மீண்டும் நதியா

சிரிஷ் என்பவரை மணம் முடித்து கணவருடன் லண்டனில் குடியேறினார்.

சிலவருங்களுக்கு முன்னர் பிரபுவின் 100 ஆவது படமான ராஜகுமாரனில் நடிப்பதற்காக சென்னை வந்தவர், வந்த வேலை முடிந்த கையோடு லண்டன் திரும்பி விட்டர்.

தற்போது லண்டன் பீ.பீ.சியில் செய்தி வாசிப்பாளராக கடமை புரியும் நதியா, பிரபல இயக்குனர் ஒருவர் தயாரிக்கும் தமிழ்ப்படத்தில் நடிப்பதற்காக விரைவில் சென்னை வரவுள்ளார்.

# தனுஷ் + சூரியா



# AVM

ஏ.வி.எம். நிறுவனம் ஒரே தடவையில் இரண்டு படங்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. ஒரு படத்தில் சூரியாவும் மற்றொரு படத்தில் தனுஷும் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார்கள்.

குடும்பப்பாங்கான வேடங்களில் அசத்தி வந்த விந்தியா "வயசுப்பசங்க "படத்தில் எள் என்றால் எண்ணையாக உருகி கவர்ச்சி காட்டி வருகிறார் .

"ஒரு காலத்தில் ஊமைப்படம் வந்தது. பிறகு பேசும்படம் வந்தது. அதைத்தொடர்ந்து கலர்ப்படம் வந்தது. தற்போது கிராபிக்ஸ் காலமாகி விட்டது. சினிமாவில் எத்தனை மாற்றங்களாகி விட்டன். அதற்கு ஏற்ப நடிகைகளின் நடிப்பு தன்மையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒருகாலத்தில் குடும்பப்பாங்காக நடித்தார்கள்.கிப்போது கவர்ச்சி வேடத்தில் நடிக்காத நடிகைகளே இல்லை. காலத்திற்கு ஏற்ப நானும் மாறிவிட்டேன்."என காதில் பூ சுற்றுகிறார் நடிகை விந்தியா.





# மனம் குணம் மாறி

விந்தியா

# இனிதே நிறைவேறிய சிம்ரனின் திருமணம்

தமிழ் ரசிகர்களின் கனவு நாயகி சிம்ரன், தனது நீண்டநாள் நண்பர் தீபக்கை திருமணம் செய்து கொண்டார். இத் திருமணம் மும்பை அந்தேரி பகுதியில் உள்ள தாரிணி மஹாலில் பஞ்சாபி முறைப் படி நடந்தது. திருமணத்தில் சிம்ரன் தனது இரு கைகளிலும்



முன்பே திருமணச் சடங்குகள் துவக்கப்பட்டன. இரவு சரியாக 8 மணியளவில் திரு மணம் நடந்தேறியபின்னர் மணமக்கள் டில்லியிலுள்ள தீபக் கின் இல்லத்திற்குப் புறப் பட்டுச் சென்றனர். உற வினர் இல்லங் களுக்குச் சென் றபின்னர் இரு வரும் தேனி லவுக்காக சுவிட் சர்லாந்து சென்றனர்.

மருதாணிகடந்த 17 வருடங்க ளாகவே
வைத்துக்கொண்டுதீபக்கை சிம்ரனுக்குத் தெரியும்
அழகுப் பதுமையாகக் காட்சிஎன்று கூறப்படுகிறது. சிம்ரன்
யளித்தார். பஞ்சாபி திருகடைசி வரை தனது திருமண
மணம் கிட்டத் தட்ட ஒரு வாரநாளை ரகசியமகாவே வைத்
காலம் நடக்கும் என்பதால்,திருந்தது குறிப்பிடத்தக்கது. சிம்ர
சிம்ரனுக் கும் ஒரு வாரத்திற்குனின் திருமணத்திற்கு நெருங்கிய

நண்பர்கள் மட்டுமே அழைக்கப் பட்டிருந்தனர். ஹோலி வுட் மற்றும் பொலிவுட்டினர் யாருமே திருமணத்திற்கு அழைக்கப்பட வில்லை. விதிவிலக்காக இயக்குனர் எஸ்.ஜே சூர்யா மற்றும் சிம்ரனின் மானேஜர் மட்டும் அழைக்கப்பட்டிருந்தனர். நடிகை சிம்ரனின் பயணம் முடிந்தாலும், கதாசிரிய ராகவோ, இயக்குன ராகவோ அவர் பயணம் செய்யலாம்.





## மன்மதராணி

திருடா திருடி படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகமான சாயா சிங் அந்தபபடத்தில் இடம் பெற்ற மன்மதராசா"பாடலில் தனு ஷிற்கு இணையாக நடன மாடி ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பினைப்பெற்றார். இருந்த போதிலும் தமிழைப்பொறுத்த மட்டில் அவருக்கு பெரிய அளவில் பட வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இந்த நிலை யில் இப்பொழுது புதிய பட வாய்ப்புகள் சம்பந்தமாக இயக்குனர்களை சந்தித்து வருகி றார். ஆனால் நடிகை சயா சிங்குக்கு இப்பொழுது இருக்கும் பரபரப்பை கருத்தில் கொண்டு அவரை முழுகவர்ச்சி நடிகை யாக்கி விட வேண்டும்என்று சிலர் முயர்ச்சிப்பதாக தகவல் கள் தெரிவிக்கின்றன.

# 'பிதாமகன்' இயக்குநர் பாலா ஆவேசம்

பிதாமகன் படம் குறித்து தரக் குறைவாக விமர்சனம் செய்ததாக சண் தொலைக் காட்சிநிறுவனத்தின் மீது பிதாமகன் படத்தின் இயக்குனர் பாலா புகார் கூறியுள்ளார். பிதா மகன் படம் பற்றி முதல் வாரத்தில் சண் தொலைக்காட்சியில் பிரமாத மாக தொடர்ந்து விமர்சனம் செய்தார்கள். சம்பந்தப்பட்ட தயாரிப் பாளர் விநியோகஸ்தர்களை தங்கள் பக்கம் இழுப்பதற்காக இதுபோல் செய்திருக் கிறார்கள். பின்னர் அவர்களை அழைத்து படத்தை குறைந்த விலைக்கு கேட்டிருக் கிறார்கள்.





அந்த வியாபாரம் சரிவராத பட்சத்தில் பிதா மகனைப் பார்த்து குழந்தைகள் பயப் படுகிறார்கள். பெண் கள் எழுந்து ஓடுகிறார்கள். படப் பெட்டி திரும்பி வந்து விட்டது என்று விமர் சிக் கிறார்கள். அதை கண்டித்து நான் பேட்டி கொடுக்க நினைத்த போது என்னிடம் கூறினார்கள் அடுத்த வாரம் இது போல் விமர்சனம் வராது என்று. ஆனால் அடுத்த வாரம் பிதாமகன் படத்தை முதலிடத்திலி ருந்து எடுத்து இரண்டாவது இடத்திற்கு தள்ளிவிட்டார்கள்.

இப்படத்தை முதலில் நன்றாக விமர்சித்தவர்கள் அடுத்த வாரம் தரக் குறைவாக விமர்சிக்க காரணம் என்ன?, இரவு பகல் பாராமல் ஆயிரக் கணக்கானவர்கள் இப் படத்தை உருவாக்க காட்டிலும் மேட்டிலும் அலைந்து கஷ்டப்பட்டிருக்கிறோம். சினிமா வைத்தான் சன் தொலைக் காட்சி பிரதானமாக கொண்டு செயல்ப்படுகிறது.

இப்படத்தை பொறுத்தவரை திரை யிட்ட எல்லா தியேட்டர்களிலும் மக் கள் ஆதரவுடன் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. கேரளாவில் முந்தைய படவசூலை தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. இப்படி இருக்கும் போது நியாயமான விமர்சனத்தை நான் ஏற்க தயாராக இருக்கிறேன். ஆனால் ஏன் இப்படத்தைத் தரக்குறைவாக விமர்சிக்க வேண்டும். அதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்கும் வரை நான் நேரடியாக போராட்டத்தில் ஈடு பட முடிவுசெய்திருக்கிறேன்.

என் தலையில் ஒரு குட்டு குட்டினால் நான் இரண்டு குட்டு குட்டுவேன். நான் எடுக்கவுள்ள சட்டரீதியான நட வடிக்கைக்கு சினிமா துறை யினர் ஆதரவு தரு வார்கள் என நம்புகின்றேன் என்று இயக்குனர் பாலா தெரி வித்துள்ளார்.

## பாலாவேசம்

## பாலா ஆவேசம்

## இயக்குநர் பாலா ஆவேசம்

## 'பிதாமகன்' இயக்குநர் பாலா ஆவேசம்

# ஹொலிவூட் நடிகர் ரிச்சட்

# புகழாரம்




பிரபல ஹொலிவூட் நடிகர் ரிச்சட் ஹியர் அண்மையில் சென்னை வந்திருந்த போது போயர்ஸ் தோட்டத்திலுள்ள ரஜினிகாந்தின் வீட்டிற்குச்சென்று இரண்டு மணி நேரம் உரையாடினார்.ரஜினியின் வீட்டிலேயே மதியஉணவையும் எடுத்துக்கொண்டார். தன்னம்பிக்கையும் செயல்திறனும் மிக்கவர்கள் எங்கிருந்தாலும் அவரைச்சந்திப்பது எனது வழக்கம். அந்த வகையில் ரஜினியைச்சந்தித்தேன் என்று பின்னர் பத்திரிகையாளரிடம் ஹொலிவூட் நடிகர் ரிச்சட் கூறினார்.



# KSR இன் இடத்தை பிடித்தார் Hari

முன்பொரு காலத்தில் எந்தளவுக்கு பிஸியான இயக்குனராக கே.எஸ்.ரவிக் குமார் இருந்தாரோ அதேபோல் இப் பொழுது இயக்குநர் ஹரியும் பரபரப்பாக இயங்கி வருகிறார். ஹரி இயக்கும் படத்தில் விக்ரம் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## Catching Corner
**160, Thelangapatha Road,**
**Wattala, Sri Lanka.**



மஸ்கெலியாவில் இருந்து
பெ.லோகேஸ்வரன்
அனுப்பிய புகைப்படம்

*புகைப்படப் பிடிப்பாளர்களே!*

இந்த பக்கம் உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. உங்கள் கமெரா கண்களுக்குள் சிக்கி உங்களை ஆச்சரியப்பட வைத்த அந்த ஒரு புகைப்படத்தையும் உங்களது சிறிய அளவிலான புகைப்படத்தையும் பதிவுத் தபாலில் அனுப்பி வையுங்கள். புகைப்படங்கள் பிரசுரமான பின்னர் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.


GANESH Textiles
(PRIVATE) LIMITED
The Leading Textile Showroom in City
81-83, MAIN STREET, COLOMBO-11
PHONE: 2325128, 2343078
X-Mas
Grand Sale
NOW ON!
புத்தாண்டின் புதுமணம் கமழும் ஆடை தெரிவுகளில்....
இல்லத்தரசிகளின் உள்ளத்தை என்றுமே அலங்கரிப்பதில் முன்னணியில்....

ILANGAI VIKADAN Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/98/News/2003

